

# புது வெளிச்சம்

(தன்னைத் தானறிய)

கவிஞர் வெள்ளியங்காட்டான்

**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

✱✱✱

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

✱✱✱

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# புது வெளிச்சம்

(தன்னைத் தானறிய)

கவிஞர் வெள்ளியங்காட்டான்

யதி வெளியீடு
அரசமர வீதி, ஆவராம்பாளையம், கோவை - 6.

♦ புது வெளிச்சம் (தன்னைத் தானறிய)
♦ முதற்பதிப்பு : டிசம்பர் 2006
♦ ஆசிரியர் : கவிஞர் வெள்ளியங்காட்டான்
♦ உரிமை : வெ.இரா. நளினி

♦ வெளியீடு : என். மகேந்திரன்
யதி வெளியீடு, அரசமர வீதி,
ஆவராம்பாளையம், கோவை - 641 006.
தொலைபேசி : 0422 - 2561015

♦ நூலின் அளவு : டெம்மி 1/8
♦ தாள் : 18.6 Puff
♦ பக்கங்கள் : x + 126 + 4 = 140

♦ அச்சும் அமைப்பும் :
திலகா ஆப்செட் பிரஸ்
169-ஏ, 6வது வீதி நீட்சி, காந்திபுரம்,
கோவை - 12. ✆ 252 3205, 252 6005
e-mail:nandhinipathippagam@yahoo.co.in

♦ விலை : ரூ.60/-

## சமர்ப்பணம்

*என் தந்தையின் எழுத்திற்கு*
*துணையாய், தூணாய்*
*தோழியாய், துணைவியாய் நின்ற*
*என் அருமைத் தாய்க்கு...*

# மெய்ப்பொருள் விளக்கம்

• *கவிஞர் புவியரசு*

**பு**ரட்சிக் கவிஞராய்ப் புறப்பட்ட வெள்ளியங்காட்டான் அவர்களின் இன்னொரு பரிமாணம் இந்த நூல். மதப் போர்வை போர்த்துக் கொண்டு உலவும் பல புராதனச் சொற்களுக்கு, மதச் சார்பற்ற, கடவுள் சார்பற்ற, புதிய விளக்கங்களை, உண்மையான தத்துவ விளக்கங்களை, கவிஞர் தமது வடமொழிச் சாத்திரப் புலமை கொண்டு இந்நூலில் விளக்கியிருக்கிறார்.

இதுவரை சமயச் சார்பாகவே பார்த்து உணர்ந்து பழக்கப்பட்டவர்களுக்கு இப்புதிய மெய்விளக்கம் அதிர்ச்சி தருவதாகச் கூடத் தோன்றலாம். ஆனால், கவிஞர் உயர்த்திப் பிடிக்கும் மெய்விளக்கின் முன்னே, பல்லாயிரம் ஆண்டின் பொய்மை இருள் பறந்தோடிப் போய்விடுகின்றது.

'ஓம் தத் சத்' என்பது நாம் அடிக்கடி கேள்விப்படும் ஒன்றுதான். 'எதையறிந்தால் எல்லாம் அறிந்ததாகுமோ, அல்லது எல்லா நூல்களிலிருந்தும் எதுவொன்றே அறியத் தகுந்ததாகுமோ அதுவே 'ஓம் தத் சத்' என்று பூச்சுகளற்ற மெய்ப்பொருளை உணர்த்துகிறார் கவிஞர்.

'உள்ளத்துக்குப் புறம்பாக எந்தவொரு தெய்வமும் இல்லை', என்பது ஆசிரியரின் தெளிவு. மனிதரும், விலங்குகளும், பறவைகளும், புழுப் பூச்சிகளும், தாவர வர்க்கமும் சும்மா அழிந்து போவதில்லை. தம்மைப் போல் சிலவற்றைப்

படைத்துவிட்டே மாய்ந்து போகின்றன. இதுவே 'புனர்சென்மம்' வழக்கமாகச் சொல்லப்படும் பொருள் முழுப் பொய்' என்கிறார் ஆசிரியர்.

எங்கும் பரவலாகப் பேசப்படுகிற 'பிரார்த்தனை' பற்றிக் கூறும்போது, 'பிரார்த்தனை செய்து காரியம் சாதித்துக் கொள்வதற்கேற்ற உணர்வுடைய ஒரு தெய்வம் பிரபஞ்சத்தில் இருப்பதாக நினைப்பது ஒருவித பிரமை. அதாவது அறியாமை. உபநிசத்துக்கள் இந்த மாதிரியான ஒரு தெய்வ மிருப்பதை ஒத்துக் கொள்வதில்லை', என்கிறார்.

பலப்பல சமயத் தொடர்களுக்கு மெய்விளக்கம் தருவதற்கு, ஏராளமான உபநிடதங்களையும், சமய சாத்திரங்களையும், தமிழ் நூல்களையும் ஆதாரமாகக் கொண்டு மேற்கோள் காட்டுகிறார். 'சோதிடம் சுதந்திர மக்களுக்கு மாட்டப்பட்ட விலங்கு' என்பது கவிஞரின் தெளிவான முடிவு.

கவிஞர் தமது கவிதைகளில் காட்டிய கோபம் இந்த ஆய்வு நூலிலும் புலப்படுகின்றது. பழைய பொய்மைச் சித்தாந்தங்களின்மீது தமது கனலை உமிழும் கவிஞர், அவற்றையெல்லாம் தூக்கிக் குப்பைக் கூடையில் வீசி எறியுங்கள் என்கிறார். அறிவியல் பார்வையும், விசாலமான சமய நூலறிவும், உண்மையை உரக்கச் சொல்லும் துணிவும், காலத்திற்கேற்ற சிந்தனையும் கொண்டு படைத்துள்ள இந்த 'புது வெளிச்சம்' என்ற ஆய்வு நூல், நம் சிந்தைக் குழப்பத்தைத் தெளிவுபடுத்தும் அரிய படைப்பு.

'கவியைக் கெடுத்தது காசுப் பாட்டு. செவியைக் கெடுத்தது சினிமாப் பாட்டு. புவியைக் கெடுத்தது புரோகிதன் பாட்டு' என்ற கவிஞரின் சாட்டையடி போலவே சூடாக இருக்கிறது நூல்.

■

# முகவுரை

உபநிசத்துக்கள், இதிகாசங்கள், சங்க இலக்கியங்கள் போன்ற இன்னும் பலப்பல இனியன, இன்னாதன என மூத்தோர்கள் கோர்த்த முத்துக்கள் அனைத்தும் மானிட வர்க்கத்தை உய்விக்கவே.

இன்றைய இளைய தலைமுறைக்கு, 'பழையன கழிதலும், புதியன புகுதலும்' என்பதற்கேற்ப அவைகளை எல்லாம் கண்டுகொள்ள விருப்பமற்றுப் போய்விட்ட காலகட்டத்தில், மீண்டும் உபநிசக் கருத்துக்களைப் புதிய தலைப்புகளில் ஒரு புதிய கண்ணோட்டத்தோடு இன்னும் சொல்லப் போனால் இதுவரை தமிழில் யாரும் எழுதாத முறையில் மக்களின் விழிப்புணர்வுக்காகவே பொட்டில் அறைவது போன்றதொரு விளக்கங் களோடு, 'புது வெளிச்சம்' என்ற தலைப்பில் என் தந்தை நூலாக்கித் தந்திருக்கிறார்.

இதை மூத்த அறிஞர்களில் சிலர் மட்டுமே பார்க்கக்கூடும், விவாதிக்கக்கூடும். பிறகு அந்நூல்கள் ஏதோ ஒரு மூலையில் உறங்கிவிடவும் கூடும். மற்ற நல்ல நூல்களைப் போலவே !

ஆயினும், ஒரு அசுர நம்பிக்கை...! அணுகுண்டால் முற்றிலும் அழிவுற்ற ஜப்பானை, இறந்துபட்ட ஆத்மாக்களின் நினைவுகளோடு, பேரெழுச்சியோடு, உறுதியோடுகூடிய, ஒன்றுபட்ட அயராத உழைப்போடு, இனி என் நாட்டின் மீது

எவரும் கைவைக்கமுடியாது என்ற பெருமிதத்தோடு மக்கள் செப்பனிட்டது போன்றதொரு அதிசயம் நம் நாட்டிலும் நிகழக் கூடுமல்லவா?

மேற்கத்திய நாகரிக மோகத்தில், பண்பாட்டுச் சிதைவில் ஒழுக்கம் நலிவுற்று, உடல் மெலிவுற்று வீழ்ச்சியை நோக்கிச் செல்லும் நம் இளைய தலைமுறைக்கு, வானை வளைக்கும் விஞ்ஞானம், வளரும் பொருளாதாரம், பணத்தை சம்பாதிக்க மட்டும் கற்கும் கல்வி என இவைகளின் பயன்தான் என்ன?

எந்தவொரு மகத்தான வளர்ச்சியும் மனிதகுல மேம்பாட்டுக்காக எனில், இவைகளினால் உண்மையான அமைதியும், ஆனந்தமும் இன்று மனித குலத்திற்குக் கிடைத்திருக்கிறதா?

மேல்தட்டு, நடுத்தர, கீழ்த்தட்டு என்றும், மதம், இனம், மொழி என்றும் பாகுபாடின்றி சமதர்மமாக, நம்மை வளைத்துக் கொண்டிருக்கும் அருவருக்கத்தக்க பல கொடுமையான நோய்களின் புகலிடமாக, முதலிடமாக திகழும் நம் நாடு, அழிவின் எல்லைக்குச் சென்று கொண்டிருப்பதை நாம் அறிவோமா? அறிந்திருந்தால் அதுவும் ஒரு - பேரழிவிற்குப் பிறகு, எழுச்சியோடு பிறக்கும் புதிய யுகத்தில், புதிய உதயத்தில் நம் பண்பாடுகளும், ஒழுக்கங்களும் உயிர்பெற்று எழும். அன்று, தெளிந்த ஆக்கப்பூர்வமான கருத்துக்கள் நடைமுறை வாழ்விற்கு ஏற்புடையதாகவும் இருக்கும்.

அன்று நல்ல இலக்கியங்கள் தூசு தட்டி எடுக்கப்படும். மனித குலம் அதை இதயத்தில் பதித்து புதிய பாரதத்தை உருவாக்கும்.

**சத்தியம் என்றும் அழிவதில்லை**
**உண்மைக்கு என்றும் தோல்வியில்லை.**
**நல்லவைக்கு என்றும் சாவில்லை**

எனவே நல்ல இலக்கியங்களை உருவாக்கிக் காத்திருப்போம். புதிய பாரதத்தைக் காண...

வெ.இரா. நளினி

# மொழியும் நூலும்

• கவிஞர் வெள்ளியங்காட்டான்

- ❈ மொழியின் ஆக்க சக்தி, பேச்சிலோ கருத்துப் பரிமாற்றத்திலோ செய்தித்தாள்களின் அளவிலோ அடங்கி விடுவதல்ல. அகம் புறம் என அனைத்தையும் ஆய்ந்தறிந்த, அழகும் ஆளுமையும் உள்ள நூல்களாக அமைந்து நம் எதிர்கால மக்களுக்கு வைப்புநிதியாக்கி வைப்பதில்தான் மொழியின் வளர்ச்சியும் வாழ்வும் உள்ளது.
- ❈ நாம் நிலத்தைப் பயன்படுத்தி உரமிட்டு விதைத்து விளைந்த தானியம் நமக்கு உணவாவது போன்று நமது மொழியும் நூலும் நமக்குப் பயன்பட வேண்டும்.
- ❈ எழுதி அச்சிட்டு வெளியிடப்படும் ஒவ்வொரு நூலும், உடலில் உடையில் உள்ள அழுக்கை நீக்கும் சோப்பைப் போல், உள்ளத்தின் எல்லா அழுக்கையும் நீக்குவதாக அமைதல் வேண்டும்.
- ❈ காசைத் தேடுவதற்கான நூல்களுக்கு மட்டுமே ஒரு மொழி இடம் கொடுப்பதாயின், அம்மொழி மாசுபடிந்ததாகிவிட்டது என்று பொருள்.
- ❈ நான் என் வாழ்வை மிகச் சரியானது எனப்படும் ஒரு நல்ல குறிக்கோளை நோக்கித்தான் இயக்கிக் கொண்டிருக்கிறேன். இதில் என் கவலை எல்லாம் அதைச் சென்று அடைய முடியவில்லையே என்பதல்ல. செல்லும் வழி எக்காரணத்தைக் கொண்டும் தவறிவிடக் கூடாதே என்பதுதான்.

■

# நன்றியுரை

'நீங்கள் நினைப்பதை இன்று சொல்லாவிட்டால் நீங்கள் நினைக்காததை நாளை சொல்லும்படியாகிவிடும்' என்ற அறிஞரின் வாக்குக்கேற்ப நல்ல சிந்தனைகளைக் காலத்தே மக்களிடம் கொண்டு சேர்க்காவிட்டால், பிற்போக்கான கருத்துக்களும் செயல்பாடுகளும் அவர்களிடம் வேரூன்றிவிடும் என்ற உண்மையை இன்றைய சமுதாயம் நமக்குச் செவ்வனே அறிவுறுத்திக் கொண்டுள்ள இந்த நேரத்திலும் நாம் சொல்லத் தாமதம் செய்வோமேயானால் அதன் முடிவு...?

என் தந்தை எழுத்தைத் தம் வாழ்வின் வேராகவும், தமது சுவாசமாகவும் கருதியவர். இலக்கியம் என்பது சமூகத்தின் மனசாட்சியாகவும், மனித குலத்தின் ஆன்மாவாகவும் இருக்கிறது என்ற கருத்தியலோடு வாழ்ந்தவருங்கூட.

அவரின் படைப்புகள் மக்களைச் சென்றடைய வேண்டும் என்ற அவரின் அவா, இறுதி மூச்சு வரை நிறைவேறாமல் போனது. அவரின் மறைவிற்குப் பின் வெளிவந்த 'வெள்ளியங்காட்டான் கவிதைகள்', 'கவியகம்', 'நீதிக்கதை'களைத் தொடர்ந்து யதி வெளியீடாக 'புது வெளிச்சம்' வெளிவருகிறது.

எந்தவித எதிர்பார்ப்புமின்றி முதல் விதையை ஊன்றி ஊக்குவித்து உதவிய மதிப்பிற்குரிய கவிஞர் புவியரசு அவர்களையும், பாவலர் இரணியன் அவர்களையும் நன்றியுடன் நினைவு கூறுகிறேன்.

சற்று சிதிலமடைந்த இப்படைப்பை சிரமத்தின்பாற்பட்டும், மிகுந்த ஈடுபாட்டுடனும் உழைத்து அச்சிலேற்றிய அருமை மைந்தர்களுக்கும், இதைத் தமது சொந்த நூலாகக் கருதி அழகாக அச்சிட்டு வழங்கிய திலகா ஆப்செட் பிரஸ் வேனில் அவர்களுக்கும், சிறந்த கருத்துக்களைத் தந்து உதவிய கவிஞர் தங்க. முருகேசன் அவர்களுக்கும், மற்றும் என் அன்புப் புதல்வனும், புதல்வியுமாகிய 'ராதா மகேந்திரன்' அவர்களுக்கும் என் இதயம் கனிந்த வாழ்த்துக்களையும் நன்றிகளையும் உரித்தாக்குகிறேன்.

அன்புடன்
வெ.இரா. நளினி

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | ஓம் தத் சத் | 1 |
| 2. | 'ஓமித் யேகாட்சம் பிரம்மம்' | 5 |
| 3. | உத்கீதம் | 9 |
| 4. | ரிதம் | 12 |
| 5. | அந்ருதாத் சத்யமுபைமி | 17 |
| 6. | சத்யமேவ ஜயதே | 22 |
| 7. | தவம் | 27 |
| 8. | சுவர்க்கம் | 31 |
| 9. | கோவில் | 36 |
| 10. | தியானம் | 44 |
| 11. | தியாகம் | 50 |
| 12. | புனர் ெசனனம் | 54 |
| 13. | கர்ம சித்தாந்தம் | 60 |
| 14. | அதிதி தேவோ பவ | 65 |
| 15. | சமத்வம், சகோதரத்வம், சுதந்திரம் | 71 |
| 16. | பராதீனம் | 76 |
| 17. | சுயாதீனம் | 83 |
| 18. | பிரார்த்தனை | 87 |
| 19. | பரோச்சம் | 92 |
| 20. | அபரோச்சம் | 97 |
| 21. | மூன்று அக்கினிகள் | 101 |
| 22. | ஜோதிசம் | 108 |
| 23. | கோள்களும் நாள்களும் | 115 |

# 1

## ஓம் தத் சத்

உலகில், வாழப்பிறந்த மனிதன் இளமையிலேயே கற்பன கற்று, அறிவன அறிந்து வயது வந்ததும் நுகர்வன நுகர, ஒத்த இயல்பினை யுடைய ஒருத்தியை மணந்து இல்லற வாழ்வைத் தொடங்குதல் தவிர்க்க இயலாதது. கூடவே தான் இனிச் சாதித்துத் தீரவேண்டிய குறிக்கோள் ஒன்றையும் அவசியம் தன் உளத்தில் ஓர்ந்து தேர்ந்தெடுத்து உறுதிப்படுத்தி வைத்தொழுகுதலும் தவிர்க்க இயலாததே.

"குறிக்கோளில்லாத வாழ்வு பண்டமில்லாத பாத்திரம், அல்லது பயன்படுத்தப்படாத பாத்திரத்திலிட்ட பண்டம் போன்றதே என்பர் அறிஞர், ஏயால துரைசாமி என்னும் கன்னடக் கவிஞர். ஓர் இலந்தை மரத்தின்

வாயிலாய்க் இக்குறிக்கோளின் அவசியத்தை நமக்குப் புரியும்படிச் செய்துவிடுகிறார்.

'என்னுடைய புன்செய் நிலத்தில் ஓர் இலந்தை மரம் இருக்கிறது. அது முழுவளர்ச்சியடைந்து பார்க்கத் தகுந்த தோற்றமுடன் வட்டமான கூடாரம் போல் கிளையும், கோடும், விளார்களுமாய் விரிந்து மரகதக் காயும் பவளக் கனியுமென வரிசை வரிசையாய்க் காய்த்து கனிந்து தன்னிடம் வைத்துக் கொண்டு காத்திருந்தது.

ஒரு காலைப் பொழுது; அந்தக் கனிகளைச் சுவைத்துத் தின்னப்பற்பல பறவைகள் வந்து அதில் கூடியிருந்தன. செவ்வெறும்புக் கூடுகள் சிலவும் அதில் காணப்பட்டன. அதே நேரத்தில் ஆணும் பெண்ணுமாக ஊர்க் குழந்தைகளும் அங்கு உதிர்ந்து கிடக்கும் நல்ல பழங்களைப் பொறுக்கிச் சேர்த்துக் கொண்டும், தின்று கொண்டும் குழுமியிருந்தனர். இவற்றையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த அந்த இலந்தை மரம் என் பிறப்பு மகத்தான தாயிற்று ; என்னால் பல சீவன்கள் குதூகலிக்கின்றன பயன்படாமல் சில மனிதர்கள் வெறுமையாய் வாழ்வதில் என்னதான் இருக்கிறது! என்று தனக்குத்தானே எண்ணிப் புளகாங்கிதம் முற்றது!' என்கிறார்.

'பரோபகாரம் இதம் சரீரம்' இந்த நம் உடலுக்கு நலம் தரத்தக்கது, உணவினைக்காட்டிலும் பிறருக்கு உதவியாயிருப்பது தான்' என நாட்டில் வழங்கிவருகிறது. செல்வம் தேடும் வாய்ப்புள்ளவர்களில் ஒருசிலர், "செல்வத்தினால் பெற்று நுகரவேண்டிய ஈத்துவக்கும் இன்பம் அறியார் கொல்" என்று, வள்ளுவர் கூறிப் பரிந்துரை செய்தார் போலும்.

சிந்தித்துத் தெளியாத உள்ளம், நீரில் தோய்த்துத் துவைக்காத் துணியைப்போன்று என்றும் மலினமானதாகவே இருக்கும். காண்பனவும், கேட்பனவும் கொண்டே வாழும் ஒரு மனிதனின், அவன் யாராகவேனும் இருக்கட்டும், வாழ்வு மலின முள்ளதாகவே இருக்கும். ஆம் ! அது வெறும் சோற்றுக்காக வாழும் பாவனை வாழ்க்கைதான்.

'உழைப்பென்று, உணவென்று' என வாழும் அப்பாவிகளைப் பற்றி நான் இங்கு எதுவும், கூற விரும்பவில்லை; பணம் தேடுவது

ஏதற்காக?' என்றே தெரிந்துகொள்ளாது; பணம் தேடிக் கொண்டிருக்கும் இந்தச் சீரில்லா சீமான்களின் தயவுக்காக ஏங்கி இதமற்று வாழும் புலவர்கள், எழுத்தாளர்கள், சொற்பொழி வாளர்களின் சிந்தனைக்கு மட்டும்தான்' என்று இந்த என் நூலில் சுட்டிக்காட்டிவிட விரும்புகிறேன்.

பெரிய படிப்புள்ள இவர்கள் கேட்கிறார்கள். 'உலகில் படித்தவர்களெல்லாம் ஞானிகளாகிவிட முடியுமா? என்று.

இது அவசியம் பதில்பெற வேண்டிய ஒரு கேள்விதான். 'முடியாது'' என்பதுதான் இந்தக் கேள்விக்கு நான் அளிக்கும் பதிலும்! ஆனால், இம்மூன்று பிரிவினையும் பார்த்து நான் கேட்கும் கேள்வி இதுதான். 'உங்களில் ஒருவராவது ஒரு ஞானியாய் ஆக முடியாததேன்' என்று.

எத்தனை நூற்றாண்டுகள் கழிந்தாலும் இந்த என் கேள்விக்கு இவர்களில் எவரொருவரும் பதில் கூறமாட்டார். இவர்கள் கற்ற கல்வியில் உள்ளதனைத்தும் சடப்பொருளைப் பற்றிய கல்வி. 'எதையறிந்தால் எல்லாம் அறிந்ததாகுமோ, அல்லது எல்லா நூல்களிலிருந்தும் எதுவொன்றே அறியத் தகுந்ததாகுமோ. அதுவே, 'ஓம் தத் சத்' இதை ஏன் இவர்கள் அறிந்துகொள்ளவில்லை?

'ஞானம்' எனும் சொல்லுக்குப் பொருள், 'ஓம் தத் சத்' என்பதுதான். இதையறியக் கூடிய வாய்ப்பிருந்தும் இவர்கள் யாரும் அறிய முன்வரவில்லை. இதனை அறியாத வரையில் இவர்கள் அனைவரும் அஞ்ஞானிகள்தான். அஞ்ஞானிகள் வாழும் நாடு அமைதி காணாது என்று இனிக் கூற அவசியமில்லையல்லவா ?

இருள் நீங்க விளக்கேற்றுவதுபோல், 'அஞ்ஞானம் நீங்க நாட்டில் ஞான ஒளி ஏற்றவேண்டும்'. 'அருள் செல்வம் செல்வத்துட் செல்வம்; பொருள் செல்வம் பூரியர் கண்ணுமுள' என்பது குறள். பொருள் செல்வத்தைக் காட்டிலும் அருள் செல்வம், செல்வத்துள் செல்வம் - சிறந்தசெல்வம் என்கிறார், திருவள்ளுவர். இந்த அருள் செல்வத்தைப் புலவர்களாகிய எழுத்தாளர்கள் தேடிக் கொண்டுள்ளீர்களா?

பொருள் செல்வத்தைக் காட்டிலும் இவ்வருள் செல்வம் நூறு மடங்கு சக்தியுள்ளது என நீங்கள் புரிந்து கொள்ளவில்லை; எனவே தேடிக்கொள்ளவில்லை; இதுதான் உண்மை.

ஓம், தத், சத் - இம்மூன்றும் ஒரே பொருள் பற்றிக் குறிப்பிடும் ஒலிகள். 'ஓம்' எனில் நான் என்பது பொருள். 'தத்' எனின் அது என்பது பொருள் 'சத்' - பிரம்மம். நானே அது; அது சத்-பிரம்மம். நான் வேறு பிரம்மம் வேறன்று; நானே அதுவாயுள்ளேன். ஆம், அகம் பிரம்மாஸ்மி நானே பிரம்மமாயுள்ளேன். இதைப் புரிந்துகொள்ளுங்கள். கடவுள் வெளியே இல்லை. உங்களிடத்தில் இருக்கிறார். வெளியே உள்ள அனைத்தும் பருபொருள் அப்பொருள்களாகிய நாம் சீவ சைதன்னியம்; எல்லாம் வல்ல மனிதர்களாயுள்ளோம். எனவே நீ சதா அறிவறிந்தொழுகு. அதுவே அறவழி ஒழுக்கம்; ஒழுக்கமே நீதி எனப்படுவது; ஒழுக்கமே சட்டமெனப்படுவதும் ஆம்.

அறவழி ஒழுக்கமறிந்து ஒழுகும் ஒருவன் பிறரால் ஆளப்படுவ தில்லை. தன்னைத் தானே ஆள்கிறதீர புருசனாகிறான். தன்னை அறிந்தவனாகிறான். சத் அல்லது தன் ஆத்மாவை அறிந்தவனுமாகிறான்.

பொய், புனைச்சுருட்டு, வஞ்சகம், சூது, பேராசை, பொறாமை போன்ற மாசுகளை உன் உள்ளத்தில் படிந்துவிடாமல் எச்சரிக்கையாயிரு. படிந்திருந்தால், அதனை ஒரு நோய் என எண்ணிக் காலதாமதமின்றிக் களைந்தெறி;

'மனத்துக்கண் மாசு இலனாதல் அனைத்தறம்' எனும் வள்ளுவர் வாக்கினை நினைவு கூர்ந்து பார். உள்ளத்தை மாசுபடுத்திக் கொண்டு நீ கோமானாய் வாழ்ந்தாலும் நோயாளியே! உனக்கு நீயே அடிமையாகிறாய், ஆசைக்கு அடிமையான எவனும் எதையும் ஆள அருகதை அற்றவனாகிறான்.

தன்னை அறிந்து கொள்ளாதவன், தலைவனை - ஆண்டவனை அறிந்துகொள்ள மாட்டான். அவன் ஆசைக்கயிற்றினால் ஆடும் பம்பரம்! எனவே, சொல்; 'ஓம் தத் சத்' என. நானே அது; அதுவே சத் எல்லாம் வல்ல இறை; என்றும் உள்ளது என்று. அசத்தாக வாழாதே அவலத்துக்காளாகாதே!

ஓம் தத் சத் ■

# 2

# 'ஓமித் யேகாட்சம் பிரம்மம்'

'ஓம்' எனும் இந்த ஒரு எழுத்துதான் 'பிரம்மம்' என்கிறது உபநிசத்து. மிகப் பழங்காலத்திலேயே நமது பாரதப் புண்ணிய பூமியில் பிறந்த மாமேதைகள், பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என உள்ள பஞ்ச பூதங்களின் இயல்புகள் பற்றித் திட்டவட்டமாக ஆராய்ந்துத் தெளிந்துரைத்த சூத்திரம் இதுதான்.

'சத்தி வேறு பொருள் வேறு அல்ல; சக்திதான் பொருள்' (இ = எம்.சி) என்று 1905 ஆம் ஆண்டில் சூத்திரம் செய்து காட்டி. அதை 6,9-8-1945ல் ஈரோசிமா, நாகசாகி நகரங்களின் மீது 'அணுகுண்டு' எனும் பெயரில் போட்டுச் சர்வநாசம் செய்து காட்டிய ஆல்பீரட் ஐன்ஸ்டீன் செய்தது போன்ற அழிவுச் சக்திக்குரிய

சூத்திரமாகாது, ஆன்மீக ஆக்க சக்திக்கான சூத்திரம் இந்த ஓமித்யேகாட்டிசரச் சூத்திரம் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

'ஓம்' எனும் எழுத்தின் பொருளை உபநிசத்து நமக்குமேலும் விவரித்து விளக்குகிறது.

அதுவே நான்; அதுவே ஆத்மா. அதுவே அகம், அதுவே மற்றும் பிரணவம், சக்தி, பிரம்மம், கடவுள், தெய்வம் எனப் பல்வேறு பெயர்களை இட்டு வழங்கும் பரம் என்றும், கூறுகிறது.

"பிரம்ம வித்யாம் சர்வ வித்யா பிரதிஷ்டாம்" என்கிறது இந்தச் சூத்திரம். உலகிலுள்ள மற்ற பொருள்களைப் பற்றிக் கூறும் எல்லா வித்தைகளும் பிரம்ம வித்தையில் அடங்கியுள்ளது என்பது இதன் பொருள்.

பிரம்ம வித்தை = பிரம்மத்தை அறியும் வித்தை என பொருள்படும்.

பிரம்மம் - கடவுள் தன்னந்தனியாக, தனி ஒன்றாக வானிலோ, மண்ணிலோ இருக்கவில்லை; அதுபொருளோடு ஒன்றியுள்ளது. நான். நீ. அவன், அது, அவை எனும் ஒவ்வொரு சடப்பொருளிலும் ஒன்றியுள்ளது. எனவே, உன்னிட முள்ள அந்த ஆத்மாவை, நீ உன் அறிவைக் கொண்டு உணர்ந்து கொள். உன்தெய்வத்தை நீ ஆராதனை செய், போற்று. சுருங்கக் கூறின் உன்னை நீ போற்று. உன்னை பிறர் தூற்ற என்றும் இடம் கொடாதே. உனக்கு நீயே சாட்சியாக இரு.

உன் உள்ளத்தில் படிந்துள்ள இருள்நீங்க, ஐயம் அகல, இந்த ஒரு உபநிசத்தைப் படித்து ஓர்ந்துகொள்.

"எவர் அறிவில் இருந்து கொண்டு அறிவினுள் உறைகின்றாரோ, எவரை அறிவு அறிந்துகொள்ளவில்லையோ, எவருக்கு அறிவு உடலாகின்றதோ, எவர் அறிவினுள் நின்று அதை ஆள்கின்றாரோ, அவர்தான் உன்னுடைய ஆத்மா, அந்தர்யாமி, அழிவற்றவர்" என்கிறது.

தெய்வம் எனும் அந்த மகத்தான சக்தி பொருளில் இருந்தது போலவே அறிவில் இருக்கிறார்; அவருடைய இல்லமும் அதுவே. ஆயினும் அறிவு அவரை முழுமையாக அறிந்து கொள்வதில்லை; கூடாத ஆசைகள், கோபதாபம், மயக்கநிலைகள் குணங்களாகக் கூடியுள்ள அறிவு அவரை அறிந்துகொள்ள இயலாது. தெளிந்த அறிவுக்குள்ளிருந்துதான் அவர் அந்த அறிவை ஆள்பவராகிறார். அவர்தான் ஆத்மா, அந்தர்யாமி,அழிவற்றவர்.

இன்னும் ஒரு உபநிசத்தை உனக்கு அறிமுகப்படுத்துகிறேன். சிந்தித்து தெளிந்து ஓர்ந்துகொள்.

எதை நீ உன் கண்ணால் பார்ப்பதில்லையோ, ஆனால் எதனால் உன் கண்கள் பார்க்கப்படுகின்றதோ, அது பிரம்மம் என்று அறி. எதை ‘இது பிரம்மம்’ என்று சுட்டிக்காட்டி உபாசிக்கப் படுகிறதோ அது பிரம்மம் அன்று’ என்கிறது மேலும் ஒருஉபநிசத்.

இதிலிருந்து என்ன புலப்படுகிறது கடவுள் கண்ணால் பார்க்கப்படும் எந்த ஒரு பொருளும் அல்ல.

மனிதனுக்கு இன்றியமையாதனவாய் இயற்கையாக அமைந்துள்ள கண், காது, மூக்கு, வாய் உடல் (பஞ்சேந்திரியங்கள்) எனும் ஐந்தும் வெளிநோக்குடையவையாய் இருக்கின்றன. அதனால் நாம் வெளித்தோற்றங்களையே பார்ப்பவர் களாகியிருக்கிறோம். நம்மில் யாரோ ஒருசிலர், ‘நான் நான் என்று சதா சொல்லிக்கொண்டிருக்கும் அந்த நான் என்பது என்ன? அது எத்தகையது என்று கேள்வி கேட்டுக்கொண்டு உள் முகமாய்ப் பார்த்து அறிந்துகொள்கிறான். அந்த ‘நான்’ உடலுமல்ல உயிருமல்ல; இந்த இரண்டிற்கும் அப்பாற்பட்டது. இந்த உடலும், உயிரும் அந்த நான் எனும் ஆத்மாவுக்காகவே உள்ளன. எனவே அழியக்கூடிய உடலுக்காகவும் உயிருக்காகவும் நான் வாழக்கூடாது. நான் அந்த ஆத்மா - அழியாத தெய்வசக்தியாய் உள்ளேன். அதற்காகவே வாழவேண்டும் என அறிபவனாகிறான்.

மனிதப் பிறப்பு மகத்தான பிறப்பு ; இந்த என் உயிரோடு கூடிய உடல், “நான்” எனும் தெய்வத்திற்காக உள்ளது. இது ஒரு தெய்வ சந்நிதானம். தெய்வமாகிய நான் ஓரளவு காலம் இதில்

குடிகொண்டிருக்கிறேன். என்னைப் போன்றவர்களே மற்றும் என்னோடுள்ள மற்ற எல்லா மனிதர்களும், எனக்கு எது வேண்டுமோ, அது மற்ற எல்லோருக்கும் வேண்டும். எனக்கு எது கேடுசெய்கிறதோ அது மற்றவர்களுக்கும் கேடே செய்யும் என்ற ஆன்மீக ஞானம், அதாவது தன்னையறிந்து கொள்பவனாகிறான். தன்னை அறிந்தவன் மற்றவர்களையும் அறிந்தவனாகிறான். தலைவனையும் (தெய்வம்) அறிந்து கொண்டவனாகிறான். எனவே, 'பிரம்ம விதாப்நோதிபரம்' பிரம்மத்தை அறிந்தவன் பிரம்மமாகிறான். என்று உபநிசத்து இங்கு நமக்கு விளக்கமாகிறது. நம்முடைய அறியாமை, அச்சம் அகற்றவும் செய்கிறது. அறிய வேண்டியதை அறிந்தவன் அடைய வேண்டியதை அடைந்தே தீருகிறான்.

■

- புகழ்ச்சியே அறியாமையின் குழந்தை. ஆம், அறியாமையின் குழந்தைதான் புகழ்ச்சி.

  – பென்ஜமீன் பிராங்ளின்

- கவிதை என்பது ஆத்மாவின் ரகசியம். அதை வெறும் வார்த்தைகளைக் கொண்டு உளறுகிறார்கள்.

  – கலீல் இப்ரான்

- ஆசை வசப்பட்டவனின் உள்ளம் மாசைப் பூசிக் கொள்ளும்.

  – வெ.

- மக்கள் வாக்கு வேர்கள், கவிஞனின் வாக்கு மலர்கள்.

  – ஸ்ரீகண்டய்யா

- கல்மனம் உள்ளவர்கள் ஏழைகளாவதில்லை. ஏனெனில் அவர்களை மொட்டை அடிக்க கடவுளாலும் முடியாது.

  – பம்பன்னா

# 3

# உத்கீதம்

"உத்கீதம்" என்ற சொல்லும் சாரமுள்ள ஒரு அருமையான பொருள் பொதிந்த சொல்தான். எனவே நீ இதனை அவசியம் புரிந்துகொள்ள வேண்டும். உன்னை நீ உயர்த்திக் கொள்ள விரும்பினால், அதற்கு வேண்டிய உணர்வுகள் உன்னிடம் இருந்தே தீர வேண்டுமல்லவா?

"ஓமித் ஏதத் அட்சரம் உத்கீதம் உபாசித" என்கிறது இந்த உபநிசத்து.

'ஓம்' என்னும் இது ஒரு அட்சரம் தான், எனினும் அது உத்கீதம் என்ற பெயரும் பெற்றுள்ளது. எனவே அதை நீ (உன் உயிரைக்காட்டிலும்) உயர்ந்ததென எண்ணி உபாசிக்க வேண்டும், என்பது இதன் பொருள். உபாசித்தல் என்றால் போற்றுதல்தான். வேறு அஞ்சத்தக்கதோ அனுசரிக்க இயலாத பொருளோ இதில் இல்லை.

ஏன் இதனை உபாசிக்கவேண்டும் எனின், மற்றொரு உபநிசத்து அதனை இவ்வாறு விளக்க முற்படுகிறது.

பூதங்களின் ரசம் (சிறப்பான பகுதி) மண்; மண்ணின் ரசம் தண்ணீர், தண்ணீரில் ரசம் தாவரவர்க்கம்; தாவாங்களின் ரசம் மனிதன்; மனிதனின் ரசம் வாக்கு; வாக்கின் ரசம் உத்கீதம் அதுவே ஓம் !

மனிதனின் ரசம் வாக்கு எனப்படுகிறது. எனவே இன்று வாழும் ஒவ்வொரு மனிதனும் தன்னைத் தன் வாக்கின மூலமாக வெளிப்படுத்திக் கொள்கிறான்.

ஒரு சிறிய முல்லைப்பூ தன் மேம்பாட்டை அல்லது இயல்பைக் காற்றோடு கலந்து கமழும் திறத்தினால் தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறது. முந்திரிப்பழம் தன்னுள் சேர்த்துவைத்துக் கொண்டுள்ள இனிய ரசத்தினால் தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறது. குயிலும் காக்கையும் தத்தம் குரலினால் தம்மை வெளிப்படுத்திக் கொள்கின்றன. புலியும் பூனையும், தேக்கும் திமிசும், பசுவும் எருமையும் போலவே மனிதர்களும் தத்தம் வாக்கினால் தம்மை வெளிப்படுத்திக் கொள்கிறார்கள்.

இதில் இன்னொரு விவரம்நான் யாராயிருக்கிறேன் என்பது கணக்கில் சேர்க்க இயலாது! என் வாக்கில் என்ன இருக்கிறது என்பதுதான் நாம் எடுத்துக்கொள்ளவுள்ளது.

கீதம் = இசைப்பாட்டு எனப் பெரியோர் உணரச் செய்துள்ளனர். எனினும் பொதுவான பொருள் ஒலி என்பதுதான். ஆனால் ‘உத்’ என்னும் பகுதி என்ன சொல்லுகிறது என நாம் ஆராய வேண்டும்.

உத் + அயம் = உதயம், உத்தமன், உத்தரவு, உத்வேகம், உத்யோகம், உத்தண்டம், உத்தரம், உத்சவம், உத்பத்தி போன்ற சொற்களில், உள்ள பகுதிப்பொருள் எவ்வளவு மகத்தான தாயுள்ளன என்பதை நீ எண்ணிப்பார். எனவே உன்வாக்கில் உன்னிட முள்ள மேன்மைகள் (தெய்வீகம்) வெளிப்பட்டுக் கொண்டே இருக்க வேண்டும். என்பது தான் உத்கீதத்தின் குறிப்பு.

இந்த உத்தின் உயர்வை ‘நா நலம்’ என்னும் நலன் (ஒரு) உடைமை அதாவது ஒரு அரும்பொருள் அந்நலம் இதர எந்த ஒரு நலத்திலும் உள்ளது போன்ற ஒன்றன்று; எல்லா நலன்களைக் காட்டிலும் மேலான நலன் நா நலன். என்று வள்ளுவர் விளக்குகிறார்.

[illegible]க்கில் உள்ள இந்நலத்தை நம் தமிழகத்திலுள்ள புலவர் பெருமக்கள் எத்தனைபேர் புரிந்து கொண்டு ஒழுகுபவராயுள்ளனர். [illegible] ஒரு ஒற்றை மனிதன் உண்டா? நம்மிடமுள்ள மேன்மையை நம்மை அறியாமல், அறிந்து வெளிப்படுத்தி மற்ற மக்களைப் பின்பற்றி ஒழுகச் செய்யாமல் கற்ற - கற்பிக்கும் கல்வியில் நல்லது என்று கூற வேறு என்னதானிருக்கிறது.

'சொல்வன்மை' என்பதன் பொருள்தான் என்ன? உரத்த குரலில், சாதுர்யமாக, ரசம் சொட்டச் சொட்டக் கேட்பவர் உள்ளத்தில் பதியும்படியாக - இப்படியெல்லாம் சொன்னால் அச்சொல் வன்மையுடையதாகிவிடுமா? இல்லை. அறிவற்றவர் ஆராய்ச்சி யற்றவர்கள் ஒருகால் இத்தகைய சொற்களால் கவரப்பட்டு, கை ஒலி செய்து வரவேற்பர்; அறிஞர்கள், அதுவும் 'உத்' எனும் சொல்லின் பொருளுணர்தொழுகின்றவர்கள், 'பாவம்' முழுக் குருடர்களுக்கு முக்கால் குருடன் வழிகாட்டி என்று தான் அதனை விமர்சிப்பர், என்று நான் அழுத்தமாக இங்கு சொல்லிக் கொள்கிறேன்.

நம்மை நாமறிந்த நிலையில், உண்மைக்கும் நீதிக்கும் வேறாகாத முழுமையான அறிவிலிருந்து வெளிப்படும் சொல்தான் வன்மையுடைய சொல்; அதுவே நிலையான சொல். வாக்கின் ரசம். அதுவே ஓம்! அதுவே உத்கீதம்.

எப்பொருளாயினும், அதை உரைப்பவர் எத்தகைய வராயினும், அவ்வுரையில் அடங்கியுள்ள உண்மைப் பொருள் அறியும் ஆற்றலுள்ளவரே உத்கீதத்தின் பொருள் உணர்ந்தவராகிறார்.

'ஐயப்படாது பிறர்தம் அகத்தில் உள்ளதனை அறியும் சக்தி எவரிடம் இருக்கிறதோ, அவரே உத்கீதத்தின் உண்மையை உணர்ந்தவர். தெய்வத்தோடொப்புக்கொள்ள வேண்டியவர்.

வெறும் ஏட்டுச் சுரைக்காய் படிப்பு உள்ளத்தைத் தூய்மை செய்யாத படிப்பு வெறும் சோற்றுக்கான படிப்புதான். எனவே ஆன்மிக படிப்பு அற்றநாடு என்றும் அடிமை நாடு அவலத்துக்குரிய நாடாகவே இருக்கும்.

■

4

# ரிதம்

தமிழ் இலக்கணத்திற்கு முரணாய் 'மொழிக்கு முதலெழுத்தாக வரக் கூடாது' என ஒதுக்கப்பட்ட உயிர்மெய்யெழுத்தையே முதலெழுத்தாகக் கொண்டு, 'ரிதம்' என வழங்கும் இச்சிறிய சொல் ஒரு மகத்தான சொல். சிறு மீன் சினையினும் சிறிய ஆலமரத்தின் வித்தினை இச்சொல் தன்னுள் அடக்கி வைத்துக் கொண்டுள்ள விழுமிய கருத்தை முழுமையாக அறிந்து கொள்வது சிரமத்தின்பால் பட்டது. ஆயினும், இதை உலகத்திற்கு விளக்கித்தீர வேண்டிய கடமை காரணமாக எழுதி முடிக்க விரும்புகிறேன். இது அவசியத்தை முன்னிட்ட செயலே அன்றி அறிவு மேன்பட்டதன்று எனத் தன்னடக்கத் துடன் சொல்லிக்கொள்கிறேன்.

'எது உயர்ந்ததற் கெல்லாம் உயர்ந்ததோ எது பெரியதற் கெல்லாம் பெரியதோ, எது ஒப்புவமை இல்லாததோ, எது வெளிப்படையாகத் தோன்றாத ஒன்றோ, அளவுக்கடங்காததோ, உலகெலாமாகியதோ, மிகப் பழமையானதோ, இருளுக்கப்பாற் பட்டதோ, இதனைக் காட்டிலும் வேறானதும் நுண்மை (சூக்குமம்) யானதும் பிறிதொன்றில்லையோ, அதுவே ரிதம், அதுவே சத்தியம்' என்று அறிந்தவர்கள் கூறுகிறார்கள். இதுவே தீர்க்க தரிசிகளின் பரப்பிரம்மம் அதுவே அக்கினி, அதுவே வாயு, அதுவே சூரியனும் சந்திரனும், - மற்றுள்ள அனைத்தும்', என்கிறது உபநிசத்து.

சற்று ஆழ்ந்து சிந்தித்துப் பாருங்கள். இத்தகைய ஆற்றல்சால் ரிதத்தைப் பற்றி நாம் இதுகாறும் அவசியமிருந்தும் அறிந்து கொள்ளவே இல்லை. அறிந்தவர் எவரும் முன்வந்து நமக்கு அறிவிக்கவும் இல்லை. மற்ற மதக்கோட்பாடுடையவர்களைப் பற்றி நான் இங்கு எதுவும் கூறவரவில்லை. இந்து மதத்தினரைப் பற்றியே, - நானும் ஒரு இந்துவாக இருப்பதனாலேயே, இருள் மூடிய இந்தக் காலகட்டத்தில் கட்டாயமாக இதை நான் கூறித்தீர வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதனாலேயே முடிந்த அளவு விவரிக்க விரும்புகிறேன்.

திராவிட மக்களாகிய நம்மை, ஆரியர்கள் தம்முடைய மதத்தில் சேர்த்துக் கொண்டபின் நமக்கு மதம் சுட்டிக்காட்டும் உண்மைகளை கூறித் தெளிவித்திருக்க வேண்டுமல்லவா? இஸ்லாம் கூறித் தெளிவித்திருக்கிறது. கிருத்துவம் கூறித் தெளிவித்திருக்கிறது. எங்கள் மதநூல் திருக்குரான், எங்கள்மதநூல் பைபிள் என்று ஒளிவுமறைவின்றி அது சரியோ தப்போ - விளக்கி இன்றும் தெரிவித்துக் கொண்டுள்ளது கண்கூடு.

ஆனால், இந்துமத போதகர்கள் அன்றிலிருந்து இன்று காறும் இதைச் செய்யவில்லை, செய்வதுமில்லை என்பது, நாம் அனைவரும் அறிந்ததே. இதற்குக் காரணம் என்ன? என வினாவின், விவேகானந்தர், சின்மயானந்தர், தயானந்த சரஸ்வதி, மற்ற மடாதிபதிகள் முதல் எவருக்கும் உபநிசத்துகளை எடுத்து விளக்கி மக்களைக் கடைத்தேற்றிவிடும் அதிகாரம் இல்லை, உபநிசத்து என்றால் இரகசியம், பன்னிரண்டாண்டுகள் குருகுலவாசம்

செய்தபின் அருகிலுள்ளவர்களுக்கும் கேட்காத குரலில் மாணவனது காதின்மேல் குருவானவர் தம் வாய் வைத்துக் 'குசு, குசு,' வென்று மெல்லப் சொல்வது என்பது பொருள் மற்ற எவருக்கும் சொல்லக் கூடாது என்பது கட்டளை. ஆம் சாந்தோக்கியோபநிசத்து இரண்டாம் அத்தியாயம் **11.5/11.6**ம் சூத்திரங்கள் கூறுவன இது. இந்தப் பிரம்ம ஞான வித்தையை தகப்பன் தன் முதல் பிள்ளைக்கு உபதேசிக்கலாம், அல்லது தகுதியுடைய மாணாக்கனுக்கு உபதேசிக்கலாம். மற்றபடி எவர்க்கும் உபதேசிக்கக் கூடாது. எல்லாச் செல்வத்துடனும் நிறைந்த இந்த நீர் சூழ்ந்த பூமியையே கொடுத்தபோதிலும், 'இது அதனினும் பெரிது இது அதனினும் பெரிது' என்று. எனவே இந்தக் குருமார்களின் பாதபத்மங்களில் நாம் சிரம் வைத்து வணங்குவது தவிர இவர்களிடமிருந்து நமக்கு எந்த ஒரு நன்மையும் இதுகாறும் கிட்டவே இல்லை. பாவம் இவர்கள் ஒருவிதத்தில் கட்டுப்பட்டவர்கள்,இருந்து விட்டுப் போகட்டும். இவர்களை நாம் நொந்துகொள்வதில் பயன் எதுவுமே இல்லை. அப்பாவிகள்தான் இவர்கள்!. தினத்தாள்கள், வார, மாத இதழ்கள் இவர்களை உச்சிமீது தூக்கி வைத்துக்கொண்டு, ஆ.ஆ. ஓ.ஓ. என்று பாராட்டிய போதிலும், பாவனை பண்ணிய போதிலும் தாமறிந்ததை நம்மைப் போன்றவர்களுக்கு ஈந்து மனங்கொளக் கற்பிக்கவியலாத அசக்தர்கள் என்பதுடன் விட்டு, ரிதம் எனும் அந்த மகத்தான சொல்லுக்கு நாம் இனிப்பொருள் காணத் தொடங்கலாம்.

ரிதம் - விவகார உண்மை - உலகில் காணும் அழகும் ஒழுங்கும்! இயற்கை நியதியும் ஆம் எனப்படுகிறது. விவகாரம் எனும் சொல், வழக்கு எனும் பொருள் ஒன்றிற்கு மட்டும்தான் நாடு இன்று இட்டு வழங்குகிறது. 'நீதியதிபதித்வம்' எனும் பொருளும் பண்டைநாளில் அது முதன்மையாகப் பெற்றிருந்தது. அறம் சட்டம் நெறிமுறை என்ற பொருளும் கூட ரிதம் தான். அழகுதான் ஒழுக்கம், ஒழுக்கமே பேரழகு. இயற்கையோடு அனைத்து உயிரினங்களும் இந்த நியதிக்கு உட்பட்டனவாகியே உள்ளன 'நெஞ்சத்து நல்லம் யாம்' என்னும் நடுவுநிலைமையால் கல்வியழகே அழகு, என்றும் பண்டைக் காலத்திலேயே தமிழ் மக்களும் இதையறிந்தேற்றுக் கொண்டுள்ளனர். ஆனால் இன்று நாம் உயிரோடு இருந்தும் அறியாதவர்களாய், அறிந்தும் அனுசரிக்காதவர்களாய் உள்ளோம்.

'யாண்டு பல ஆயினும் நரையில வாகுதல்' எனும் புற நானூறின் பாடலும் இந்த ரிதம் தான். திருவள்ளுவரின் இல்லறம், துறவறம் இரண்டும் இந்த ரிதமேதான். 'நீதியதிபதித்துவம்' சமுதாயத்தின் சீவ நாடி; நயாபைசாக்களுக்கு பின்னால் ஓடிக்கொண்டிருக்கிற சுயநலச் சீமான்களின் முன்னோடிச் சமுதாயம் அழிவை நோக்கி விரைந்து சென்று கொண்டுள்ளது. நீதிக்குத் தலைவணங்காது,நெறிமுறை மறந்து திசை மாறிச்செல்லும் சமுதாயத்தின் எதிர்காலம் இருள் மூடியதாகவே இருக்கும். நிச்சயம், இதில் துளி ஐயம் இல்லை.

விவகார உண்மையை அதாவது அறநெறி ஒழுக்கத்தை ஏன் சமுதாயம் கை விட்டது? காரணம் இதுதான் பரமார்த்திக உண்மையான அடிப்படை சத்தியத்தை அறவே கைவிட்டது. தற்காலத் தமிழ் சமுதாயம் தீண்டத்தகாத ஒன்றாக அதை ஒதுக்கி வைத்து விட்டது. சத்தியத்தை அறவே மறந்துவிட்ட மக்களாகிய நாம் ஆத்மாவையே இழந்துவிட்டோம் என்பதில் துளி ஐயமும் இல்லை. நம்முடைய தாழ்வுகளனைத்துக்கும் நாமே தடமமைத்துக் கொடுத்து விட்டோம்.

'நமது மனம் பயமற்று விளங்கவில்லை, 'நமது தலை கம்பீரமாய் நிமிர்ந்திருக்கவில்லை'. நமது அறிவு சுதந்திரத்துடன் பொலியவில்லை'. 'குறுகிய சாதி மதப் பிளைவுகளால் நாடு உடைந்து உருக்குலைந்துள்ளது. உண்மையின் ஆழத்திலிருந்து நமது சொற்கள் உதிப்பதே இல்லை. 'வெறும் பிரமையில் நாம் இன்றும் தள்ளப்படுகிறோம். இன்றைய விஞ்ஞானயுகத்தில் யானைப் பூசை செய்து ஞானம் பெற முயலுகிற நாம் முற்றிலும் பராதீனர்கள். ஆம், சுய சிந்தனை அற்று எடுப்பார் கைப்பிள்ளை போல் நாம் வாழ்ந்து கொண்டுள்ளோம்''.

இந்தப் பாரதீனம் நீங்க நமக்கு இன்றும் கைவிளக்காக உள்ளது திருக்குறள். திருக்குறள் தெரிவிக்கிறது. 'இருமை வகை தெரிந்து கொள் அறம் பூண்டு அணிகலன் கொள்' என்று.

இம்மை மறுமை, இறப்பு பிறப்பு, இன்பம் துன்பம், இசை, வசை, ஈதல் ஏற்றல், வெப்பம் தட்பம், விருப்பு வெறுப்பு, உடைமை வறுமை,இரவு பகல், நினைவு மறதி, உணவு மலம், ஒழுக்கம் இழுக்கம், அறம் மறம்,மேன்மை கீழ்மை, பெருமை, சிறுமை, நன்மை தீமை, - இன்னும் பற்பல.

இவற்றில் நல்லது கொண்டு கெட்டது விட்டு உண்மையாக வாழ்க்கையில் மேற்கொண்டொழுகும்போதன்றி நீ யாரா யிருப்பினும் உன்னை நீயே தாழ்த்திக் கொள்ளுகிறாய் என்பதுதான் பொருள். உன் பிறவியை நீயே பாழாக்கி விட்டாய். வாழத் தெரியாது வாழ்ந்தவனாகிறாய் என்பதுதான் அர்த்தம்.

எனவே ரிதம் எனில் ஒழுங்கு. அழகு, உன்னுடைய உள்ளத்தில் இவ்விரண்டும் படிந்திருக்க வேண்டும். இது உன் வாழ்க்கைப் பாதையாக அமைந்திருக்க வேண்டும். இல்லையெனில் உன்வாழ்வு வெறும்சோற்று வாழ்வுதான்.

சோற்றுக்காக வாழும் ஒவ்வொருவனும் சுவர்க்கம் புக அருகதையற்றவனாகிறான். துதிகளும் தோத்திரங்களும் மதியற்றவர்களின் பிச்சைபொருள் என்பதைக் ஆராய்ந்து அறிந்துகொள்.

■

- படிப்பின் இரகசியம் பண்பாடுகளைக் கௌரவிப்பதில் அடங்கியுள்ளது.

– எமர்சன்

- உன்னிடத்தில் உள்ளவற்றுள் எது மிக, மிக உயர்ந்ததாய் உள்ளதோ, அதை நீ உலகத்திற்காக அர்ப்பணித்து விடு.

– மகாத்மா காந்தி

- உலகில் நிரந்தரமான வெற்றியை உண்மைக்கே இயற்கை உரியதாக்கி உள்ளது.

  வாழ்க்கை முழுவதும் ஆனந்தம் என்றால், அந்தச் சுகமே நரகமாகிவிடுகிறது.

– பெர்னாட்ஷா

# 5

# அந்ருதாத் சத்யமுபைமி

என் அருமை நண்பனே! உன் வாய் திறந்து சொல். 'அந்ருதாத் சத்ய முபைமி' என்று. 'ஓதி உணர்ந்து பிறர்க்கு உரைத்துத் தானும் அதற்கு தக அடங்கி ஒழுகாத ஒருவன் பேதையிலும் பேதை என்கிறார். நமது திருவள்ளுவர். திருவள்ளுவர் யாரென நீ தமிழனாய்ப் பிறந்தும், கலாசாலைக் கல்வி கற்றும் இன்னும் சரிவர அறிந்து கொள்ளவில்லை. மெய்யாகவே அவர் தமிழர்தம் ஆத்மீக ஆசான். ஆகவே நான், 'அந்ருதாரத் சத்ய முபைமி' என உன்னைச் சொல்ல வேண்டுகிறேன். இந்த அருமைச் சூத்திரத்தின் பொருள் விளக்கிச் சொல்லுவதற்கு முன்பேயே ஒரு தடவை உன் வாய் உரைக்கட்டும் என்றுதான் வேண்டுகிறேன்.

அப்படிப்பட்ட மேன்மைக்குரிய பொருள் இதில் என்னதான் இருக்கிறது? என்று கேட்கிறாயா? சரி! இதோ சொல்கிறேன், கேட்டுக்கொள், பயப்படாமல் கேட்டுப் புரிந்துகொள், நீ புரிந்துகொண்டொழுகும் போதுதான், 'சரியான தமிழன்' எனும் தகுதிக்குரியவனாகிறாய்.

'பொய்யை விட்டு நான் மெய்யை நாடுகிறேன்', என்பது தான் அதன்பொருள்; புரிகிறதா? ஏன் விழிக்கிறாய், நினைவு தவறி விட்டதா? நல்ல வேளை, மூர்ச்சை போட்டுக்கொண்டு கீழே விழவில்லை, அந்த அளவில் நான் உன்னை மெச்சிப் பாராட்டுகிறேன். சொல்ல பயமாக இருக்கிறது. அல்லவா?

பொய்யை விட்டு, மெய்யை நாடிக் கொள்ளாதவரையில் நீ உள்ளம் சுத்தமில்லாதவனாகவே இருப்பாய். உடலை மட்டும் நீராடிச் சுத்தம் செய்துகொண்டு உள்ளத்தைப் பொய்யால் மாசுபடுத்திக்கொண்டு வாழும் வாழ்க்கை அசுத்த வாழ்க்கை, முற்றிலும் அவல வாழ்க்கை என்பதை புரிந்துகொள்ளாததேன்? எதையறிந்தால் எல்லாம் அறிந்ததாகுமோ, அல்லது எல்லா நூல்களாலும் எது ஒன்றே அறியப்பட வேண்டியதாகுமோ அது இதுவேதான். அறிய வேண்டியதை அறிந்தவன் அடைய வேண்டியதை அடைந்தே தீருகிறான். அகமகிழ வேண்டியதற்கு மாறாய் அச்சமடைவது அறியாமை எனப்படும். நண்பா! என் வார்த்தையை நீ நம்பாவிடினும் நமது ஆசான் வார்த்தையை நம்பலாமல்லவா?

'உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார் உள்ளத்திலெல்லாம் அவன் நிலைபெற்று என்றென்றும் உள்ளவனாகிறான்', என்பது நூற்றுக்கு நூறு உண்மையானது, உலகத்தில் மனிதனாகப் பிறந்த ஒருவன் அடைய வேண்டிய பெரும் பேறுகளில்இதைவிட வேறெதுவும் உயர்ந்த தொன்றில்லையே.

உள்ளத்தில் பேராசையை ஒளித்து வைத்துக்கொண்டு உதட்டளவில் நல்லவனைப்போல் பேசிக் கிடைத்த காசைக் கெட்டியாகப் பிடித்துகொள்வது. வழக்கமாயிருந்தால் ஒருவன் சீக்கிரம் பணக்காரனாய் விடலாம். 'நூற்றுக்குமேல் ஊற்று' என்பது அனுபவம். பணமிருந்தால் பணம் வந்து ஒட்டிக்கொண்டே

இருக்கும். ஆனால், பணம் கோடிக்கணக்கில் சேர்த்து வைத்துக் கொண்டுள்ள ஒரு மனிதன், தன் வாய் திறந்து சொல்ல பயப்படுகிற சொல் இதுதான்; 'நான் பொய்யை விட்டு மெய்யை நாடுகிறேன்' என்று சொல்ல அவன் உளம் ஒப்பாது ஒப்பி உரைக்கினும் நடைமுறைக்கு வராது. எனவே அந்த மெய்யைக் கைகூப்பி வணங்குவான். காணிக்கையும் போடுவான். கோயிலும் கட்டித் திருவிழா எடுப்பான்.

தெய்வம் எனும் சொல்லின் பொருள் எந்தவொரு பணக்காரனும் அறியான். அவன் கும்பிடும் தெய்வத்தின் பெயர் மெய்மை - வாய்மை - உண்மை. இம்மூன்று சொற்களும் சத்தியம் என்ற ஒரே சொல்லின் பொருள் என்கிறது உபநிசத்து. எனவே ஒருதனவான் தெய்வத்தைக் கைகூப்பிக் கும்பிடுவான். ஆனால் தெய்வமாகும் துணிவு அவனுக்குக் கிடையாது.

நீ பொய்யை விட்டு மெய்யை நாடினால், அதன் விளைவுஎன்ன? என்பதையறிய விரும்புவாயானால், உன் பிறவி பயனுள்ளதாகும் என்பதில் ஐயமே, இல்லை. அடுத்து வரும் உபநிசத்து இதை விளக்குகிறது. 'மானுசாத்தைவமுபைமி'. இதன் கருத்து மனித இயற்கையை விட்டு நான் தெய்வத்தன்மையை நாடுகிறேன். என்பதாம்.

உண்மையாகவே எந்தஒரு மனிதனாயினும் சரி; பொய்யை விட்டு மெய்யை நாடும். அதே கணத்தில் மனித இயல்பை விட்டுத் தெய்வமாகி விடுகிறான் என்பது அங்கை நெல்லிக்கனிபோல் இந்தச் சூத்திரம் எடுத்துக்காட்டுகிறதல்லவா? இதைக் காட்டிலும் மனிதனாய்ப் பிறந்தவன்அடையக் கூடிய பெரும் பாக்கியம் வேறு என்னதான் இருக்க முடியும்.

இன்று நமது தேசம் சத்தியத்தை அறவே புறக்கணித்து ஒதுக்கி விட்டுள்ளது. சத்தியத்தைப் புறக்கணித்து விட்டதெனின் தெய்வத்தையே புறக்கணித்து விட்டுள்ளது என்றுதான் பொருள்படும். இதை எவரும் மறுக்க முடியாது.

'பரம்பிரம்மம்' என்பது என்ன? எனில் உபநிசத்து சொல்லும் பதில், 'ரிதம் சத்தியம் பரபிரம்மம்' என்று அறுதியிட்டுக் கூறுகிறது. மேலும் விளக்கமும் தருகிறது, ரிதம் விவகாரிகம், 'உலகின்

ஒழுங்கும் அழகும். சத்தியம் பாரமார்த்திகம், அடிப்படையான உண்மை' என இந்த உண்மையை எந்த மடாதிபதியும் எடுத்துக் கூறிவிளக்காதது தான் நமது தேசத்தின் எல்லாத் துன்பங்களுக்கும் மூலகாரணம் எடுத்துக் கூறி விளக்காதது மட்டுமல்ல; குதிரை கீழே தள்ளியதுமல்லாமல் குழியும் பறித்தது என்பது போல உருவ வணக்கத்திற்கு முக்கியம் கொடுத்து இன்றும் நாட்டை நாசமாக்கிக் கொண்டுள்ளனர். வெறும் பெயர்ச் சொற்களுக்கு உருவம் உண்டாக்கிக் கோயிலில் வைத்துக் கும்பிடுவது ஆத்மீகம் என்று கூறுகின்றனர்.

'திரிபாதஸ்யாம் ருதம் திவி' - சத்து, சித்து, ஆனந்தம் என மூன்று பிரிவுகளாக உள்ளது. அந்தத் தெய்வம் என்கிறது. ஒரு உபநிசத்து. மற்றொரு உபநிசத்து, 'சத்தியம், ஞானம், ஆனந்தம், பிரம்மம்' என்று விளக்கித் தெளிவிக்கிறது. 'தேவாஸ்தம் பராதுர்யோ அன்யத்ராத்மனோ தேவான் வேத': தன்னுடைய ஆத்மாவுக்கு வேறாகத் தெய்வங்கள் உள்ளன என்று எவன் எண்ணுகிறானோ அவனை அந்தத் தெய்வமே தள்ளிவிடுகிறது என்கிறது இன்னொரு உபநிசத்து.

உபநிசத்துகள் மாத்திரம் அன்று; திருமந்திரமும் இப்படியே சொல்லித் தெரிவிக்கிறது. 'வானில் ஈசனைத் தேடும் மதியிலிகாள் தேனும் இனிமையும் சிவப்போ கருப்போ, - தேனும் இனிமையும் தேரவொன்றானதுபோல் சீவனுக்குள் ஈசன் ஒளிந்திருந்தானே', என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டாமா?

விஞ்ஞானம் இரண்டு என்பர் அறிஞர். ஒன்று பொருளைப் பற்றிய விஞ்ஞானம் மற்றொன்று ஆன்மாவைப் பற்றிய விஞ்ஞானம். இன்று உலகம் முழுவதும் பயிலுகின்ற விஞ்ஞானம் பொருள் பற்றிய விஞ்ஞானம் மட்டும்தான். ஆத்மாவைப்பற்றிய விஞ்ஞானம் திருமந்திரம், உபநிசத்துகள், திருக்குறள், புறநானூறில் பல பாடல்களில் மட்டும் உண்டு. அவற்றில் உள்ளது உள்ளபடி விவரித்துக் கூறுவது உபநிசத்துகள். இந்த உபநிசத்துகளை மட்டும் தக்க ஆசிரியர்களைக் கொண்டு கல்லூரிகளில் ஒரு பாடமாகப் பயிற்று வித்தால் ஒரு சில ஆண்டுகளில் நமது தமிழகம் சுவர்க்கமாக மாறி விடும். மக்கள் தேவர்களாகிவிட முடியும் என்றும் நான் தெளிவாக அறிந்து இங்கு கூறுகிறேன்.

உபநிசத்தை ஆரியர்கள் தம் உடைமையாக மறைத்து வைத்துக் கொண்டு இன்றும் மக்களை உருவணக்கம் செய்து வைத்துக் கொண்டு வீணாக்கி வருகின்றனர் என்று நான் குற்றம் சுமத்துகிறேன் எந்த நீதி நிலையத்திலும் இதை நிரூபிக்கவும் தயாராய் இருக்கிறேன்.

சத்தியமே கடவுள், ஒழுக்கமே நடைமுறை என்று கூறி இப்பகுதியை முடிக்கிறேன்.

■

- **எந்த அரசு நாட்டு மக்களின் சீவாதார உரிமைகளை அலட்சியப்படுத்துகிறதோ அந்த அரசு வெகு விரைவில் அழிந்துவிடும்.**

  **– திப்பு சுல்தான்**

- **அன்பு இதயத்தின் இளமை; சிந்தனை அதன் வளர்ச்சி; பேச்சு அதன் கிழத்தனம்.**

  **– கிப்ரான்**

- **'சமுதாயம்' எனும் பயிரில், ஒழுக்கமில்லாத ஒவ்வொரு மனிதனும் களைந்து எறியப்பட வேண்டிய களைகளைப் போன்றவனேயாவான்.**

  **காலத்தை வீணாய் கழிக்கும் ஒவ்வொரு மனிதனும் ஞாலத்திற்கு ஒரு நச்சுப் பொருள்.**

  **ஒரு தேசத்திற்கு பெரிய துன்பம் நேர்வது எப்போது என்றால் கெட்டவர்களை எல்லாம் நல்லவர்கள் என்று நினைக்கும் போதுதான்.**

  **– வெ.**

6

# சத்யமேவ ஜயதே

'முண்டகோபநிசத்து'; 2.2-ம். சூத்திரம், 'சத்யமேவ ஜயதே' என்று சொல்கிறது. எது சுயம் பிரகாச மானதோ, அணுவினும் சூக்கும மானதோ, எதனிடம் உலகங்கள் நிலைபெறுகின்றனவோ, அதுவே அழிவில்லாத பிரம்மம். அதுவே பிராணன், அதுவே வாக்கும் மனமும், அதுவே சத்தியம், அதுவே அமிர்தம். சித்தம் அழகியோனே! அதையே நீ குறிபார்த்து எய்ய வேண்டும்.

'சுயம் பிரகாசமானது எது?' நண்பனே சிந்தித்துத் தெரிந்துகொள்ள முயல்க! வானத்தை உதயகாலத்தில் பார். உலகில் கவிழ்ந்துகொண்டிருந்த பேரிருளை நீக்கி ஒளிரும் உதய ஞாயிறை கண்கொண்டு காண்கிறாய் இல்லையா? இந்தச் சூரியன் யார், அல்லது என்ன ?

உபநிசத்து விளக்குகிறது : 'தத்யத்-தத்-சத்ய-மசௌன சதித்யோ' என்று. இதன் தமிழர்த்தம் என்னவென்று புரிகிறதா? அந்தச் சத்தியம் எதுவோ அதுதான் இந்த ஆதித்யன், என்பதேயாம்.

இந்த உதய ஞாயிறினை சத்தியத்தை உன்னுடைய இதய வானத்தில் உதிக்க வைத்துக்கொண்டால் நீ சுயம் பிரகாசமுள்ள வனாகிவிடுகிறாய். உனக்கு முன் எந்த ஒரு அறியாமை இருளும் எதிர்த்து நிற்க இயலாது என்பதை உணர்ந்து கொள் - இதனைப் 'பரமார்த்தம்' உண்மை, ஞானார்த்தம், தேவ அறிவு, மெய்மை என அகராதி விவரிக்கிறது எனவே, இந்தச் சத்தியம் அணுவினை விடச் சூக்குமமானது. இந்தச் சத்திய நியதியில் தான் எல்லா உலகங்களும் நிலைபெற்றுள்ளன. ஆகவே, இந்தச் சத்தியமே பிரம்மம் - கடவுளுமாகிறது. இந்தத் தெய்வீக சக்தியே உன்னுடைய உயிரும் அதுவே வாக்கும், மனமும், ஆயிற்று. அதே சத்தியம் அமிர்தமும் ஆகி உன்னை அமரன் - மரணமற்றவனாக - நிலை பேறுள்ளவனுமாக ஆக்கிவிடுகிறது. சத்தியத்தை அமாவாசையாக்கி விட்டு இன்று நாமனைவரும் இருட்டில் தவித்துக் கொண்டிருக்கிறோம்.

சத்தியத்தின் சக்தி எத்தகையது என்று புரிந்துகொள்ள ஒரு சின்னஞ்சிறியகதையும் அதே உபநிசத்தில் கூறப்பட்டிருக்கிறது. அதையும் ஊன்றிப் படித்துணர இங்கு விவரிக்கப்படுகிறது. நண்பனே! உன்னிடமுள்ள அசிரத்தையே உன்னுடைய பரம விரோதி. எனவே, சிரத்தையோடு படித்தறிந்து கொள்.

சத்தியகாமன் எனும் சிறுவன் ஒருவன் தன் தாயாகிய ஜாபாலவை அணுகி, "அம்மா, பிரம்மாச்சாரியாக நான் குருகுலம் சென்று வசிக்க விரும்புகிறேன். நான் என்ன கோத்திரம்", என்று வினவினான்.

"அப்பா! நீ என்ன கோத்திரம் என்று நான் அறியாதவளாயுள்ளேன். என் யௌவனத்தில், நான் பலவிதமான பணிகளில் பலரிடம் சேவை செய்து கொண்டிருக்கும் காலத்தில் உன்னை ஈன்றெடுத்தேன். ஆகவே உன்தந்தை யார்? அவர் கோத்திரம் என்ன என்பதைத் தெரிந்து கொள்ள இயலவில்லை, என் பெயர் ஜாபாலா, உன் பெயர் சத்தியகாமன் எனவே சத்தியகாம ஜாபாலன் என்றே நீ குருவினிடம் சொல்"லெனக் கூறி அனுப்பினாள்.

அவன் ஆரித்ருதர் எனும் கௌதமரிடம் சென்று 'பெருமை வாய்ந்த ஐயனே, தங்களிடம் பிரம்மச்சாரியாக வசிக்க விரும்பித் தங்களை வந்தடைந்தேன்' என்றான், வணக்கமாகக் கைகூப்பி அவர் முன்நின்று.

'சித்தம் அழகியோனே! நீ எந்த கோத்திரத்தைச் சேர்ந்தவன்?' என்று அவர் அவனைக் கேட்டார்.

'ஐயனே! நான் எந்த கோத்திரத்தைச் சேர்ந்தவன் என்பதை அறியேன். என் அன்னையைக் கேட்டேன். அவள், "என் யௌவனத்தில் நான் பலரிடம் பலவிதமான வேலைகளில் ஈடுபட்டிருந்தபோது உன்னைப் பெற்றேன். நீ என்ன கோத்திரம் என்ற அதை நான் அறியவில்லை. என் பெயர் ஜாபாலா உன் பெயர் சத்தியகாமன்', என்று பதில் கூறினாள். ஆகையால் நான் சத்தியகாம ஜாபாலன். இதுவே என்னைப் பற்றிய தகவல், என்றான்.

அவர் அவனைப் பார்த்து கூறினார். 'உண்மையை இங்ஙனம் கூறுபவனைப் பிராமணன் அல்ல என்று சொல்வது தகுதியல்ல. 'சித்தம் அழகியோனே'! சமித்தைக் கொண்டுவா. உனக்கு உபநயனம் செய்விக்கிறேன். நீ சத்தியத்தை விட்டு விலகவில்லை'; என்று கூறி அவனுக்குச் செய்ய வேண்டியது செய்து கூறவேண்டியது கூறி வைத்துக் கொண்டார். கதையை நான் இங்கு இத்துடன் நிறுத்தி உன்னைச் சிந்திக்கப் பண்ணுகிறேன். அவன் உத்தமமான பிராமணன்: என்பது புரிகிறதல்லவா? சத்தியத்தை உபாசிக்கிறவன் தெய்வத்தைஅறிந்தடைந்தவனாகிறான். என்னதான் வேசம் போட்டுக்கொண்டிருந்தாலும் ஒருமனிதன் சத்தியத்தை விட்டு விட்டால் அவன் ஆத்திகன் எனும் அருகதை அற்றவன். அவனே நாத்திகன். நாத்திகம் பரவும் நாடு நலம் காணாது என்பது சரியான பழமொழியாகவே இருக்குமல்லவா?

'சர்க்கரை என்ற சொல்லே சர்க்கரையாகி விடாது. அந்தச் சொல் சுட்டிக்காட்டி உள்ள பொருள் வேறு. அது கரும்பைப் பிளிந்து சாறாகக் காய்ச்சித் தயாரித்துள்ள ஒரு இனிமைப் பண்டம். இதேபோல் கடவுள் என்ற சொல்லே ஒரு பொருளாகிவிடாது. அச் சொல்குறிக்கும் பொருள் மனிதனின் உள்ளத்தில் உண்மை என்னும் பண்புக்குரியது; மற்ற உருவத்திற்குரியதன்று.

நான் பல ஆண்டுகளுக்குமுன், கன்னடம் கற்க விரும்பி அந்த நாட்டில் இரண்டு ஆண்டுகாலம் வசிக்க வேண்டி இருந்தது. தமிழ் நாட்டைக் காட்டிலும் புறநாகரீகத்தில் கன்னடமக்கள் பின்தங்கினவர்களாகவே எனக்குத் தென்பட்டனர், ஆயினும் பழகப் பழக அவர்கள் அக நாகரிகத்தில் ஓரளவு மேம்பட்டவர்கள் என்று என்னை எண்ணுமாறு நடைமுறை ஒழுக்கம் அவர்களிடம் இருப்பதை நான் கண்கூடாகக் கண்டேன்.

பெரும்பாலும் கல்வியே இல்லாத கிராமவாசிகள் கூட அகச்சுத்தமுள்ளவர்களாகவே இருந்தனர். இன்மை காரணமாய் அவர்களிடம் ஈகையைக் காணவில்லை எனினும், உள்ளங்களில் 'இரக்கம் இருப்பதைக் கண்டேன்'. சத்வம் 'பெருங்காயமிட்டிருந்த பானைபோல் முதலில் இருந்திருக்கலாம் என்பதும் தெரிந்தது. சத்யமே தருமம்' என்பது அவர்கள் அறிந்துள்ளனர்.

ஒரு நாள், ஒரு வாலிபன் தன் வீட்டுத் திண்ணையில் குந்திக்கொண்டு தன் தாய்மொழியில் ஒரு பாட்டைப் பாடிக்கொண்டிருந்தான்.

| | | | |
|---|---|---|---|
| 'சத்ய | வேனன்ன | தாயி | தந்தே, |
| தத்ய | வேநன்ன | பந்து | பழகவு; |
| சத்ய | வாக்கிகே | தப்பி | நடதரே |
| மெச்ச | ணாதெவ் | தீசனுக! | என்று. |

அவன் குரலில் பண்ணமைந்திருக்கவில்லை; எனவே இனிமை இருக்கவில்லை தாளக் கட்டில்லை. ஆயினும் அந்தப் பாடலில் அறிவார்ந்த சத்தியமிருந்தது. அவனுடைய உள்ளம், அந்தச் சத்திய ஈடுபாட்டில் இரண்டற்று ஒன்றி வெளிப்பட்டும் கொண்டிருந்தது. இது நிற்க,

'சத்தியமே வெல்லும்' என நாம் சொல்லிக்கொள்வதனால் மட்டும் எதையும் நாம் வென்று விட முடியாது. நம்முடைய உள்ளத்தில், உரையில், செயலில் அந்தப் பேருண்மை ஒன்றியிருந்த தெனில் வெற்றி நம்முடையதாகவே இருக்கும். 'தெய்வசக்திக்கு என்றும் தோல்வி இல்லை' என்பது உலகில் பல ஞானிகள் மூலம் ஏற்கனவே நிரூபிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் தமிழர்களாகிய நாம்

உண்மையான தெய்வீகத்தை அறவே இழந்து விட்டோமெனச் சொல்ல நான் வெட்கப்பட்வில்லை. வெறும் பணத்தைக் கொண்டு மனிதன் மகோன்னத நிலைக்குச் சென்றுவிட இயலாது. நாட்டில் அமைதியிருக்காது; ஆனந்தமும் இருக்காது.

உடைமை உடலுக்கானது; உண்மை உள்ளத்திற்கானது. ‘தத் யத் தத் சத்ய மசௌன சதித்யோ!’ அந்தச் சத்தியம் எதுவோ அதுதான் இந்த ஆதித்யன்

உண்மையைக் கைவிட்ட உடைமையும், உருவ வழிபாடும் மக்களை அழிவுக்குத் தள்ளிக்கொண்டு செல்கிறது.

■

- ‘குப்பை’ இது ஒன்றுதான் நாட்டில் எல்லாவற்றையும்விட மிக அதிகமாக ஒவ்வொரு நாளும் உற்பத்தியாகிக் கொண்டிருக்கும் பொருள்.

  – ஸ்ரீன் ஆலின்

- சத்தியில்லாத உணவும், சத்தியமில்லாத கல்வியும், உடலுக்கும் உளத்துக்கும் உறுதியளிக்காது.

  ‘ஒன்றே குலம் – ஒருவனே தேவன்’ என்றார் திருமூலர். ஆனால், ‘முப்பத்து முக்கோடி தேவர்கள்’ என்று மொழிகிறான் தமிழன்.

  நெஞ்சுரமில்லாதவன், ஐந்தடுக்கு மாளிகையில் வசித்தாலும் அஞ்சியே சாகிறான்.

  – வெ.

# 7

தவம்

கூடிநாயைக் கண்ட திடகாத்திர வாலிபன், கைக்குக் கிடைத்த கல்லையெடுத்து வீசுவதுபோலவே! நமது திருமூலர் சொல்லையெடுத்து வீசுவதில் ஒரு நிபுணர். கருணையோ கவலையோ இன்றிச் சொல்லைக் கொண்டு மூடர்களைச் சாடுவதோடு புரியாத ஒன்றைப்புரியவும் செய்து விடுவார்.

மக்கள் முகத்தில் இரண்டு கண்கள் இருப்பது உலகிலுள்ள அனைத்தையும் காண்பதற்காகவேதான். காண்பதற்கன்றிக் கண்களால் வேறு பயனெதுவும் இல்லை. ஆனால் இந்த முகக் கண்களைக் கொண்டு பார்த்தே தீரவேண்டிய அனைத்தையும் பார்க்க முடியாது. அத்தகையவற்றை நாம், நம் அகக்கண்ணைக் கொண்டே பார்த்துத் தீரவேண்டும்.

திருமூலர் பேசுகிறார். 'முகத்துக் கண்கொண்டு பார்க்கின்ற மூடர்காள் அகத்துக் கண்கொண்டு பார்ப்பதே ஆனந்தம்', என்று ஒலிஅறிகருவி, மனமறிகருவி சுவையறிகருவிகள் போலப் பண்பறிகருவிதான் மனம். மனதும், இந்திரியங்களும் ஒருமுகப்பட்ட நிலையே தவம்' என்று உபநிசத்து விளக்கம் செய்கிறது. இது மிகச் சரியான விளக்கம்.

'பொறிவாயில் ஐந்தும் அவித்தானது பொய்தீர்ந்து (மெய்யான) ஒழுக்க நெறிதான் தவம் என்கிறது நமது தமிழ் வேதமாகிய திருக்குறள். 'உற்றநோய் நோன்றல், உயிர்க் குறுகண் செய்யாமை இவ்வளவுதான் தவம் எனும் சொல்லின் பொருள், என்றும் வேறு குறட்பாவில் நமக்கு விளக்குகிறார். மேலும் விவரித்துக்கொண்டு செல்கிறார். தவமும் தவம் உடையாருக்கு மட்டும் ஆகும்; மற்ற எல்லாருக்கும் ஆவதொன்றன்று, என்கிறார். ஒன்னார்த்தெறலும் உவந்தாரை யாக்கவும் தவத்தினால் முடியும் என்கிறார். வேண்டிய வேண்டியாங்கு எய்தலாம், ஏனைய மண்ணுயிரெல்லாம் தொழத்தக்கவராகவும் நம்மை இந்தத் தவம் செய்து உயிர்ப்பித்து உலகில் நிரந்தரமாக இருக்க வைக்கும், என்றெல்லாம் சொல்லுகிறார்.

ஆஆ ! இந்தத் தவம் எனும் சொல்லில் எவ்வளவு மகத்தான சக்தி அடங்கியுள்ளது. என்று இப்போது நமக்கும் கொஞ்சம் புலப்படுவது போல் தோன்றுகிறதல்லவா ?

மகத்தான சக்திவாய்ந்த இந்தத் தவம் எனும் சொல் குறிக்கும் , பொருள் இன்றைய உலகிலுள்ளவர் கருதுவது போன்ற பொய்மைகள் எதையும் தன்னுள் வைத்துக்கொண்டிருக்கவில்லை. வீடுவாசலை விட்டு, மனைவிமக்களை மறந்து கானகத்திற்குச் சென்று, இலைசருகு, கந்த மூலங்களைத் தின்று, சடைகளை வளர்த்தி காசாய தாரியாக நம்மை நாம் மாற்றிக்கொள்ள வேண்டிய அவசியமும் இல்லை. நாம் என்ன செய்யவேண்டும் என்பதை வள்ளுவரே நமக்கு மற்றொரு குறளில் மழித்தலும் நீட்டலும் (போன்றன எதுவும் நீ செய்ய வேண்டாம்; உலகம் (சான்றோர்) பழித்த தனைத்தையும் ஒழித்துவிட்டால் அது போதும்', என்கிறார்.

மேலும், 'சார்புகள்' என்பன நல்லன தீயன என இருவேறு வகையில் உள்ளன. நல்லனவான சார்புகள். ஈவு, இரக்கம், பரிவு, பணிவு, அடக்கம், ஒழுக்கம் உண்மை பேசுதல் போன்றன. கைக்கொண்டு மாறானவற்றை ஒதுக்கிவிட்டு, நாம் மேற்கொண்ட தொழிலைச் செவ்வனே செய்து கொண்டிருப்பது தான் தவம், அல்லது நோற்றல் என்னும் பதப்பொருள். ஆனால் உண்மையை நாம் புறக்கணித்துப் புராணப்புளுகுகளை நம்பினோம்; அருச்சுனன் சிவனை நோக்கித் தவம் செய்து பாசுபதாஸ்திரம் பெற்றான். இராவணன் சிவனை நோக்கித் தவஞ்செய்து ஒன்றரைக்கோடி ஆண்டு ஆயுளைப் பெற்றான் என்பன போன்ற பொய்களால் நாம் முறைதவிர்க்கப் பட்டோம். நமக்குப் புறம்பாகத் தெய்வம் உள்ளது. என்று உபதேசிக்கப் பட்டோம். 'தத்துவம் அசி' எனும் சூத்திரம் அதுநீயாக உள்ளனை, என்று சொல்லியிருந்தும் அதை மறைத்து நமக்குப் பொய் உபதேசம் செய்து அதோகதிக்கு உள்ளாக்கி உள்ளனர். நமது முன்னோர் இதை நாம் அறியாதுள்ளோம்.

இதை நிரூபிக்கக் இன்னும் ஒரே ஒரு விபரம் மட்டும் இங்கு கூற விரும்புகிறேன். உன் உள்ளத்தில் இன்னும் மீதி மிச்சங்களாக இருக்கும் ஐயங்களை அந்த எடுத்துக்காட்டு நிச்சயமாக அகற்றிவிடும் என்று நான் உறுதியாக நம்புகிறேன். அது ஒரு அற்புதமான சூத்திரம், மறுக்க முடியாத, படிக்கும் ஒவ்வொரு புலவனும் ஒத்துக்கொண்டே தீரவேண்டிய சூத்திரம் ; திட்பநுட்பமாகப் பொருளையும் விளக்குகிறது.

'நாஸ்தி சத்யா சமன் தப' என்பது தான் அது. இதன் பொருள், சத்தியத்தற்குச் சமமெனச் சொல்லத்தக்க தவம் வேறெதுவொன்றும் இல்லை, என்பதுதான் நாம் சத்தியத்தை இதயத்தில் நழுவி விழாது பதித்துக் கொண்டோமாயின், அது காட்டும் அறவழி ஒழுக்கத்திலிருந்து இம்மியளவும் வழுவாது நம்மை அது நடத்திச் செல்லும். அப்போது இதுகாறும் நம்மோடொட்டி உறவாடி நண்பர்களாகி வாழ்கின்ற மற்றவர்களுடைய எண்ணம், சொல் செயல்களுக்கு மாறுபடுகிறோம். நம்மை அவர்கள் பகைக்கிறார்கள். அதிலும் கொஞ்சம் காசுத்தாசர்களின் கண்கள் சிவப்பேறவும்

தவிர்க்காது; துன்புறுத்தவும் உடனே அவர்கள் துணிந்து விடுவர். சாக்ரட்டீசுக்கு விசம் கொடுத்துக் கொன்றது இதற்கு ஆதாரம். ஆப்ரகாம் லிங்கன், மகாத்மா காந்தி, இந்திரா காந்தி எத்தனை ஆதாரங்கள் வேண்டுமெனினும் கைவசம் உண்டு.

எனவே தான் இத்தகையவர்களால், 'உற்ற நோய் நோய் நோன்றல் உயிர்க் குறுகண் செய்யாமை அற்றே தவத்திற்கு உரு', என்று வள்ளுவர் தம் முதற்குறளிலேயே நம்மை எச்சரித்து விடுகிறார்.

திருக்குறளை, ஆதர்சநூலாகப் பெற்ற நாம் அதைப் புரிந்தொழுகாதது தவறு; ஆமாம் இந்தப் பெருந்தவறை இனிமேலாவது செய்யாது நம்மை நாமறிந்து; தெய்வ நிலையறிந்து வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வத்துள் ஒருவனாக வைத்துப் போற்றுமாறு நம் ஒழுக்கத்தை மாற்றியமைத்துக் கொள்ளத் துணிந்து தொடங்குவோமாக!

ஓம் சத்யமேவ ஜயதே!

■

- நியாயத்தை விட்டு விட்டு நியாயம் பேசும் நாய்க்கு நரகம் கிட்டாமல் போகுமா?

  – கனகதாசன்

- எட்டிக்கனி வனப்பாய் இருக்கலாம். வட்டிக் கடைக்காரனும் வனப்பாய் இருக்கலாம், அதனிடம் இனிப்பிருக்காது. இவனிடம் இரக்கம் இருக்காது.

  – வெ.

- நாம் தெய்வமாக மாற விரும்புவதற்கு முன் மனிதனாக வாழக் கற்றுக் கொள்ள வேண்டும்.

  – ப.வா. வனமாலி

8

# சுவர்க்கம்

உலகிலுள்ள கோடானுகோடி மக்களின் உள்ளங்களில் நிரந்தரமாகக் குடியிருந்து கொண்டுள்ள கவர்ச்சிகரமான ஒருசொல் 'சுவர்க்கம்' என்று பெயர்கொண்டது இது ஒன்று தான். சரிவரப் பொருளைப் புரிந்து கொள்ளாத இந்தச் சொல்லின் முதலெழுத்து திரிந்து இரண்டாமெழுத்து கெட்டுச் 'சொர்க்கம்!' என இது வழங்கப்படுகிறது. இதே பொருள், தமிழில் துறக்கம், வீடு, மோச்சம் எனும் சொற்கள் மூலமும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

துறக்கம் எனும் சொல்லுக்குத் தேவலோகம் என்று அகராதி பொருள் கூறுகிறது. வானுலகம், அதாவது வானவர் வசிக்குமிடம் என்பது கருத்து. ஆயினும், 'பரலோகம்' என்பது தான் அதன் சரியான பொருள் எனக் கூறலாம்.

இகம், பரம் என்ற இரண்டு சொற்கள் மொழிகளில் வைத்து வழங்கப்படுவது யாவரும் அறிந்ததே. இகம் எனின் இப்பிறப்பு. 'பரம்' எனின் மோச்சம் என்று அர்த்தமாம். மனிதனாகப் பிறந்த நாம் வாழ்வு முடிந்து கடைசியாகப் போய்ச் சேருமிடம் மோச்சம் - தேவலோகம், எனப்படுகிறது.

வாழ்நாளில் இந்தத் தேவலோகம் போய்ச் சேர்வதற்கான தகுதியை நாம் அவசியம் தேடிக்கொள்ள வேண்டும். இதற்கு, இந்தக் காலத்தில் உள்ள ஒரே வழி 'பக்தி' மார்க்கம் எனப்படுகிறது. நடைமுறையில் உள்ளதும் இது ஒன்றுதான். ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளாக இந்தமார்க்கத்தையே நாடு முழுவதும் இந்து மதத்தினர் எனப்படும் நாம் பின் பற்றி வருகிறோம்.

ஒவ்வொரு மனிதசீவனும் தேவலோகமோ, அல்லது நரகலோகமோ போயே தீரவேண்டியது. அங்கு அவன் வாழ்நாளில் தேடிக்கொண்ட புண்ணியம் பாவங்களின் அளவுக்குத் தக்க காலம் சுவர்க்கத்திலோ நரகத்திலோ வசித்து முடித்து மறுபடியும். இதே நிலவுலகத்தில் வந்து பிறந்துவிட வேண்டும் என்று இந்து மத நூல்கள் நம்முடைய மனங்களில் திணித்து வைத்திருக்கிறது. நாமும், இதனை உண்மையென நம்பி நாடகமாடிக்கொண்டிருக்கிறோம்.

இந்தச் சுவர்க்கத்தை நாம் எளிதில் அடையும் சூக்கும வழிகளும் பழங்காலத்திலிருந்தே வழங்கி வருகின்றன. புண்ணியம் புரியாது,வெறும் பாவமே செய்து வந்திருந்தாலும் அதனால் கெட்டுபோனது யாதொன்று மில்லை; மார்கழி மாதம் ஏகாதசி விரதம் சரிவர இருந்து விட்டால்போதும் சுவர்க்கத்தில் நமக்கு இடம் ஒதுக்கப்பட்டு விடும் என்று நம்மில் பலர் நம்புகிறார்கள். இந்தச் சுவர்க்கத்துக்கு ஆசைப் படாதவர்கள் ஒரு சிலர் கூட இல்லை. ஆசைப்படுகிறவர்கள் இந்து மதத்தில் பெரும்பான்மையாயுள்ளனர். மேலும் ஒரு விபரம்.

நமது தமிழ் வார இதழில் ஒருசிறுகதையில், எப்போதோ படித்த நினைவு. 'திருமணங்கள்' சுவர்க்கத்தில் நிர்ணயிக்கப்படுகின்றன, என்று. எல்லாம் வல்ல ஒருவர் அந்தச் சுவர்க்கத்தில் நமக்காக இருந்து கொண்டு, இன்னார்க்கின்னார் என்று முடிபோட்டு விட்டால் அப்படியே தான் அது முடியும், முடிந்து மூன்று மாதம் முடிவதற்குள், மண்ணெண்ணெயோ, வேறு உயிர்நீக்கும் மருந்தோ

அப்பெண் வரதச்சணையின் காரணமாகத் தன்னைத் தான் மாய்த்துக் கொள்வதும் அந்தச் சுவர்க்கத்திலேயே நிச்சயிக்கப்பட்டு விட்டது என்று நாம் சொல்லித் தப்பித்துக் கொள்ளவும் கூடும், அவனன்றி அணுவும் அசையாது எல்லாம் அவன் செயல்தானே? நம்மேல் சுமத்தப்பட்டுள்ள மதபோதனையில், அந்த எல்லாம் வல்ல இறைவன் முழுப்பொறுப்பையும் தானே வைத்துக் கொண்டிருக்கிறான். ஆட்டுவித்தால் யாரொருவ ராடாதவரே என்னும் அருமை வாசகம் பொய்யாயிருக்க முடியுமா?

இங்கு விளக்கத்திற்கு ஒரு வார்த்தையைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நான் இம்மாதிரி எழுதுவது மட்டும் அந்த இறைவன் செயல் என்று எந்த ஒருவாயிலிருந்தும் ஒரே ஒருசொல் உதிராது. இவனொரு நாத்திகன் என்ற பட்டம் சூட்டவும், இறைவனடியார்கள் மறந்தும் தவிர்க்க மாட்டார்கள்.

'அகம் பிரம்மாஸ்மி'! என்று சொல்லவே இவர்கள் வாய் தயாராயில்லை தெய்வம் பாற்கடலில் ஆலிலைமேல், அல்லது ஆதிசேடன் மேல் பள்ளிகொண்டுள்ளார் என்று தான் அவர்கள் படிக்கப்பட்டுப் பழக்கப்பட்டுள்ளனர். பரலோகம், தேவலோகம், துறக்கம், வீடு என்பன போன்ற சொற்கள் அனைத்தும் இடப்பெயர்ச் சொற்கள்தான் என்பதில் எனக்கு முரண் இல்லை ; ஆனால், 'நரகம், சுவர்க்கம்' எனும் சொற்கள் இடம் பெயர் குறித்து வழங்கி வந்தன எனில் நான் ஒத்துக்கொள்ள மாட்டேன். ஏனெனில் சுவர்க்கம் எனும் இந்தச் சொல்லின் பிறப்பு அமைப்பில் இன்னும் வேறு சொற்களும் உள்ளன. மாதிரிக்கு ஒரு சில இங்கு எடுத்தெழுதுகிறேன்.

சு+வர்க்கம் = சுவர்க்கம் எனச் சேர்ந்து ஒலிப்பது போலவே, சு+மதி, சு +தருமம், சு+கந்தம், சு+சீலம் சு+வர்ணம், சு+மங்கிலி, சு+தந்திரம், போன்ற சொற்களும் உள்ளன. 'சு' எனும் எழுத்து, மதி, தருமம், கந்தம் சீலம் போன்ற சொற்களை விசேடிக்க வந்தது. நல்ல எனும் பொருள் தருவது என்று எளிதில் விளங்குகிறதல்லவா? எனவே சு+ வர்க்கத்தின் கதையும் இதுவேதான். வருக்கம் எனும், இரண்டாமெழுத்தின் உயிர்கெட்டு 'வர்க்கம்' என வழங்குகிறது. வர்க்கம் = கூட்டம், வகுப்பு என்றுதான் அது பொருள் தருகிறது. இதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

சுவர்க்கம், நரகம் எனும் இவ்விரண்டு சொற்களும் எந்தக் காலத்தில் எவ்வாறு பிறந்து மொழியில் கலந்து எவ்வாறு பொருள் வேறுபட்டு உயிர் வாழ்கின்றன என்பதையும் இனி நீ அறிந்து கொள்வது அவசியமாகும்.

'தேவாசுர யுத்தம்' எனும் சொற்றொடர் ஒன்று மொழியில் உள்ளது. இதைத் தமிழ்படுத்தினால் ஆரியத் திராவிடப்போர் எனப் பொருள்படும்.

ஆரியர் தம்மைச் சுரர் என அழைத்துக்கொண்டனர். திராவிடமக்களை. சுரர் அல்லாதவர், (அசுரர்) நரர் எனும் சொற்களில் குறிப்பிட்டு வந்தனர். இவர்களுக்கிடையில் பண்டைக்காலத்தில் ஓயாது போர்கள் நடந்தவாறிருந்தன. அவற்றில் தேவேந்திரனுக்கும், விருத்திராசுனுக்கும் நடந்தபோர் முக்கியத்துவம் வாய்ந்தது. இந்தப் போரைப் பற்றிக் கல்லாடர் என்ற புலவர், கல்லாடம் எனும் தம்நூலில் குறிப்பிடுகிறார்.

'பைகுடப் பிறையெயிற் றாக்கனைக் கொன்று, வச்சிரத் தடக்கை வரைப்பகை சுமந்த - பழவுடல் காட்டும் தீராப் பெரும்பழி' - எனவும்,

'வட புலமன்னர் வாட அடல்குறித்து. இன்னா வெம்போர் இயல்தேர் வழுதி, இது நீ கண்ணீயதாயின் இருநிலத்து யார்கொல் அளியர்தாமே', என்று மருதனிள நாகனாரின் புறநானூறில் ஆரிய திராவிடப்போரைக் குறித்து விவரிக்கின்றதைக் காணலாம்.

அந்தக் காலகட்டத்தில் பொதுமக்களுக்குள் இயல்பாக நாட்டைப் பற்றிப் பேச்சு வரும்போது, 'நீ எந்தக் கூட்டத்தை (வருக்கம்) ஆதரிக்கிறாய் எனும் வினா எழும்போது, நான் சுரவர்க்கத்தையே விரும்புகிறேன். எனவும், நான் நரவர்க்கத்தை ஆதரிக்கிறேன் எனவும், பேச்சுவாக்கில் பயின்று வந்த சொற்றொடர்கள்தாம் இவை இரண்டும்.

நீண்ட ஒரு காலப் போக்கில் தன் உருவிழந்ததுடன் பொருளும் இழந்துவிட்டது என்பதை நீ இனிமேலாயினும் புரிந்துகொள்ள வேண்டும்.

'எப்படி உருமாறிற்று, பொருள் மாறிற்று', என்ற வினா உன் உளத்திலிருந்து வெளிவரவில்லை; ஆயினும் நான் உனக்கு விளக்கிக்கூறவே விரும்புகிறேன்.

என் அருமை நண்பனே! கவனித்து கேள். வாலும் கிண்ணமும் சேர்த்து முதலில் நம் வீட்டு உபயோகத்துகென அமைத்த கருவி ஒன்று 'வால்கிண்ணம்' எனப்பெயர் பெற்றிருந்தது. தற்காலத்தில் அதன் பெயர் அது வரக்கணம் என்று திரிந்துள்ளது - அதே மாதிரியாய் 'அரிய மருந்தன்ன பிள்ளை' எனும் சொற்றொடர் அருமந்தப் பிள்ளையெனத் திரிந்து விட்டதை போலவே சுர்வர்க்கம் எனும் சொற்றொடர், தன் இரண்டாமெழுத்தான இடையின உயிர்மெய்யெழுத்து ஒன்று மக்கள் உச்சரிப்பிலிருந்து அறவே கழற்றிக்கொண்டுவிட்டது. நின்றநிலையில் அது சுவர்க்கமாயிற்று. நரவர்க்கம் எனும் சொற்றொடர் இடையிலிருந்த (வர்க்) வகர உயிர்மெயும் கூட இரண்டு ஒன்றுகளும் கழன்று போய் முதலும் இறுதியுமான நரவர்க்கம் = நரகம் என வழங்கி வருகிறது.

இவை ஏற்கனவே சூழ்ச்சிகாரர்களால் இடப்பெயராய்ச் சுவர்க்கம், நரகமெனக்கூறிச், சுவர்க்கத்தை இந்திரனும், நரகத்தை எமதர்மராஜனும் ஆண்டு வருவதாகக் கதைகட்டி மக்களைக் குருடாக்கி விட்டனர் என்பதுதான் உண்மை.

நாம் பராதீனராகவே இன்றும் உள்ளோம். சுயமாகச் சிந்திக்கும் பழக்கமே நம்மிடம் இல்லாதிருக்கிறது. எனவே, நான் சொல்கிறேன். சிந்திக்கத் தெரியாத ஒவ்வொரு மனிதனும் சிறுமைக்குள்ளாகிறான். என்று.

■

- ஆசையுள்ள பணக்காரனை விட ஆசையற்ற ஏழை அமைதியாக வாழ்கிறான்.

– ஏங்.எம்.

# 9

# கோவில்

உணர்வு பிறந்ததிலிருந்து உலகை விட்டு மறையுங்காறும், ஆணும் பெண்ணுமாகியுள்ள அனைவருடைய உள்ளங்களிலும் குடிகொண்டிருக்குங் கோயில் எனும் சொல். மதிப்புக்குரிய ஒருசொல் இது. அரசன்மனை, தேவாலயம் எனும் இருபொருள் குறித்து வருவதெனினும், இன்று தேவாலயம் என்ற ஒரே பொருள் தருவதற்கு உரிமை பெற்றுள்ளது.

மனிதன், இந்த மண்ணில் உற்பத்தியான காலம் சரியாகக் கணித்து, இன்னது எனக்கூற மனிதனால் இயலாதுள்ளது. 'உத்தேசமாக 12, 16, 20 லட்சம் ஆண்டுகளுக்கு முன் தோன்றி இருக்கலாம்' என்று கூறுவதைத்தான் நான் கேட்டிருக் கிறேன். எனினும், பழைய கற்காலம்

நூறாயிரம் ஆண்டுகளுக்குள்ளென்றும் புதிய கற்காலம் ஐம்பதினாயிரம் ஆண்டுகளிலிருந்தென்றும், இருப்புக்காலம் தொடங்கிப் பத்தாயிரம் ஆண்டுகளாயிருக் கலாமென்றும் எப்போதோ எந்த நூலிலோ படித்த நினைவு இருக்கிறது.

அடுத்து ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்வரையிலும் மனித குலம் வரை முறையின்றி ஏறக்குறைய விலங்கு பறவைகள் போல்தான் வாழ்ந்து வந்ததாக, ராகுல சாங்கித்வனின் வால்காவிலிருந்து கங்கை வரை எனும் நூல் நமக்குத் திட்டவட்டமாகத் தெரிவிக்கிறது. அப்போதெல்லாம் இந்தத் தெய்வங்களும், கோவில்களும் இருந்திருக்கவில்லை என்று நாம் உறுதியாக நம்பலாம், கூறலாம்.

இயற்கையைப் பற்றிய ஆராய்ச்சியும் அதன்பின் தான் தோன்றிற்று; சுரைப்புருடைகளில் நீர் நிரப்பி வைத்துகொண்டு தொன்னைகள் அல்லது மூங்கில் கோல்களில் முகந்து பருகிய காலத்திலிருந்து படிப்படியாக மனிதன் முன்னேறிவந்தகால கட்டத்தை நாம் தமிழ் நூல்களில் காண்கிறோம். ஆடைக்குப் பதில் தழையுடையணியும் செய்திகளும் காண்கிறோம். 'ஒன்னாத் தெவ்வர் முன்னின்று விலங்கி' ஒளிரேந்து மருப்பின் களிறெறிந்து வீழ்ந்தெனக் கல்லே பரவி னல்லது - நெல்லுகுத்து பரவும் கடவுளுமிலவே என ஒரு கோவிலும் தெய்வமும் இல்லாததையும் பார்க்கிறோம்.

இதே கால கட்டத்தில் ஆரியர்களுள் சிலரும் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தனர். நாம் நிலம், நீர், உழவு, உணவு, உடை, குடில் மாடு கன்றுகள். இன்னும் இரும்புத் தொழில், நெசவுத்தொழில் மண்பாத்திரத்தொழில் என உளமொன்றி, ஈடுபட்டுக்கொண்டிருந்த நிலையில், ஆரியரில் சிலர், பூமி, அந்தரிச்சம், வானம், திசைகள், திசைமூலைகள், அக்கினி வாயு, ஆதித்தியன், சந்திரன், நட்சத்திரங்கள் - நீர், செடி கொடிகள், மரங்கள், ஆகாயம், ஆத்மா - என ஆராய்ந்தனர்.

கூடவே, எந்தக் கிரணங்களால், ஆதித்தியன் காய்கிறானோ அதனால் நீர், மேகமாகி மழைபெய்கிறது. மேகமழையால் செடிகொடிகளும் மரங்களும் உண்டாகின்றன. இவற்றிலிருந்து உணவு உண்டாகிறது. அன்னத்தால் 'பிராணன்கள்' பிராணன்களால்

பலம், பலத்தால் தவம், தவத்தால் சிரத்தை, சிரத்தையால் கூரியபுத்தி, கூரியபுத்தியால் திடமான சங்கல்பம், திடமான சங்கல்பத்தால் மனத்தெளிவு, மனத்தெளிவால் சாந்தி, சாந்தியால் நிலையான சித்தம், நிலையான சித்தத்தால் உண்மை மறவாமை, உண்மையை மறவாமையால் அதையே இடைவிடாது நினைத்திருத்தல், அத்தகைய நினைவால் விஞ்ஞானம், விஞ்ஞானத்தால் ஆத்மாவை (தெய்வம்) ஒருவன் உணர்ந்தனுபவிக்கிறான். ஆகையால், அன்னத்தை, அளித்த ஒருவன் இவையனைத்தையும் அளிக்கிறான். அன்னத்திலிருந்து பிராணிகளுக்குப் பிராணன்கள் வளர்கின்றன; பிராணன்களால் மனதும், மனதால் விஞ்ஞானமும், விஞ்ஞானத்தால் ஆனந்தமும், அதனால் உலகின் தோற்றுவாயாகிய பிரம்மமும் அடையப் படுகிறது என்று அறுதி செய்தனர்.

இந்தக் கருத்தைச் சூத்திரமாக்கினர்; அன்னமயகோசம், பிராணமயகோசம், மனோமய கோசம், விஞ்ஞானமயகோசம், ஆனந்தமயகோசம் என்று. வேறு ஒரு ரிசி மனோமய, பிராண சரீரோ பாரூபா; சத்ய சங்கல்ப; ஆகா சாத்மா, என்று சூத்திரம் செய்துள்ளார்.

'அந்தப் பிரம்மம், மனோவடிவமாயுள்ளது. உயிரை உடலாய்க் கொண்டுள்ளது. சத்தியமே சங்கல்பம் - குறிக்கோள் ஆகாசம் போலும் அதுவே ஆத்மா - பிரம்மம்', என்கிறார் இன்னொரு ரிசி.

'எதஸ்ய பிராமணோ நாம சத்யமிதி' அந்திம பிரம்மத்தின் பெயர் சத்தியம் என்கிறார் மற்றொரு ரிசி எப்படிப் பார்த்தாலும் சத்தியம் தான் பிரம்மம் என்பது உபநிசத்துகளின் முடிந்த முடிவு. இதைமாற்ற முடியாது.

திட்டவட்டமாகத் தெய்வம் என்பது இதுதான்; - அதாவது சத்தியம்தான் என்று தெரிந்திருந்தும், அதை மக்களுக்குச் சரிவர எடுத்து விளக்கிக் கூறி ஒழுக்கத்தை ஓம்பச்செய்து. உய்விக்க மனமில்லாத சூழ்ச்சிக்காரர் கோவில்களைக் கட்டி குடமுழக்கு விழா கும்பாபிசேகவிழா எனக் கொண்டாடிக் கொண்டுள்ளனர்.

இவர்கள் இப்படியே இருக்கட்டும். நாம் இந்தக் கோவில்களைப் பற்றி இனி கொஞ்சம் ஆராய்ந்து பார்க்கலாம். 'எப்பொருள்

எத்தன்மைத் தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறி'வெனக் குறள் கூற்றினை நாம் மறந்துவிடக் கூடாதல்லவா?

கி.மு.நான்காம் நூற்றாண்டுக் காலகட்டத்தில்தான் சாணக்கியன் என்பவர் 'அர்த்த சாத்திரம்' எனும் நூல் இயற்றினார். என்று அறிஞர் அறிவித்துள்ளனர்.

அந்த அர்த்த சாத்திரம் ஐந்தாவது ஆதிகாணம் 2-ம் அத்தியாயத்தில் கோஸாபிசம்கரணம் - 336-ம் பக்கம் உள்ள செய்தியைக் கன்னடத்திலிருந்து இங்கு தமிழில் பெயர்க்கப் படுகிறதைச் சற்று உற்றுக் கேட்டு யோசனைசெய்துபார்.

'தேவாலயங்களின் முக்கிய அதிகாரியாயிருப்பவர், மலைகளிலும், தேசத்திலும் உள்ள கோவில்களில் அன்றுவரை சேர்ந்திருக்கும் செல்வம் அனைத்தும், பகைவர்கள் காரணமாக ஓர் இடத்திற்குத் திரட்டிக் கொண்டுவந்து அரசனிடம் ஒப்படைக்க வேண்டும்'. அதுவுமன்றி இரவு நேரத்தில் மக்கள் போக்குவரவற்ற பிரசித்தமான எழில்மிக்க இடங்களில், சிவலிங்கத்தை நிர்மாணித்து, இது தானகாவே பூமியிலிருந்து உதித்த சுயம்புலிங்கம் என்று பிரசாரம் செய்து, மேடைகட்டி, திருவிழாக்களை ஏற்படுத்தி மக்கள் திரண்டு வந்து சேரும்படி செய்து, கடவுள் பெயரால், பணம் சேகரிக்கவும் வேண்டும்!.

'பருவமல்லாத காலத்தில் ஏதாவது ஒரு மரத்தில் செயற்கை முறையில் பூக்களை உண்டுபண்ணிக்காட்டி, இது தெய்வத்தின் மகத்துவம் என்று பிரசாரம் செய்து, தவிசிவேசம் போட்டுக் கொண்டுள்ள ஒற்றறிநிபுணன் ஒருவன், சுடுகாட்டின் கண் உள்ள ஒருமரத்தில் இராச்சதன் வேசம் போட்டுக்கொண்டு எனக்கு ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு மனிதனைப் பலிகொடுக்க வேண்டும். இல்லையென்றால் ஊரிலுள்ள அனைவரையும் சர்வ நாசம் செய்திடுவேன்' என்று க்ரூரமான குரலில் பிரசாரம் செய்து அதை நம்பி பலிகொடுக்க வந்த மனிதனுக்குப் பதிலாகப் பொது மக்களிடமிருந்து பெருந்தொகையான பணத்தை வசூல்செய்து அரசனிடம் கொண்டுவந்து ஒப்படைக்க வேண்டும்.

தேவாலயமதில் சுவற்றிலோ, புற்றுகளிலோ வங்குகளில் இருந்து வெளியே வந்த நாகபாம்பைப் பார்த்தால், மந்திரதந்திரத்தினால், அல்லது மருந்தினால், அதன் போக்கைத் தடுத்து இருக்கச் செய்து, 'இது தெய்வத்தின் பிராயத்தினால் வெளியே வந்துள்ளது', என்று விரும்புகின்றவர்களுக்கு அதனைக் காண்பிக்க வேண்டும். சிரத்தை காட்டாது அதைக் கிண்டல் கேலி செய்கின்றவர்களுக்குக் குடிதண்ணீரிலோ, மேலே தெளிப்பதிலோ நினைவு நீங்கும் அளவு விசத்தை உபயோகப்படுத்தி, "நாக தெய்வத்தின் கோபத்தினால் நினைவு தப்பியுள்ளது" என்று செய்திபரப்பிட வேண்டும். இதுவுமின்றி இரவு வேளையிலும், அரநிந்தனை, தெய்வநிந்தனை செய்கின்றவர்களை விசப்பாம்பினைக் கொண்டு கடிக்கவைத்துக் கொன்று இவையெல்லாம் தெய்வ தண்டனை" என்று கூற வேண்டும். தக்க மருந்துகளைக் கொடுத்து விசம் நீக்கி அவர்களிடமிருந்து கூடிய அளவு பெருந்தொகையான பணம் பெற்றுக் கொண்டுவந்து அரசரிடம் சேர்ப்பிக்கவேண்டும்.

இவை ஒரே பாராவில் அடங்கியுள்ள விசயங்கள் மட்டும். மேற்கொண்டு எழுதினால் என்னையே, இன்றுள்ள சாணக்கிய சந்ததிகள் இப்படியே செய்து தீர்த்துக் கட்டிவிடுவார்களோ என்று என்னையும் எண்ணச் செய்கிறது.

எனினும் நான். அஞ்சமாட்டேன். உண்மைகளைக் கண்டு வெளிப்படுத்தவதில்தான் நான் முழுமனிதனாகிறேன். அவர் கையால் கொல்லப்பட்டால் அமரனும் ஆகிறேன். இது நிற்க.

இந்தச் சாணக்கிய சந்ததிகள் மக்களை பேதோபாயத்தால் இவ்வாறு சர்வநாசம் செய்து வருவதனைக் கண்டு உளம் வருந்தி நல்லோர் உண்மைகளை உள்ளதுள்ளவாறு தமிழ் மக்களுக்கு அக்காலத்திலேயே தெள்ளத்தெளிவாக செப்பித்தேற்று வித்துள்ளனர்.

'தெய்வம் உள்ளது'; ஆனால் அதை நாம் உள்ளதுள்ளபடி அறிந்து கொள்ளவேண்டும்; என உண்மையையே உரைத்துள்ளனர். திருமூலர் தெரிவிக்கின்றார்.

**சிந்தைய தென்னச் சிவனென்ன வேறில்லை**
**சிந்தையி னுள்ளே சிவனும் வெளிப்படும்;**
**சிந்தை தெளியத் தெரியவல் லார்கட்குச்**

சிந்தையி னுள்ளே சிவனிருந் தானன்றே
ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின், நமனில்லை நாணுமே
சென்றே புகுங்கதி யில்லைநும் சித்தத்து
நின்றே நிலைபெற நீர்நினைந் துய்மினே.

இவ்வனைத்தும் உபநிசத்துக் கருத்துக்கள்தான். கோவிலில் தெய்வம் குடியிருக்காது என்று கூறும் பாட்டைப்பாருங்கள்.

'மாடத்து ளானலன் மண்டபத் தானலன்
கூடத்து ளானலன் கோயிலுள் ளானலன்
வேடத்து ளானலன்,' என்று மறுத்து விட்டு

'வேறு எங்குள்ளான் அந்தச் சிவன்' எனும் வினாவுக்கு 'வேட்கை விட்டார் நெஞ்சில், மூடத்துளே நின்று - முத்தி தான்' என்று கூறுவதை நாம் தெரிந்து கொள்ள வேண்டாமா?

இவரைப் போன்றே பதினென்சித்தர்களிலொருவராகிய சிவவாக்கியர் கூறுவதையும் நாம் சிந்தித்துப் பார்க்கவே வேண்டும். இவர் கூறுகிறார்.

நட்ட கல்லை தெய்வ மென்று நாள்மலர்கள் சார்த்திநீர்
சொட்ட நின்று முணுமு ணென்று சொல்லு மந்தர மேதடா!
நட்ட கல்லு பேசுமோ? நாத னுள்ளி ருக்கையில்
சட்டி சுட்ட சட்டுவம் கறிச்சுவை யறியுமோ?

எனும் பாட்டு, எவ்வளவு தெளிவாய்த் தெய்வ நிலையை உளம்படியுமாறு விளக்கி உண்மையை உணர்த்துகிறார்.

இந்த இருபதாம் நூற்றாண்டின் உலக மகாகவி எனப் புகழப்பட்ட கவி ரவீந்தரநாத் தாகூர் 1913-இல் நோபல் வெகுமதி 8000 பவுன்கள் பெற்றவர். உலகமெலாம் அறிந்தவர் தமது கீதாஞ்சலியில் கூறுவதையும் நாம் சற்று பார்க்க வேண்டாமா? அதில் உள்ள உண்மையை எடுத்துக்கொள்ள நாம் தயக்கமடைய வேண்டிய அவசியமே இல்லையே !

"ஜபமாலை உருட்டுவதை விட்டுவிடு ! மந்திரமும் தந்திரமும் ஆடலும் பாடலும் அவனைக் காட்டமாட்டா! தாளிட்ட அடைபட்ட கோவிலின் இருளடைந்த மூலையில் யாரைப்

பூசிக்கிறாய் கண்களைத்திறந்து, உன் கடவுள் உன் முன்னிலையில் இல்லையென அறிந்துகொள்!

கடினமான தரையில் ஏர்கட்டி உழுவாரிடமும், சாலை அமைக்கச் சரளைக்கல் உடைப்பாரிடமும் அவன் இருக்கிறான். அவர்களுடன் அவன் மழையில் நனைகிறான். வெயிலில் உலர்கிறான். அவன் ஆடையில் தூசு படிந்திருக்கிறது. உன் காசாயத்தைக் களைந்தெறி, அவனைப் போலவே நீயும் புழுதியில் இறங்கிவா !

விடுதலை - எங்கிருந்து விடுதலை கிடைக்கும் ? நம் ஆண்டவனே நம்மீது அருள்சுரந்து சிருஷ்டித்தளைகளை தன் திருமேனியில் பூண்டிருக்கிறான் என்றும் நம்மைவிட்டுப் பிரிய முடியாமல் அவன் இணைக்கப்பட்டிருக்கிறான்.

பூவையும் நறும்புகையையும் உன் பூசையையும் விட்டு வெளியே வா! உன் ஆடை கிழிந்து அழுக்கடைந்தால் என்ன? நெற்றி வேர்வை நிலத்தில்விழ உழைத்து, நின் ஈசனைக் கண்டுகொள்.

இக்கருத்தையே கேனோபநிசத்து தெளியவுரைக்கிறது; எது வாக்கால் விளக்கப்பெறாதோ, ஆனால் வாக்கு எதனால் விளக்கப்பெறுமோ அதுவே பிரம்மம் என்று நீ அறி. எதை இதுபிரம்மம் உபாசிக்கிறார்களோ அது பிரம்மம் அன்று.

எதை ஒருவன் மனதால் உணருவதில்லையோ, ஆனால் மனது எதனால் உணரப்பெறும் என்று கூறுகிறார்களோ அதுவே பிரம்மம் என்று நீ அறி. எதை இது பிரம்மம் என்று உபாசிக்கிறார்களோ அது பிரம்மமன்று.

எதை ஒருவன் கண்ணால் பார்ப்பதில்லையோ, ஆனால் எதனால் கண்கள் பார்க்கப்படுகிறதோ அதுவே பிரம்மம் என்று நீ அறி. எதை 'இது பிரம்மம்' என்று உபாசிக்கிறார்களோ அது பிரம்மமன்று.

இவ்வாறு உபநிசத்துகள் தெளிய உரைத்திருந்தும் மக்களுக்கு அறிவிக்கப்படாமல் உருவங்களை வணங்கவைத்து அறியாமை இருளில் அடைக்கப்பட்டவர்களாயுள்ளனர். என்பதை நாம் காலந்தாழ்த்தாது புரிந்தொழுகினாலன்றித் தமிழ் சமுதாயம் அதோகதிக்கு ஆளாகிவிடும் என்று நான் உறுதியாகக் கூறுகிறேன்.

எனவே கடவுள் நம் உள்ளத்தில் சத்திய வடிவமாயுள்ளது. அறமே அதனை அடையவுள்ள ஒரே சாதனம். 'ரிதம் சத்தியம் பரப்பிரம்மம்' என்று உபநிசத்தின் கருத்தை எவரும் புரிந்தொழுகத் தவறவே கூடாது.

இப்பொழுது நாம் கோவில் எனும் சொல்பொருள் புரிந்துகொள்ளும் நேரத்திற்கு வந்து விட்டோம். அது இன்று நமது கண்ணுக்கு ஊர்தொறும் தென்படுகிற கோபுரவாயிலோடு தங்கக் கலசங்களைத் தாங்கிக் கொண்டு இருக்கிற கட்டிடங்கள் அல்ல. திருமூலர் திருமந்திரம். அந்தக் கோவில் இதுதான் என்று இந்தப் பாடலின் மூலம் சுட்டிக் காட்டுகிறது. 'உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்! வள்ளற் பிரானார்க்கு வாய் கோபுர வாசல்; தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம், கள்ளப் புலனைந்தும் காளா மணி விளக்கே' என்று.

நம்முடைய தெய்வம் நம்முடைய உள்ளமாக உள்ளது. உடல் ஆலயமாகும். வாய், கோபுரவாசல், நமது சீவன் தான் சிவமெனப்படுவது. மெய் ; வாய்மைக்கு, செவி, கண் எனும் ஐந்து புலன்களும் நமக்கு எசமான்களாகாது ஊழியர்களாகும்போது, (அகம் பிரம்மஸ்மி) நாமே பிரம்மமாகிறோம்.

இதே கருத்தினை இன்னும் தெளிவுபட முண்டகோப் நிசத்தும் விளக்குகிறது. 'மனோமய : ப்ராணகுசரீர - நேதா ப்ரதிஷ்டிதோ அன்னே இருதயம் சந்நிதாய' ! என்று.

இதன் பொருள் : அவர் மனோ ரூபியாயும் சரீரத்தையும் பிராணனையும் நடத்துபவராயும் இருதயத்தில் (புத்தியில்) நிலைபெற்று உடலில் உறைபவராயும் விளங்குகிறார். என்பதாம்.

உண்மைகள் இவ்வாறிருக்க வெளியே எதற்காகக் கோவில்கள் கட்டப்பட்டு விழாக்கள் கொண்டாடப்படுவது பிராமணர்களின் சாப்பாட்டுக்காக அன்றி வேறெதற்காகவும் அல்ல.

■

10

# தியானம்

'தியானம்' என வழங்கும் இந்தச் சொல் 'பண்பாட்டிற்கும் செயற் பாட்டிற்கும் மிக இன்றியமைந்த ஒரு சொல் எனப்படுகிறது. இதுகாறும் உலகிலில்லாத நூதனமான ஒன்றை உன்னி உணர்ந்து செய்து முடிப்பதற்குக் காரணமாகவும் உள்ளது.

ஆனால், இச்சொல்லிற்குரிய திட்டவட்டமான பொருள் இன்னது என்று அகராதி, தமிழில் கூறாத காரணத்தால் உரிய பொருளை இழந்து தவறான பொருளில்தான் உலகம் இன்று வழங்கி வருகிறது. அது ஐம்புலனடக்கிச் சிவ யோகம் செய்தல், அனுட்டானம், சிந்திப்பு, நினைவு எனப் பொருள்படுத்தப் பட்டுள்ளது.

'சீவ னெனவும் சிவெனனவும் வேறில்லை எனத் திருமந்திரம் ஐயம் திரிபறச் சொல்வதிலிருந்து இனி ஐம்புலனடக்கிச் சிவ யோகம் செய்தல் எனும் பொருள் அவசியமிழந்து விடுகிறது என்று நாம் சரியான முடிவிற்கு வந்து விடுகிறோம்.

'அனுட்டானம்' எனும் சொல்லுக்கும் நான்கு பொருள் இருப்பினும், நிலைநிறுத்தல் என்பது மட்டும் சரியான பொருளெனக் கொள்ளலாம். ஆம் சிந்தித்தலைக் கடந்தும் நினைவைக் கடந்தும் நிலைநிறுத்தல் எனும் சொல் பொருள் படுகிறது. இவற்றைப் பற்றி ஆராயாத இன்றைய அறிவாளிகளாகத் தம்மை எண்ணிக் கொண்டுள்ள ஒரு சிலர் தியானம் எனும் சொல்லை வீண்படுத்துகின்றனர்.

ஏதாவது ஒரு உருவத்தை தம் மனக்கண்முன் தோற்றுவித்துக் கொண்டு, அந்த உருவத்திற்கிட்டு வழங்கும் பெயரை வாயால் உச்சரிப்பது மட்டும் தான் தியானம் எனக்கூறி, ஏற்கனவே அறியாதவர்களை மேலும் கொஞ்சம் அறியாமையில் ஆழ்த்தி விடுகின்றனர். இது எத்தகையது எனில் பிறவிக் குருடாயுள்ளவனுக்குப் பிறந்தபின் குருடானவன் வழிகாட்டுவது போலுள்ளது. எனத்தான் கூற வேண்டும்.

உண்மையைக் கூறினால் இந்தச் சொல்லை வைத்துக் கொண்டுதான் மேல்நாட்டில் பலரும் சமுதாயத்துக்கு வேண்டிய அனைத்தையும் புதிது புதிதாகக் கண்டுபிடித்துக் கொடுத்துக் கொண்டுள்ளனர் ஆல்ப்பெர்ட் ஐன்ஸ்டீன் சாதனைகள்; ஆல்வாய் எடிசன் சாதனைகள் அனைத்தும் இந்தத் தியானத்தினால்தான் சாதிக்கப்பட்டுள்ளன. மேலும் பலரும் பற்பல நூதனப் பொருள்களையும் சாதித்துக் கொண்டுள்ளனர். ஆனால் அறியாமைச் சாத்தானால் பீடிக்கப்பட்டிருக்கும் நமது மாபெரும் பாரத தேசம், இந்த அருமைச் சொல்லின் உண்மையான பொருளை முழுக்க முழுக்க இழந்துவிட்டதுமன்றி தவறாகவும் செயல்படுத்துகிறது.

நான் இப்படிக் கூறும்போது இதைக் கேட்கும் சகோதரச் சினச் சேமிப்பாளன், கால்பந்தயக்காரன்களுக்கு சகிப்புத்தன்மை கழன்று விடுவதும் உண்டு. உடனே தத்தம் அப்பாரு, அப்பிச்சிகளின்

ஞானனுபவங்களை குதிரைச் சாட்டைபோல் என்மேல் தொடுக்கப்பட்டதும் உண்டு.

என்ன செய்வது? சிந்திக்கத் தெரியாத செயல் திறனற்ற மக்களுக்கிடையில் சிக்கிக் கொண்டபின் எல்லாம் அனுபவித்துத் தானே ஆகவேண்டும். சரி அது ஒருபுறம் இருந்து கொண்டிருந்த போதிலும் நான் கூறவேண்டியும் ஒன்றைத் தெளிவுபடுத்த வேண்டும். ஒன்றைத் தொடர்ந்து செய்து தீரவேண்டியது என் தவிர்க்க முடியாத கடமையல்லவா? அதனால் நான் மேலும் தெளிய வைக்கவே செய்கிறேன்.

வள்ளுவர் கூறுகிறார் உள்ளியது எய்தல் எளிது மன், மற்றுந்தான் உள்ளியது உள்ளப்பெறின், என்று

இந்த ஒரு குறள்பா போதுமே, தமிழ் மக்கள் நிர்சிந்தையாக அமோகமாக வாழ, வாழ்ந்து மற்றவர்களுக்கு வழிகாட்ட. இதை இந்த நாட்டில் எத்தனை பேர் புரிந்து கொண்டுள்ளனர்? புரிந்து கொண்டவர்களால் சாதிக்க முடியாததெனக் கூற எந்த ஒரு செயல்தான். இருக்கமுடியும்?

மற்றும் தான் உள்ளத்தில் உள்ளல் - அதுதான் தியானம். அப்போது நாம் உள்ளியதை எளிதாக எய்துவது நூற்றுக்கு நூறு சதம் உண்மை. துணிவுள்ள இளைஞனே இதை நீயே பரிசோதனை செய்துபார்.

ஆணும் பெண்ணுமாகவுள்ள ஒவ்வொரு மனுச மனுசிகளுக்கும் 'அந்தக் கரணங்கள்' என நான்குள்ளன என்று ஆன்றோர் கூறுவதைக் கேட்டிருக்கிறோம். அவற்றை மனம், புத்தி, சித்தம், ஒங்காரம் அல்லது ஆங்காரம் என்று பெயரிட்டுக் கூறப்படுகின்றன. மெய், வாய், கண், செவி, மூக்கு என நம்முடலிலுள்ள உறுப்புகளுக்கு 'அறிகருவிகள்' என்பது பொதுவான பெயர். உலகிலுள்ள அனைத்தையும் இவ்வைந்து அறிகருவிகளும் இன்னின்னதென மனித மனத்தில் படியச் செய்கிறது. அப்படிமானத்துக்குப் பெயர் புத்தி அல்லது அறிவு எனப்படும். மனதில் படிந்த இவ்வறிவில் நல்லது, கெட்டது என இருவகையும் உண்டு. நல்லது என உள்ளன அனைத்தும் கொண்டு ஒழுகுவது அல்லது ஆசை வயப்பட்டுக் கெட்டது என உள்ளனவற்றைக் கொண்டு ஒழுகுவது -

இவ்விருவகையில் நல்லது ஓங்காரமாகவும், கெட்டது ஆங்காரமாகவும் ஆகிவிடும் என்பர் ஆன்றோர். இது சித்தத்தின் செயல்பாடு. நல்னவற்றை மேற்கொண்டொழுகுவது சிரம சாத்தியமானது. எனினும் அதில்தான் ஆனந்தம் உள்ளது. கெட்டன, அனைத்தும் மேற்கொண்டவன் துக்கத்தின்பால் தள்ளப்படுகிறான்.

வாழ்நாள் முழுவதும் எச்சரிக்கை வகித்து நல்லனவற்றிலிருந்து அணுவளவும் நழுவி விடாது தன்னைக் கொண்டு செல்லும் செயல்முறைக்கே 'தியானம்' என்று பெயர்.

இனியும் சற்று விவரித்து விளக்க வேண்டின், உபநிசத்து நமக்குக் கை கொடுக்கிறது. 'மனம்' என்பதொன்று எல்லாம் வல்லது. மனதுதான் பிரம்மம். மனம் பரிசுத்தமாய் இருக்க வேண்டும். இந்த மனத்தைக் காட்டிலும் சங்கற்பம் பெரியது. 'இந்தச் சங்கற்பம் தான் குறிக்கோள்'. சங்கற்பத்தைக் காட்டிலும் சித்தம் பெரியது. ( இது வைராக்கியம் பூண்டுகொண்டநிலை) தியானம் (சங்கல்பத்தை பூண்டுகொண்டொழுகும் நிலை) சித்தத்தினும் பெரியது.

எனவே பூமி தியானம் செய்கிறது. அந்தரிச்சம் தியானம் செய்கிறது. வானம் தியானம் செய்கிறது. மலைகள் தியானம் செய்கிறது என்கிறது உபநிசத்து.

'சத்தியம்', ஞானம், ஆனந்தம், பிரம்மம் என்கிறது மத்த தைத்ரியோபநிசத்து. அசத்து நீக்கிச் சத்தையறிந்து, அதைச் செயல்படுத்தும் போது ஞானமாகித் தியான (இடைவிடாது கொண்டொழுகும்) நிலையில் பேரின்பமடையும் போது நாம் பிரம்மமாகிறோம்.

'சத்தியத்தை உளத்தில் பூணென பூண்டுகொண்டு வாழ்நாள் முழுதும் அறவழியிலிருந்து வழுவாதொழுகித் துயரம், தூரம் = விலகி நிற்க, ஆனந்தம் அகம் பொங்கி வழிய, கண்களில் அறிவொளி சுடர்விட, அரசனும் அஞ்சி நின்று கைகூப்பக் கம்பீரமாக வாழ்வதற்குரிய நேர்மையான நிலைப்பாடுகான உறுதிநிலைதான் தியானம் என்ற முடிவுக்கு இந்த விவரங்கள் நம்மைக் கொண்டுவந்து விடுகின்றன அல்லவா? இதுதான் தன்னைத் தானறிந்து வாழும் நிலை; 'அகம் பிரம்மாஸ்மி' எனச் சொல்லும்நிலை; நானே தெய்வமாயுள்ளேன்; எனக்குப் புறம்பாகத் தெய்வமென

என்வரையில் வேறொன்றில்லை எனக் கூறும் தகுதியுள்ள நிலை. இந்நிலை பரவலாக உபநிசத்துக்கள் மூலம் மக்களுக்குப் போதிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், தொன்றுதொட்டு நாளது வரை நாட்டின் நடைமுறை தான் என்ன ? இதற்கு நேர் எதிர்மாறான நிலை இது ஏன்? உண்மைகள் எதற்காக மறைக்கப் பட்டது? யார் இதற்குக் காரணகர்த்தா என இனி நாம் ஆராய்ந்து அறிந்து கொள்ள வேண்டும்.

**1954**ம் ஆண்டு வாக்கில் கர்நாடக முதன்மந்திரியாக இருந்த கெ. அனுமந்தய்யா காலத்தில் சர்க்கார் முயற்சியில் சமஸ்க்ருதி என்ற பெயருள்ள ஒரு நூல் வெளியிடப்பட்டுள்ளது. அந்த நூலில் பதினேழாம் பக்கத்தில் உள்ள ஒரு பாராவை இங்கு தமிழ்படுத்தி எழுதுகிறேன்.

"பௌத்த மதம் நாட்டில் பிரபலமடைந்து கொண்டிருந்த காலகட்டத்தில் வைதிக தருமம் வெகுவாகச் சிதிலமாகிக் கொண்டிருந்தது. அந்தச் சந்தர்ப்பத்தில் சங்கராச்சாரியார், தருமத்தின் அதிமுக்கிய சாராம்சங்களை வைதிக மதத்தின் புனருத்தாரன நிமித்தம் ஆதாரங்களாக எடுத்துக் காட்டியும், பல்வேறு தெய்வ ஆராதகர்களனைவரும், சிந்தித்துப் பார்க்கும் போது ஒரே பரப்பிரம்மத்தின் உபாசகர்களே ஆகிறார்களென்றும் போதித்து, விஷ்ணு, சிவன், சூரியன், அம்பிகை, கணநாதன், ஆகிய முக்கியமான இவ்வைந்து தெய்வங்களையும் ஒன்று சேரவைத்து, தத்துவத்தின் உண்மைகளை எடுத்துக்காட்டி மடங்களை ஏற்படுத்தி வைதிகமதத்தை சுத்தமான அடித்தளத்தின் மேல் நிலைநாட்டி பௌத்த மதத்தின் பிராபல்யத்தைத் தடுத்து, இந்து நாகரீகத்தை இரண்டாவதாக பிரதிஷ்டை செய்தார், பௌத்த மதத்திலிருந்த முக்கியமானத் தத்துவங்களையெல்லாம் தம்முடைய சித்தாந்தத்தில் அடக்கி தெய்வீக நிலையைக் காப்பாற்றினார்.

சங்கராச்சாரியால் பெயரிட்டுக் கூறி வழிபாடு செய்வதற்கென காட்டிய, விஷ்ணு, சிவன், சூரியன், அம்பிகை கணநாதன் எனும் ஐந்தும் சடப்பொருட்கள்தானே. உபநிசத்துக்கருத்துக்கு முரணாக இவ்வைந்து ஜடப்பொருட்களையும் தெய்வங்கள் என்று மக்களுக்குக் காட்டியது எப்படி உண்மையாகும்.

இந்த ஆதி காலாடி சங்கராச்சாரி, உபநிசத்துகளைக் கற்றவரில்லரெனில் நாம் இதைப்பற்றி தர்க்கம் செய்ய வேண்டிய அவசியமில்லை. அவர் உபநிசத்துகளை கற்றறிந்திருந்தும் ஏன் அதை மறைத்தார்? ஏன் இதைச் செய்தார்? உபநிசத்துக்களைப் படித்து உண்மைகளை உணர்ந்து கொள்ளுமாறு ஏன் செய்யாது விட்டார்?

உபநிசத்து மக்களுக்கு அறிமுகப்படுத்தியது "இந்த தெய்வங்களையா?" அவர் காணப்படாமல் காண்பவர், கேட்கப் படாமல் கேட்பவர். அவரைக் காட்டிலும் வேறாகக் காண்பவர் இல்லை, அவரைக் காட்டிலும் வேறாகக் கேட்பவர் இல்லை, அவரைக் காட்டிலும் வேறாக நினைப்பவர் இல்லை, அவரைக் காட்டிலும் வேறாக அறிபவர் இல்லை. அவர்தான் உன்னுடைய ஆத்மா, அந்தர்யாமி அழிவற்றவர். மற்ற எல்லாம் அழிவுள்ளது. என்பதை ஏன் ஆச்சாரியார் மக்களுக்கு காட்டாமல் மறைத்தார்; இன்னும் மறைத்துக் கொண்டே உள்ளனர் இன்றுள்ள ஆச்சாரிகளும்?

அவர்கள் மறையோர்கள், உள்ளதை மறைத்து உலகத்தை அதோகதிக்கு இன்றும் அழைத்துச் செல்லுகின்றனர். தொலையட்டும். தமிழ் படித்து பட்டம் பல பெற்ற புலவர் பெருமக்கள் பற்பலர் உள்ள இந்த துர்ப்பாக்கியத்துக்குள்ளான நாட்டில் ஆரியரால் மறைத்து வைத்த அந்தப் பேருண்மையைத் நமது திருமூலர் வெளிப்படுத்தி யுள்ளதை இனிமேலாவது அறிந்து அனைவர்க்கும் விளக்கமாக வினயமாகக் கேட்டுக்கொண்டு இங்கே குறிப்பிடுகிறேன் ஒவ்வொரு மனிதனும் தன்னைத்தான் இனியேனும் அறிய;

**உள்ளத் தொருவனை உள்ளுறு சோதியை**
**உள்ளம்விட் டோரடி நீங்கா ஒருவனை**
**உள்ளமுந் தானும் உடனே இருக்கினும்**
**உள்ளம் அவனை உருவறி யாதே**

உள்ளத்துக்குப் புறம்பாக எந்தவொரு தெய்வமும் இல்லை என்பதற்கு இதுவே போதும். எனவே ஒழிக உருவ வழிபாடு என்று கூறி இதை முடிக்கிறேன்.

■

# 11

# தியாகம்

'மகத்தானவை' என நம்மை நினைக்கச் செய்யும் சொற்களில் இந்தத் தியாகம் எனும் சொல்லும் ஒன்று. தன்னுள் அடக்கிக் கொண்டுள்ள மிகப்பெரிய மருத்துவத்தை, கேட்போர் உளத்தில் விளக்கமாக முழுதும் பதிய எடுத்துரைப்பதற்கு என்னைவிடப் பன்மடங்கு அறிவாற்றலும் மனிதாபி மானமும் அதிகமுள்ள ஒரு மகானால் தான் சாத்தியம் என்று முதலிலேயே சொல்லி வைக்கிறேன். இதில் நான் என்னைக் குறைத்து கூறுவது உண்மையைக் கூறியதே யன்றி வேறு எதுவொன்று மன்று.

இருண்ட வீட்டில் விளக்கேற்றி வைப்பதென்றச் சத்தியத்தை தன் உள்ளத்தில் ஒளிர வைத்துக் கொண்டுள்ள அச்சமறியாத

கடமையுணர்வுள்ள ஒரு ஆண்மகனின் தலையாய பண்பு அவசியமேற்படுங்கால் வெளிப்படும் உணர்வோடு கூடிய செயல்பாடு இது. தயக்கமின்றி பிரதிப்பயன் எதிர்பாராது தன் நேரத்தையோ அறிவையோ,செல்வத்தையோ தன்னையையோ - அர்ப்பணித்துக் கொள்ளுவதன் பெயர் தியாகம். அறிவில்லாத செல்வமும், ஆராய்ச்சியற்ற கல்வியும், கடமையுணர்வில்லாத அதிகாரமும், அஞ்சி ஒதுங்கவோ அசிரத்தை காட்டவோ, எள்ளி இகழவோ செய்து ஒதுக்கப்படுவது இந்தத் தியாகத்தை மட்டுந்தான்.

கோகினூர் வைரமாயிருந்தால் தான் என்ன? கோழியும், குருவியும் அதை அசட்டை செய்வது போன்ற நிலைதான் தியாகத்தின் ஆக்க மறியாத இந்த அசடர்கள் நிலையும். வரலாற்றுணர்வோ, இலக்கிய அறிவோ, தத்துவ ஞானமோ இல்லாத எந்த ஒரு மனிதனும், அசாதாரணமான இந்தத் தியாகத்தின் உண்மை மதிப்பை அறியாதவனாகவே இருப்பான்

செயற்கரிய செய்துவக்கும் ஆன்றோர்களால் போற்றிக் கொள்ளப்படவுள்ள தியாகத்தின் சக்தியை எந்தச் சொற்களைக் கொண்டும் விளக்கிக் காட்ட இயலாது என்றுதான் பொதுவாகக் கூற முடியும்.

மகாத்மா காந்திஜீயிலிருந்து திருப்பூர் குமரன் வரை இறந்தும் இறவாது என்றென்றும் நின்று நிலவும் தத்தம் தியாகச் செயல் மூலம் அமரராய், ஆதர்ச புருஷராய் நம் உள்ளங்களில் குடியிருப்பவர்களை நாம் நினைத்துப் பார்த்தால் இந்த மகத்தான சொற்பொருள் தெற்றென விளங்கி விடுகிறதல்லவா?

'வாழ்வு' எனும் சொல்லின் பொருளைச் சரிவர அறியாது; அன்றும், இன்றும் மனிதராய்ப் பிறந்து வாழ்வதும், வாழ்ந்து கொண்டும் உள்ளவர்களில் கூலிக்காரனும் உண்டு கோடீசுவரனும் உண்டு; அடிமையும் உண்டு ஆண்டியும் உண்டு.

மனிதப் பிறவியைப் பெற்றவன்கூடப் பெருவாழ்வைப் பெற்றிருந்தும், அவ்வாழ்வின் பயனானப் புகழைப் பெறாது இறந்தான் என்றால் அவ்வளவும் வீண்தான். அதுநீர்மேல் வாழ்ந்த ஒரு குமிழியின் வாழ்வுதான்; என்று நான் கூறினால் எந்த அறிஞனும் இதைத் தவறு என்று கருதமாட்டான். எனவே வாழ்வு வீணாகக்

கூடாதென்றால் நாம் தியாகம் எனும் இந்தச் சொல்லின் பொருள்புரிந்தொழுகுபவர்களாக இருந்தே தீரவேண்டும்.

உயிரினங்களில் ஐந்து வகைகள் உள்ளன என்றும் அவற்றில் ஓரறிவுயிர் தாவரம் என்றும் நமக்குத் தெளிவித்துள்ளனர் நமது முன்னோர். மேலும் நாம் இத்தாவர இனத்தைச் சற்று கூர்ந்தாராய்ந்து பார்த்தால், மரஇனம், செடியினம், கொடியினம், புல்லினம், பூண்டினமென ஐந்தினமாக்கி விடலாம். இவற்றை நிலைத் திணையுயிர்கள் என்றும் ஏற்கனவே பெயர் கொண்டுள்ளன கூறப்பட்ட ஒவ்வொரு இனத்திலும் நல்லன, அல்லன என இருவகையுள்ளன.

ஐயறிவுள்ள மனிதனுக்கு இந்தத் தாவரவர்க்கம் தான் முதல் தெய்வம் என்றும் கூறப்படுகிறது. 'அன்னமயம்' பிரம்மம் என்று உபநிசத்துக்களில் இதனைப் பற்றித் தெளிவாக எடுத்துக்காட்டப் பட்டுள்ளது.

இயங்கு திணையாயுள்ள மனிதனுட்பட அனைத்து சீவராசிகளுக்கும் முதலில் தோன்றி நிலவுலகில் நம்மை வளர்த்து வாழவைக்கும் தாய் போன்றன தாவரம். சிந்தித்துப் பார்த்தால் தம்மை முழுமையாக மற்ற சீவராசிகளுக்கு தியாகம் செய்வதற் காகவே இவை தம்மைத் தாமே ஈன்றுகொண்டு, மனிதனின் - மற்ற சீவராசிகளின் கைமாறு கருதாது வாழ்வதை நாம் காணுகின் றோமென்று. சிந்தித்துப் பார்க்கின்றோமா? இல்லை. தியாகம் எனும் சொல்லுக்கு முழுப்பொருள் இத்தாவர வர்க்கம்தான் என்பதும் சரியானதேயாம்.

ஞானிகளைப் போல் வேடம்பூண்டு கொண்டுவாழும் ஆசாட பூதிகளின் இருதயத்தில் தியாகம் எனும் சொல்லின் வாடையும் கூட இருக்க இயலாது. தியாகம் ஆனந்த வடிவமானது. ஆசாடபூதிகள் குரோத உணர்சியுடையவர்கள்.

தேன், நெய், சருக்கரை தேங்காய், பழம் எனும் சொற்கள் வேறு; சொற்கள் குறிக்கும் பொருள்களும் வேறு என்று புரிந்து கொள்ளவேண்டும். ஏட்டுச்சுரைக்காய் கறிக்குதவாதது போல, கோயில் தெய்வம் குணத்துக்கு உதவாது. குணம் அல்லது அறிவுதான் தெய்வம் எனப்படுவது.

'சத்தியம், ஞானம், அனந்தம், பிரம்மம்' எனும் உபநிசத்து மேலும் விளக்குகிறது, அன்னமயம், பிரம்மம், பிராணமயம், பிரம்மம், மனோமயம் பிரம்மம் விஞ்ஞானமயம் பிரம்மம், ஆனந்தமயம், பிரம்மம் என்று உடல், உயிர், உள்ளம் அடுத்துப் பொய்மையை நீக்கி மெய்யை மேற்கொண்டொழுகல் விஞ்ஞானம், விஞ்ஞானம் அல்லது சத்தியத்தைப் பரவலாக ஆக்கிப் பங்கிட்டுக் கொள்ளும் அரும் தியாகமே, அனந்தம், அது ஆனந்தமயமானது.

ஆகவே தான், உபநிசத்து திட்டவட்டமாக இந்தத் தியாகம் எனும் சொல்லைப் பற்றி இவ்வாறு கூறிற்று

'நாஸ்தி தியாக சமன் சுகம்'. இதன் பொருள் தியாகத்தில் உள்ள சுகத்துக் கொப்பிட்டுச்சொல்ல வேறு எந்த ஒரு சுகமும் உலகில் இல்லை, என்று

வெறும் பாவனை வேண்டப்படுவதல்லாத; பாவிகளால் சுகம் பெற முடியாது. ஒவ்வொரு மனிதனும் தன்னுள்ளத்தில் சத்தியத்தை வைத்து ஒழுக்கத்தில் நீதிக்கு முக்கிய இடமளித்து வாழும் போது தெய்வீகத்தை நாம் அறிந்தடைந்தவர்களாகிறோம். தியாக மூர்த்திகளாகிறோம், மற்ற மனிதர்களால் வெல்லப்படாதவர் களாகவும் ஆனந்தமுள்ளவர்களாகவும் ஆகிவிடுகிறோம்.

எனவே தியாகம் வாழ்க சத்தியம் ஓங்குக!

■

- ஆழ்ந்த சிந்தனை, குறைந்த பேச்சு இதுவே வெற்றிக்கு வழி.
- அடக்கத்தோடு உண்மை ஆலோசிக்கப்படும்போது, ஆத்திரத்தோடு பொய்மை கூச்சலிடத் தொடங்கும்.
- 'சமுதாயம்' என்னும் பயிரில் வாழும், ஒழுக்கமில்லாத ஒவ்வொரு மனிதனும், களை எடுக்கப்பட வேண்டியவனே.

  – வெ.
- உயிர் வாழ்பவனின் சோம்பல் ஒரு சவக்கிடங்கு.

  – டையோ

12

# புனர் செனனம்

நம்முடைய மதத்தின் பெயர் 'இந்துமதம்' எனப்படுகிறது. இந்து மதத்தினை மேற்கொண்டு வாழ்பவர் களுக்குப் புனர் செனனம் - அதாவது மறுபிறப்பு உண்டு என்று வற்புறுத்தி நம்பும்படி செய்துகொண்டே வருகின்றனர் இந்து மதபோதகர்கள்.

சிந்திக்கத் தெரியாத ஒருவன், காதில் விழுந்த சொல்லை நம்பி நடந்து தன்னைப் போன்றுள்ள மற்றவர்களையும் நம்பும்படி செய்கிறான். தன் உற்றார் உறவினரையும் இதே வழியில் நம்பி நடக்கவும் செய்து விடுகிறான்.

சோசலிசம், கம்யூனிசம் போன்று இந்தப்புனர் செனனக்கோட்பாடு இன்று நேற்றைய புதிய தொன்றன்று. உபநிசத்துக் காலத்திலிருந்தே இதுவும்

[illegible] இந்து மதத்தில் புகுத்தப்பட்டு, மக்கள் மனங்களில் அழுந்தப் பதியச் செய்யப்படுவதும் நடைமுறையில் இன்றும் இருந்து வருகிறது.

புனர்செனனக் கோட்பாடுபற்றி இங்கு அலசி ஆராயப் படுவதற்குமுன் இதற்கான ஒரு சிறியசெய்தியை கூறிவிடுவது நல்லதெனக் கருதுகிறேன்.

சாணக்கியனின் அர்த்தசாத்திரம் கூறுகிறது. அந்தக் காலத்தில் ஒரு ஆசிரியனிடமிருந்து கல்விகற்றுக்கொள்ளும் மாணவன் முதலிலிருந்து முடிவுவரை அனுசரிக்க வேண்டிய நடைமுறைகள் எட்டு, என்று அவையாவன : பிசிசுருசை, சிரவண, கிரகண, தாரண, யூக, அபோவூக, விஞ்ஞான, தத்வாரு நிவேச என்பனவாம். இவற்றில், அபோவூக எனும் ஒன்றின் பொருள், ஆசிரியரால் போதிக்கப்பட்டிருந்தாலும் அறிவுக்குப் பொருந்தாதவற்றை அறவே வெட்டித் தள்ளிவிடு, என்பதே.

எனவே, தொன்றுதொட்டு இருந்து வருகிறது என்ற காரணத்திற்காக நாம் மேற்கொண்டொழுகியே தீரவேண்டும் என்று நம்மையாரும் தடுத்து நிறுத்திவிட முன்வர வேண்டாம். இதுவுமன்றி, இவன் ஆரம்பக்கல்வியைக் கூடச் சரிவரக் கற்காதவன் என்று குற்றம் கூறவும் துணிய வேண்டியதில்லை. ஏனெனில் என் வயது இந்த சூலை இறுதி மூன்றுநாள் கழிந்து, வரும் ஆகஸ்டு 21ம் கழிந்த மறுநாள் எண்பத்தி இரண்டாம் வயதில் வாழத்தொடங்கி விடுகிறேன். எதற்காக இங்கு இதைச் சொல்கிறேன் எனில் என் படிப்பை நான் இன்னும் முடித்துக் கொள்ளவே இல்லை, 'இன்றும் படித்துக்கொண்டே இருக்கிறேன்' என்ற உண்மையை மற்றவர்கள் புரிந்து கொள்வதற்காகவேதான்.

ஏதோ ஒருகாலத்தில் வாழ்ந்த ஒருவர், மனித சமுதாயத்திற்கு இது நன்மை தரும் என நம்பி உரைத்த எந்த ஒரு கருத்தையும் ஆராய பொதுவாக ஒவ்வொரு மனிதனுக்கும் உள்ள உரிமை எனக்கும் உண்டு. அந்த உரிமையை நான் எடுத்துக்கொள்வதில் யாரும் என்னைத் தடுக்க முடியாது. ஏனெனில் இன்றைய நமது பாரத சமுதாயம் சீர்கெட்டிருக்கிறது என்பது நூற்றுக்கு நூறு உண்மை.

எப்போதிருந்து சீர்கெட்டிருக்கிறது? எனின், சமண மதத்தைக் கழுவிலேற்றி, புத்த மதத்தை தேசப்பிரஷ்டம் செய்து திருக்குறளையும் புறநானூற்றின் வரலாற்று ரீதியான உண்மைகளையும் புறக்கணித்து விட்டுவிடச்செய்த ஆதிகாலாடி சங்கராச்சாரி காலத்திலிருந்து, உபநிசத்துகளின் உண்மைகளை ஒளித்து வைத்து மாற்றாகப் 'பகவத்கீதை' என ஒரு நூலியற்றி இந்து மதத்தின் தலையில் கவிழ்த்த அந்த நாள்தான் தமிழ்நாட்டின், தமிழ் மக்களின் தலைக் குனிவுக்கு தாழ்வான நிலைக்கு கடைக்கால் கோலிய முதல்நாள் என்று என் உள்ளத்திற்குத் தெற்றெனப் புலப்படுகிறது. இத்தோடு நின்று விடாது, சிவன் பெரிய தெய்வம், விஷ்ணு பெரிய தெய்வம் எனும் போர் புரியச் செய்தபோது மக்கள் முழுக்க முழுக்க அடிமைப் பட்டகாலம். யாருக்கு வேறு யாருக்குமல்ல, ஆரியர்களுக்குத்தான். ஆரியர் முழுக்க முழுக்கப் பொய்யாக உண்டு பண்ணித் தமிழர்களுக்குப் படைக்கும் கடவுள், காக்கும் கடவுள், அழிக்கும் கடவுள் எனப் பெயரிட்டுப் பிரசாரம் செய்து வந்த காலகட்டத்தில் மக்கள் நம்பிப் பின்பற்றி ஒழுகத் தொடங்கிய அந்த நாளில், 'இவையெல்லாம் உண்மையா'? எனக்கேட்ட மக்களுக்கு பக்குடுக்கை நன்கணியார் பாடிக் காட்டினார் அதை மறுக்கவும் முடியாமல், தொடுக்கவும் முடியாமல் என்னசெய்வது அரசனே ஆரிய தருமத்தை ஆதரிக்கும் போது ஒரு எளிய கவிஞன் என்ன செய்ய முடியும்.

ஒரு சிறிய ஊரில் ஒரு வீட்டில் இழவுப் பறைவிக்கிறது. இன்னொரு வீட்டில் மங்கல வாத்தியம் முழக்கப்படுகிறது. மணம் புரிந்துகொள்பவர் மகிழ்ச்சியோடு பூமாலைகள் சூட, கணவனை இழந்தவள் துக்கம் தாங்கமாட்டாது அழுது சோர்ந்த கண்களில் தாரை தாரையாக நீர் சோர படைத்திருக்கிறான் அன்பர்களே. பண்பு என்பதை அறியாத அந்தப் படைக்கும் கடவுள் எனும் பொருள்படுவரிகள் (ஓரில் நெய்தல் கறங்க - ஓரில் ஈர்ந்தண் முழவின் பாணி ததும்பப் - புணர்ந்தோர் பூவணி அணியப் பிரிந்தோர் பைதலுண்கண் பனிவார்ப் புறைப்பப் படைத்தோன் மன்ற அப்பண்பிலாளன் என்ற வரிகள் படைக்கும் கடவுளைப் பற்றிய பொய்யைக் கண்டிக்க முடியாது கண்டித்துரைத்த உண்மைக் கருத்தல்லவா?

இதே போல, 'இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்துகெடுக உலகியற்றியான்' என்ற குறளும் இந்த ஆரியத் தெய்வங்களைப் பற்றி வள்ளுவப் பெருந்தகையின் உள்ளக்கருத்து வெளிப்படுவது காணலாம். வள்ளுவர் வகுத்து தந்த 'அறம், பொருள், இன்பம், வீடு' என்ற அமைப்பு எந்த ஒரு மதமும், ஏற்றுக்கொள்ளக் கூடிய வாழ்க்கையமைப்பென்பது' ஆரியத்துக்கும் ஏற்புடையதேயன்றோ? சரி, இது நிற்க.

புனர் செனனம் பற்றிக் கிருத்துவ தருமமும், இஸ்லாமிய தருமமும் சிரத்தையெடுத்துக் கொள்ளவில்லை. வாழப் பிறந்த மனிதன் சீவனுள்ளவரையும் இன்னின்னவாறு வாழ்ந்து விட்டால் அதுவே போதும் என்ற அளவில் திருப்தியடைகின்றனர் அவர்கள்.

ஆனால், ஆரியரின் திருஞானசம்பந்தரால் கழுவிலேற்றப்பட்ட சமண மதமும், நாடு கடத்தப்பட்ட புத்த மதமும், ஆண்டவன் இல்லை என்ற நிலையிலும் இந்தப் புனர்செனனக்கொள்கையில் அதிகம் நம்பிக்கை வைத்திருந்ததாகத் தெரிகிறது.

இந்து தருமத்தை மேற்கொண்டொழுகும் குடும்பங்களில் பிறந்து, நல்ல முறையில் கல்வி கற்ற சிந்தனையாளர்கள் பலரும் 'புனர் செனனம்' என்பது அறிவுக்குப் புறம்பானது என்று கூறும்போது தம் கூற்றுக்குப் பக்கபலமாக சமண பௌத்த தரும ஒப்புதல்களை இழுத்து நம்மேல் வீசி, அரைகுறைகளே இவற்றைப் பார்த்தாவது அறிந்து கொள்ளுங்கள் என்று கூறத் தவறுவதே இல்லை. இதில் என்ன நீதிநியதி உள்ளது? எப்படிச் சிந்தித்தாலும் அறிவுக்குப் புறம்பானது என்று நம் உள்ளம் உணரும் போது அவர்கள் நம்பினார்கள், நீங்களும் ஏன் நம்பக்கூடாது. என்று கேட்கிறார்கள். அவர்கள் இன்னும் என்னென்ன வெல்லாமோ நம்பினார்கள். அவற்றையெல்லாம் இவர்கள் ஏன் நம்பவில்லை?

இவர்கள் நமக்கு சொல்வது இதுதான். அதாவது தூக்கம், அதிலும் அயர்ந்த தூக்கம் உடம்புக்கு ஆரோக்கியமானது. எனவே நீ தூங்கிக் கொண்டே இரு. நான் உன் தொடையில் கயிறு திரித்துக் கொள்ளுகிறேன்!.

இங்கு, பெட்ராண்டு ரசலின் ஒரு வாக்கியத்தைக் குறிப்பிட்டுவிட்டு மேலே இதைப்பற்றித் தொடர்கிறேன். என் அருமை நண்பனே கவனித்து படித்துத் தெரிந்து கொள்.

"உலகத்தில் மிக அதிகமான சுகபுருஷன் யார்? எனும் வினாவிற்குச் சரியான விடை, இப்போது பிறந்திருக்கும் குழந்தை அல்லது பைத்திய மருத்துவ விடுதியிலிருக்கும் சித்தசுவாதீன மற்றவன்" என்றுதான் சொல்ல வேண்டும். ஏன் எனில், இந்த இருவருக்கும் சுகத்தைப் பற்றிய எண்ணமே இருக்கவியலாது. நானே மிக அதிகமான சுகபுருசன் என்று வெளிப்படச் சொல்லிக் கொள்பவனை உலகம் முழுவதம் தேடினும் நாம் காண முடியாது. ஆம் ஒவ்வொரு மனிதனும், 'சுகம் எங்கே எங்கே' என்று தேடித் திரிகிறவனாகவே இருக்கிறான். சுகம் இருப்பதாக எண்ணித் தேடிவைத்திருக்கும் எந்த ஒரு பொருளிலும் அவன் சுகத்தைக் காண்பதே இல்லை. நிராசையுள்ளவனாகி இறுதியில் அவன் ஏமாற்றத்துக்குள்ளாகுவதும் உண்டு.

எனவே ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்தால் சுகம் எனும் இது, வெளியே உள்ள எவற்றிலும் பெறப்படும் ஒன்றன்று. தன்னுள்ளேயே இருக்கும் ஒரு அம்சம்தான் அது என்ற அத்யாத்ம நிலைபாட்டிற்கே வந்தாலும் வரலாம். இந்த அத்யாத்ம நிலைதானோ சீவன்கள் அனைத்தும்.

உயிர், எனும் சொல்லுக்கு ஆன்மா, காற்று, சீவன் என வேறு பெயர்களும் உண்டு. எந்தப் பெயரிட்டு வழங்கினும் காற்றுதான் உயிர். காற்றின் குழந்தை நெருப்பு; நெருப்பின் குழந்தை நீர்; நீரின் குழந்தை நிலம்; சமஸ்டி வடிவில் இந்நான்கும் ஒன்றிய நிலை சீவநாசிகள் மனிதனுட்பட அனைத்துமே.

இந்த மறுபிறப்பு சுத்தமான ஒரு படுபொய். உபநிசத்துகளிலேயே இது செருகப்பட்டுள்ளது. வேறு சான்றுகள் தேவையில்லாதது என்று நான் கருதுகிறேன். ஆவினும், ஈசா வாஸ்யோப நிசத்து பதினேழாம் சூத்திரம் சொல்வதுதான் மிகவும் சரியான கருத்து.

'மூச்சுக்காற்று அழிவில்லாத வாயுவை அடையட்டும். பிறகு இந்த உடல் சாம்பலாக முடியட்டும்'. வாயு - ஈனில - மம்ருத - மதேதம் - பஸ்மாந்தம் - சரீரம் என்கிறது அந்தச் சூத்திரம்.

இதுதான் உண்மை அறிவுக்குப் பொருந்துவது. எனவே மனிதனுடைய உயிர்மட்டுமல்ல; எந்த ஒரு சீவனுடைய உயிரும் உடலை விட்டுப் பிரிந்தபின் பிறக்கும் சக்தியை இழந்துவிடுகிறது.

ஆனால் தன்னைத் தானறிந்த ஆத்மஞானி தூலசரீரம் விட்டபின், காரணசரீரம் - மகாத்மா, ஜவாஹர் என மறுபிறப்பை பெற்று சிரஞ்சீவிகளாக உள்ளனர். பாரியும், காரியும், திருவள்ளுவரும், திருத்தக்க தேவரும் போன்றவர்களின் மறுபிறப்பு இதுவன்றி வேறில்லை. செயத் தக்க செய்யாது வெறும் சோற்றுப் பிண்டங்கள். பிறந்தான், இருந்தான், இறந்தான்' எனும் சொற்களோடு முடிந்து விடுகிறது ; எனினும் அவனுடைய மறுபிறப்பு அவனுடைய சந்ததிகள்.

சென்ற வருடம் நான் ஒரு அவரை வித்தை நட்டேன். அது முளைத்துப் படர்ந்து பந்தல் நிறையக் கூடை கூடையாகக் காய்த்தது. நல்லமுறையில் நாங்களும் அண்டையயலாரும் பற்பல தடவைகள் சாப்பிட்டோம். அதே செடி தனக்கு என்று சிலகாய்களை உலர்த்தி வைத்திருந்தது. அதில் இரண்டொரு விதைகளை இந்த வருடமும் நட்டேன். அதே நிறம், அதே ருசி, அதையே அடுத்த வருடமும் நடவுள்ளேன். எனவே பிறவி என்பது தனித்த உயிர்போய் எங்கும் பிறக்கமுடியாது.

எனின் ‘புனர் செனனம்’ என்பது அவர்கள் சொல்லும் அர்த்தத்தில் பொய்; ஆம் முழுப்பொய். தாயும் தந்தையும் வாழுங்காலத்திலேயே தம்மை ஆணும் பெண்ணுமெனக் குழந்தைகளாய் மாற்றிக் கொண்டு விடுகிறார்கள்.

மாடுகள், மாடுகளை உண்டுபண்ணிக் கொண்டுவிடுவது போல் ஆடு, கோழி, குருவி, மரம், செடி கொடியனைத்தும் தம்மை தாமே உண்டுபண்ணிவிட்டுத் தான் உயிரை விடுகின்றன. இதுதான் புனர் செனனம் என்றால் அதுமிகவும் சரியானது என்று முடிவு செய்கிறேன்.

■

- இளமையிலும் சரி, முதுமையிலும் சரி மடமைக்கு கடமை உணர்வு இருந்ததாகத் தெரியவில்லை.

– வெ.

13

# கர்ம சித்தாந்தம்

புனர் செனனத்தைப் போலவே, கர்மசித்தாந்தம் எனும் இந்தத் தலைப்பும் படுசிக்கலானது. அர்த்த பேதம் செய்யப்பட்டுள்ளது. இந்தியர் களாகப் பிறந்து, இந்துமதம் எனும் பெயரில் கொள்கையில்லாது வாழும் கோடிக்கணக்கான மக்கள் இந்தக் கர்ம சித்தாந்தச் சிக்கலில் மாட்டிக் கொண்டு தங்கள் வாழ்க்கையைத் துன்பமயமாக்கித் தொல்லைப்பட்டுக் கொண்டுள்ளனர்.

கருமம் எனின், காரியம், கிரியை, செய்கை என்றெல்லாம் பொருள் சொல்லப்படுகிறது. சித்தாந்தம் எனின், தருக்க முடிவு, நிச்சயமானது எனும் பொருளில் வழங்குவது. 'வினைப்பயன்' என்பது சரியான பொருள் என நாம் எடுத்துக் கொள்வதில் தவறு கிடையாது.

'நல்லது, கெட்டது' என வினை இருவகைப்படும் என்பது அனைவரும் அறிந்ததே. பிறருடைய உடைமைக்கு நாம் ஆசைப் படக்கூடாது என்பது நல்லது. பிறருடைய உடைமையில் கொஞ்சமாவது நாம் எடுத்தே தீரவேண்டும் என்பது கெட்டது.

ஆயினும் மனிதன் 'நல்லது கெட்டது' என உள்ள இரண்டின் பலா பலன்களும் அறிந்தும், கெட்டதே செய்ய முயலுகிறான்; இதன் காரணம் ஆசைதான். இந்த ஆசைக்கு அவன் ஏன் வசப்பட்டான்!

உபநிசத்து பேசுகிறது : 'சாதுகாரி சாதுர்பவதி', பாபகாரி பாபோபவதி, என்று. ஆம் நல்லதைச் செய்பவன் நல்லவனாகிறான். பாவத்தைச் செய்பவன் பாவியாகிறான். ஆம் இது உண்மை. ஆசைதான் காரணம். ஆசைவசப்படும் மனிதனுக்கு, மேலிடம் (அரசாங்கம்) அளித்த கல்வியில் அல்லதுகளில் ஆசை வசப்படக் கூடாது என்பதை அழுத்தமாகக் காரண காரியத்தோடு, எடுத்துக் காட்டுகளோடு இளம் வயதிலேயே போதிக்கப்பட்டிருந்தால் அவன் தன் ஆசையை நல்லதின் மேலேயே வைத்திருப்பானல்லவா?

நல்லது செய்ய வேண்டும். நல்லது செய்வதற்கு உங்களால் முடியவில்லையெனில் கெட்டது செய்யாமலாவதிருக்க வேண்டும் எனும் பொருள்படப்புறநாநூறில் நரிவெருத்தலையார் 'கயல்முள்ளன்ன நரைமுதிர் திரைகவுள் பயினில் மூப்பின் பல்சான்றீரே! நல்லது செய்தலாற்றீராயினும் அல்லது செய்தலோம்புமின் எனக் கூறியது தமிழில் இருந்தும், ஏன் மாணவர்களுக்குப் போதிக்கப்படவில்லை.

'தீயவை தீய பயத்தலால் தீயவை தீயினும் அஞ்சப்படும்' என்று திருக்குறள் கூறுகிறதே ஏன் மக்களுக்கு இளமைப் பருவத்தில் இதைப் போதிக்கவில்லை

'வான் கவிந்த வையகமெல்லாம் பெரினும் உரையற்க பொய்யோ டிடைமிடைந்த சொல்'! என்று நாலடியார் நவில்வது இந்த நற்றமிழ் நாட்டிற்கு எடுத்துக்கூறப்பட்டிருக்கிறதா?

இளம் உள்ளங்களிலேயே அவசியம் பதித்துவிட வேண்டியது 'சத்தியம்' எனும் ஒன்று! எதஸ்ய பிராமணோ நாம சத்யமிதி

என்கிறது உபநிசத்து. இதன் பொருள் அந்தப் பிரமத்தின் பெயர் சத்தியம் என்பதாம்.

“மனோமய, பிராண சரீர நேதா, பிரதிஷ்டிதோ அன்னே, இருதயம் சந்நிதாய” என்கிறது உப்நிசத்து. ‘கடவுள், மனோரூபியாயும் சரீத்தையும் பிராணனையும் நடத்துபவராயும் இருதயத்தில் (புத்தியில்) நிலைபெற்று, உடலில் உறைபராயும் விளங்குகிறார், என்று சொல்லுவது எவருடைய கண்ணிலும் படவில்லையா? உபநிசத்துகளை எடுத்து மாணவர்களுக்குப் போதனை செய்ய அரசாங்கம் முன்வருமானால் பத்து வருடங்களில் தமிழ்நாடு பிரம்மலோகமாகிவிடாதா?

சத்தியத்தை அறவே ஒதுக்கி வைத்துவிட்டு, உருவ வணக்கத்திற்கு இந்த விஞ்ஞான யுகத்தில் கதவு திறந்துவிட்டுக் கொண்டு செய்யும்ஆட்சியில் மனிதன் சுகத்தையும் அமைதியையும் காண முடியுமென்று சங்கராச்சாரியார் சொல்ல முடியுமா? என்று கேட்கிறேன்.

பூமியேன் கட்டாந்தரையாக மாறிக்கொண்டு வருகிறது? மக்கள் ஏன் பாவிகளாக மாறிக்கொண்டு வருகிறார்கள்? பயன்படுத்தப் படாமையினால் தானே கூட்டியெறியாத வீடு வாசல் குப்பை நிறைந்திருக்காமல் வேறென்ன இருக்கும் !

உபநிசத்துகளை உன்னிப்பார்க்கும்போது கடவுள் அவதரிக்கும் ஒன்றல்ல என்று கூறலாம். அவதாரம் செய்யும் மனிதன் இருக்கலாம். ஆனால் அவதாரம் செய்யும் தெய்வம் இருக்க முடியாது. மனிதனிடம்தான் தெய்வம் இருக்க வேண்டுமன்றித் தனித்து வேறு எந்த இடத்திலும் தெய்வமெ்ன ஒன்றில்லைஎன்று உபநிசத்து உண்மையை உரைக்கிறது. இப்படி இருந்தும் எத்தனை கோயில்களை இந்த இல்லாத தெய்வம் ஆக்கிரமித்துக் கொண்டிருப்பதுமல்லாமல் மக்களுக்கு காலாகாலமாகத் தீராத செலவும் வைத்துக் கொண்டே உள்ளன. எனவே இது நல்லதல்ல என்று சொல்லுகிறேன். இது கூடாத செயல்; நம்மை நாசம் செய்யும் செயல் இந்தக் கோவில் கட்டிக் கும்பிடும் செயல் வேண்டவே வேண்டாம். ஏற்கனவே நாம் பாவிகளாகிக் கொண்டிருக்கிறோம். எனவே, எங்கும் சாந்தி இன்றிச் சமாதானமின்றி நன்னம்பிக்கையின்று

அறவே இல்லாமல் போய், வெளியே சென்ற மனிதன் வீடு வந்து சேருவான் எனும் நிச்சயமின்றி வாழவேண்டிய நிலைக்கு வந்து விட்டிருக்கிறோம்.

நம் தேசம் ஏன் அடிமையாயிற்று ? சுதந்திரம் பெற்றும் நாம் ஏன் சுகம் காணவில்லை ? நாட்டில் சாந்தி, சந்துஷ்டி என்பது தேடினும் காணக் கிடையாது. இவற்றின் காரணம் என்ன? நாம் சத்தியமாகிய பகவானை அறவே இழந்து விட்டோம். அறமாகிய பயமற்ற பெருஞ்சாலையை விட்டுப் பாவிகளெனக் காடே மேடே அலைந்து கற்களை வணங்கிக் கொண்டிருக்கிறோம். இந்தக் கருத்தை ஆச்சாரிமார்கள் மறுக்கவே முடியாது.

இந்த அளவு கர்ம சித்தாந்தம் உண்மை. இதற்கு மாறாகப் பிரார்த்துவ கர்மம் சஞ்சிதகர்மம், இவைகளை மறுபிறவியில் அனுபவித்துத் தீரவேண்டுமென்பதெல்லாம் அறியாமை அல்லது சூழ்ச்சியென்றுதான் நாம் தீர்மானிக்க வேண்டும்.

இந்த முடிவு சரியான முடிவு உபநிசத்திலேயே இதற்காண ஆதாரம் உள்ளது. உயிருள்ள ஒவ்வொன்றும் ஒரே தடவைதான் பிறக்கமுடியும் என்று இயற்கையே நமக்கும் போதிக்கிறது. உபநிசத்தும் சான்று பகர்கிறது.

இந்த ஆத்மாவுக்கு உறைவிடம் மூன்று - தந்தையின் உடல், அடுத்துத் தாயின் உடல், இறுதியில் தன்னுடல், தந்தையின் அன்னபானங்களிலிருந்து, ஆத்மா (விந்து வடிவான) முறையில் கர்ப்பமாயிருக்கிறான். இந்த விந்து எதுவோ அது எல்லா உறுப்புக்களின் சக்தியும் திரண்டு உண்டாகிறது. தன்னிடம் கருவாய்த் தானே தரித்த அந்த ஆத்மாகிய விந்துவை எப்போது ஒரு பெண்ணிடம் விடுகிறானோ அப்போது தன்னைப் பிறப்பிக்கிறான் அது ஆத்மாவின் முதல்பிறப்பு.

அடுத்துத் தன்னிடம் புகுந்த புருஷனின் ஆத்மாவாகிய சீவனைப் பரிபாலிக்கிறாள். மாதங்கள் நிறைந்து தாயின் கருப்பத்திலிருந்து பிறப்பது இரண்டாவது பிறப்பு. ஆத்ம அணு இப்போது குழந்தையாய் உருப்பெற்று விட்டது

குழந்தை தந்தையாகி மறுபடியும் தானே தன் விந்துவாக கருப்பம் தரிக்கும் போது மூன்றாம் பிறப்பு ஆகிறது.

செடி காய்களைவிட்டுக் காலப்போக்கில் காய்ந்துவிடுவது போலவே மனிதனும் இறந்தவன். இறந்தவன் ஏற்கனவே பிறந்திருக்கிறான்.

எனவே, பிரார்த்த கருமமோ சஞ்சித கர்மமோ உயிருடன் வாழும் வரையும்தான் அனுபவிப்பதே தவிர இறந்தபின் மண்ணாலாகிய உடல் மண்ணாகி, நீர், நீரோடும், வெப்பம், வெப்பத்தோடும், காற்று, காற்றோடும் கலந்து விடுவதுதான் உண்மை.

மனிதனுக்கு அறியாமை ஒன்றுதான் பகை. இந்தியாவில் மட்டும் தான் இந்த அறியாமைக்கு கோவிலும் கொண்டாட்டங்களும், பக்தியும், பஜனையும் இன்னும் அமோகமான ஆராவார ஆடம்பரங்களும் உண்டு.

எனவே, என்னை விட இந்த நாட்டில் கீழான அல்லது மேலான ஒரு மனிதன் கிடையாது. நாமனைவரும் மனிதர்கள் மட்டுமே எனினும் தன்னையறிந்தவன் தலைவனாகிறான். தன்னை அறிவதற்கான வழி சத்தியத்தை இருதயத்தில் சதா வைத்திருத்தல். அறநெறிவழுவாதொழுகல் மட்டுமே.

இப்போது நீ துக்கத்திலிருந்து நீங்கினாய், இருளிலிருந்து நீங்கினாய், அச்சத்திலிருந்து நீங்கினாய், உன்னிடம் ஆனந்தமன்றி வேறெதுவொன்றும் இல்லை. ஆம் இப்போது நீ அமரனானாய், மரணத்தை வென்றுவிட்டாய் எனவே என் வாழ்த்துக்கள் வாழ்க இவ்வையம்.

■

- **முதலில் சீர்திருத்தப்பட வேண்டியது தனி மனிதனை; சமூகத்தை அல்ல.**

**– டாக்டர் ராதாகிருஷ்ணன்**

- **மனிதன் கூட்டத்தோடு ஒன்றி வாழும் ஒரு இரண்டு கால் விலங்கு**

**– சௌகா**

14

# அதிதி தேவோ பவ

திராவிட மக்களாகிய நாம், பாவிகளல்லாவிடிலும் புண்ணியம் செய்தவர்களன்று. ஆம், நாம் புண்ணியம் செய்திருந்தால் நமக்கு ஆதி சங்கராச்சாரி இன்னும் மேலான நல்ல தெய்வங்களைக் கொடுத்திருப்பார். திராவிட மக்கள் இவ்வாறு மொழி பேதம், சாதிபேதம், சாமிபேதம், கொள்கைபேதம், செல்வபேதம், கல்விபேதம் போன்ற பிரிவுகளால் சில்லாந்தட்டிப் போய் இந்த அளவு பலவீனராய் இருக்க மாட்டோம்.

தம்முடைய இனமக்களுக்கென மறைந்து வைத்துக் கொண்ட தெய்வம்தான் உண்மையான தெய்வம். 'அது பிறப்பில்லாதது. பிராணன் களிடையில் விஞ்ஞானமயமாயிருப்பது. இருதய ஆகாசத்தில் உறைவது, அனைத்தையும் தன் வசம் கொண்டது. அனைத்தையும் ஆள்வது அனைத்துக்கும் அதிபதி அந்தத் தெய்வமே சர்வேசுவரன்'.

'அதையறிந்தவன் பாவச் செயலால் தொடப்படுவதில்லை. ஆகையால் அமைதியுடையவனாகவும், பொறுமையுடையவனாகவும், ஆத்ம நிஷ்டனாகவும் ஆகித் தன்னிடத்திலேயே அவன் தெய்வத்தைக் காண்கிறான். இவனைப் பாவம் தீண்டுவதில்லை அவனே எல்லாப் பாவங்களையும் தாண்டுகிறான். எனவே பாவமற்றவனாயும், அழுக்கற்றவனாயும், சந்தேகமற்றவனாயும், பிராமணனாயும் ஆகிறான்.

அருமை நண்பனே! சற்று சிந்தித்துப்பார்! மனிதனை பிராமணனாக்கும் தெய்வம் அவர்களுடையது. அந்த ஆற்றல் வாய்ந்த தெய்வத்தை அவர் நமக்குக் காட்டிக் கொடுக்காமல் வேறு தெய்வங்களை பலவீனமான தெய்வங்களையே நம் பங்குக்கு ஒதுக்கித் தந்துள்ளார். அவர் நமக்குக்கொடுத்த விஷ்ணு, சிவன், சூரியன், அம்பிகை, கணநாதன்களெல்லாம் நம்மை, பொங்கலிடு, பூசை செய், கும்பிடு போடு, கூடவே காணிக்கையும் போடு, மொட்டையடித்துக் கொண்டுசெல், அடுத்தவருடமும் வரத் தவறாதே என்று உத்தரவுகளை போட்டு மக்களைச் சாறாகப் பிழிந்து கொண்டு சக்கைகளாக்கி திருப்பி அனுப்பிவிடுகின்றன. என்னதான் செய்வது ? மனம் சோர்ந்து நாம் இந்தத் தெய்வங்களைக் கைவிட்டாலும், இவைகள் நம்மை விடுமாறில்லை. அடிகளார்களும், ஆச்சாரிமார்களும், இடையன் பிரிந்து செல்லும் மாட்டை விரட்டி மந்தைக்குள் சேர்ப்பிப்பதுபோல் மிரட்டி ஒன்று கூட்டி விடுகிறார்கள். தலைவிதியே என்று நொந்துகொண்டு மதம் எனும் பட்டியில் நாம் அடைபட வேண்டியுள்ளது.

அந்தக் காலத்து கிராமந்துத் தெருக்கூத்தில் அல்லியரசி புலம்புகிறாள். அருச்சுனன் அல்லி தூங்கும்போது திருட்டுத்தாலி கட்டிவிட்டதை கண்டு, 'கழுத்தில் விழுந்த மாலை கழற்ற முடியவில்லை; காரிகையே இது யார் சூதோ' என்று பாடிப் புலம்புவதுபோல் நம்மால் இந்த ஐந்து தெய்வங்களிடமிருந்து, என்ன செய்தும் கழற்றிக்கொள்ள முடியாத நிலையில் இன்னுமொருதளை நம் காலை இருக்கிக் கொண்டுவிடுகிறது.

'குதிரை கீழே தள்ளியதுமன்றிக் குழியும் பறித்தது' என்கிற பழமொழி, அந்த சாணக்ய சந்ததிகளுடைய இந்தச் செயலுக்கு வெகு பொருத்தமானது என்று சொல்லலாம். அவர்கள் நமக்குக்

கருணை கூர்ந்தளித்த இதோ இந்த ஒரு உபதேசத்தை ஊன்றிப் பார்த்தால் வயிறு எரியவும் செய்கிறது. மாதா, பிதா, குரு, தெய்வம் எனும் இந்நால்வரையும் நாம் உயிருள்ளவரை மறக்காமல் சதா உள்ளத்தில் வைத்துப் போற்ற வேண்டும் என்பதுதான் அந்த உபதேசம்.

முதலில் இது என் செவியில் விழுந்தபோது எனக்கு வயது ஐந்தும் கூட முடிந்திருக்காது. மிகச் சாதாரணமான ஏழைக் குடும்பத்தில் பிறந்த என்னைப் போன்றவர்களிலிருந்து, இன்று தமிழ் நாட்டில் மிகமிக மேன்மையான நிலையில் உள்ள பிரபுக்கள், புலவர்கள், தமிழ்ப் பேராசிரியர்கள், இலக்கியக் கர்த்தாக்கள் வரை இந்த உபதேசம் பெறாதவர்கள், பெற்று நம்பாதவர்கள் ஒரே ஒரு ஒற்றைப் பிராணி கூட இருக்கமுடியாது என்று நான் சொன்னால் இந்து மதத்தினராயுள்ள ஒருவரும் மறுக்கவே மாட்டார்கள்.

ஆனால், இந்த மாதா, பிதா, குரு, தெய்வ உபதேசத்தில், உண்மை எத்தனை சதவிகிதம்? புனைசுருட்டு, நய வஞ்சகம் எத்தனை சதவீகிதம்? என்று தெரிந்துகொள்ள எனக்கு முக்கால் நூறு வருடங்கள் வாழ்ந்து முடிந்த பின்தான் சமயம் கிடைத்தது என்றும் சொல்லி விடுகிறேன்.

மாதாவைப் போற்ற வேண்டும்; பிதாவைப் போற்ற வேண்டும்; குருவைப் போற்ற வேண்டும்; தெய்வத்தைப் போற்ற வேண்டும் எனக் கனமான அர்த்தம், நயமான சொற்றொடர்கள். கேட்டவர் ஒத்துக்கொண்டே தீரவேண்டிய சாதுர்யமான உபதேசம் இது.

உபநிசத்திலிருந்து நமக்கு கிடைத்த ஒரே ஒரு உபதேசம் இதுதான் என்று என்னால் அறிய முடிகிறது. ஆனால், தலையில்லா முண்டத்துக்கு வேறு பிராணியின் தலையைப் பொருத்தி வீதியில் நடமாட விட்ட தோற்றம்தான் இந்த மாதா, பிதா, குரு, தெய்வமெனும் சொற்றொடர்களின் தோற்றமும்.

இந்த, மாதா, பிதா, குரு, தெய்வத்தின் பூர்வீகர், தைத்திரியோ உபநிசத்தில் காணப்படும். விதம் "மாத்ரு தேவோ பவ! பித்ரு தேவோ பவ! ஆசார்ய தேவோ பவ அதிதி தேவோ பவ" என்று. இவற்றின் பொருள் உபநிசத்தில் உள்ளபடி தாயைத் தெய்வமாகக் கொண்டிரு தகப்பனைத் தெய்வமாகக் கொண்டிரு குருவைத் தெய்வமாகக் கொண்டிரு எதிர்பாராதவாறு நம் வீட்டிற்குப்

புதியதாய் வரும் விருந்தினர் அதிதியைத் தெய்வமாகக் கொண்டிரு என்பதே.

இருந்ததை இருந்தபடி இந்த ஒரு கருத்தையும் கூட முழுமையாகத் தமிழ் மக்களுக்குத் தர மனமில்லாத, மனிதாபிமானம் அறவே அற்ற இந்த ஆச்சாரியர்களின் உள்ளம் எவ்வளவு வஞ்சகமானது, சுயநல முள்ளது என்று இது வெளிப்படுத்த வில்லையா?

ஆரியக் கலப்படத்துக்கு முன் இருந்த ஒவ்வொரு திராவிடக் குடிமகனின் உள்ளமும் விருந்தோம்பலிலும், வீரத்திலுமன்றோ முகிழ்த்து மலர்ந்து முழுமை பெற்றிருந்தது.

'இல் விருந்து ஓம்பி வாழ்வ' தெதற்காக எனில் அது விருந்தோம்புதலாகிய வேளாண்மையைச் செய்தல் பொருட்டே தான் என்று தெளிவு படுத்துகிற தமிழ்வேதமாகிய திருக்குறள்.

'கூடியுண்ணும் குணத்தவர் கிளைபோல் நீடி' என்கிறது கல்லாடம்.

புறநானூறின் புனிதத் தமிழ்மகள் செயல் இன்னும் ஒருபடி மேலுக்குப்போகிறது.

"அது ஒரு சிறிய ஊர். அந்தச் சிறிய ஊரில் இருந்தது ஒரே ஒரு சிறிய நீரூற்று. நீரூற்றைச் சுற்றிக் கழற்சிக் காய்செடிப் புதராய் மண்டிச் சூழ்ந்திருந்தது. முறைப்படி அந்த ஊரிலிலுள்ள மக்களனைவரும் விகல்பமின்றி வேற்றுமை பாராட்டாமல் வரிசைக் கிரமமாகச் சென்று அந்த நீரூற்றிலிருந்துதான் தண்ணீர்கொண்டுவந்து பாங்கும் பரிவுமாக எல்லாம் செய்ய வேண்டியிருந்தது. இரவு நேரங்களில் காட்டுயானைகள் எப்போதாவது வந்து நீர்பருகுவதன் நிமித்தம் போராடிக் கொள்வதும் உண்டு. சுனைநீர் சகதியாக மாறிப் போவதும் உண்டு. உடனே ஆவனசெய்து சண்டை சச்சரவின்றி வாழும் அம்மக்களின் தலைவனாக ஒருஆற்றல் பெருமகன் இருந்தான். அவன் ஒரு மாபெரும் வீரன். அஞ்சாநெஞ்சன் நீதிவழுவா நெறிமுறையினன். ஊரில் அவனே தலைவனாகவும் இருந்தான்.

தலைவனுக்கு ஒரு தலைவியும் உண்டு. அவளும் ஒரு வீராங்கனை. அவள் புகுந்த குடி மாண்புமிக்க அறம் வழுவாப்

பெருங்குடி யென்பதறிந்து அகமகிழ்ந்து வாழ்ந்து வந்தாள். குறையெனக் கூற எதுவொன்றுமில்லா குடும்பத் தலைவியான அவளுக்கு உள்ளத்தில் இரண்டொரு குறைகள் குடியிருந்து கொண்டிருந்தன.

அந்த குறைகள் வியப்புக்குரிய குறைகள். ஆம் இலக்கிய வாழ்வுக்குரியவை அவை. மற்றவர்கள் அறிந்து பின்பற்ற வேண்டிய குறைகள் எனின் மிகைபடக் கூறியதாகாது.

அதே குடியில் பிறந்து முன்தலைமுறையில் வாழ்ந்த வீரன் ஒருவன் பகைவருடன் போரிட்டு இறந்து நடுகல்லாகி அவ்வூரார் நினைவில் நிலைத்திருந்தான். அந்நடுகல்லுக்கு நாள் தவறாது அவ்வீரமகள் ஒரு சுரைக்குடுக்கை நீர்பெய்து கழுவி, சந்தனக் கட்டையெரித்து நறுமணப் புகைகாட்டித்தன் குறை நீக்கக் கோரிப் பிரார்த்திக்கிறாள்.

முதல் குறை இதுதான். “விருந்தெதிர் பெறுவதில்லம்மயானே!' என்பது ஒவ்வொரு நாளும் என் வீட்டுக்கு விருந்தினர் வரப் பெறுவேனாக, என்கிறாள் விருந்தோடு உண்ணுதல்தானே உண்டிக்கு அழகு! விருந்தில்லாது உண்ணும் உணவு சுவையாயினும் அழகற்றதுதானே.

சரி அடுத்து என்ன? என்கிறீர்களா அவள் வாய் மூலமாகவே அதுவும் உரைக்கப்படுகிறது. என்னையும், ஒருவன் பொருள் நசை வேந்தனொடு நாடுதரு விழுப்பகை எய்துக எனவே!

அப்போது அந்தப் பகுதியை ஆண்டுகொண்டிருந்த குறுநில மன்னன் நீங்காத பொருளாசையுடையவன். அவனால் மக்களுக்கு அமைதி கிடையாது. எனவே தன் கணவனுக்கு அந்தப் அரசனோடு ஒரு போர் வரவேண்டுமாம். அப்போரில் அவ்வரசன் இறந்து பட்டு, நல்ல அரசன் ஆட்சிக்கு வரவேண்டுமாம். சிந்தித்துப் பார்க்க வேண்டிய சிறந்த இலக்கியப்படைப்பு இது. விருந்தெதிர் பார்த்து நீதிநெறியறிந்து வாழ்ந்தனர். இரண்டாயிரம் ஆண்டுக்கு முன் தமிழ் மக்கள். இந்த மக்களுக்கு உபநிஷத்திலிருந்து கிடைத்த இந்த ஒரே ஒரு உபதேசமாவது முழுமையாகத் தர மறையவர் மனங் கொள்ளவில்லை.

'அதிதி தேவோ பவ' என்ற சாரம் மிகுந்த அந்தபகுதியை வெட்டிய அளவில், மற்ற 'மாதா, பிதா குருவோடு நிறுத்திக் கொள்ளாமல் எதற்காகத் 'தெய்வம்' என்ற சொல்லை அங்கு பிரதிஷ்டை செய்ய வேண்டும்? இது உருவ வணக்கத்திற்கு உபயோகமாயிருக்கட்டும்' என்பதைத் தவிர வேறு எதுவும் இருக்க முடியாது.

'தெய்வம் மனோமயமானது. உயிரும் உடலுமாக உள்ள மனித உருவமே தெய்வத்தின் உருவம், சத்தியமே அது சங்கல்பமாயுள்ளது. அதுவே ஆத்மா! அதுவே பிரம்மம். அது ஆகாசம் போன்றது - அதாவது ஒளிமயமானது என்று உபநிசத்துகளில் உள்ளதை, ஏன் கல் உருவத்தில் இருப்பதாக மக்களுக்குக் காட்டி வஞ்சிக்க வேண்டும், ஏற்கனவே மக்களிடம் தொன்று தொட்டிருந்து வரும் வீரமும் விருந்தோம்பலும் ஏன் மறக்கடிக்க வேண்டும்? உபநிசத்தில் கோயில் கட்டிக் கும்பிடக் கூறும் தெய்வம் என ஒன்று உள்ளதா? அட பாவிகளே! இது உண்ணும் சோற்றில் நஞ்சுகலந்தது போன்ற செயல் தானே.

இன்று தமிழ்நாடு எந்த நிலையில் உள்ளது? தினத்தாள்களைப் பார்த்தால் நாடு நாடாக உள்ளதா? சாவுச் செய்திகள், சண்டைச் செய்திகள், மழை மாரியின்றி, ஆறு, குளம் அனைத்தும் வற்றி வறண்டு, எங்கு பார்த்தாலும் முட்செடிகளும், பார்த்தீனியச் செடிகளுமாய் மாறிவரும் பயங்கரமான இந்தக் காலகட்டத்திலாவது, 'அகம்பிரம்மாஸ்மி', 'அயம் ஆத்மா பிரம்மம்', 'தத்வமசி', 'பிரஜ்ஞானம் பிரம்மம்' என்பன போன்ற மகா வாக்கியங்களைத் தெரிய எடுத்துக்காட்டி மக்களுக்கு நன்மை செய்ய கூடாதா?

எதிர்காலம் அவர்களின் தவறுகளை மன்னிக்காது. தவறு செய்தவன் தண்டனைக்குரியவன். எனவே எந்த நீதியை அவர்கள் மக்களுக்கு வழங்கியுள்ளார்களோ அதே நீதியைத்தான் அவர்கள் பெற உரிமையுள்ளவர்கள் ஆகிறார்கள்.

காலம் கடந்து விடுமுன் உண்மையே தெய்வம், உருவங்களன்று என இப்போதே சொல்லிவிடுவார்களெனில் அப்போது, ஒருசமயம் மன்னிக்கவும் மக்களுக்குத் தோன்றலாம்.

■

# 15

## சமத்வம், சகோதரத்வம், சுதந்திரம்

'வளிமுதலாய் எண்ணிய காற்று, வெப்பம், குளிர்ச்சி மூன்றும் மிகினும், குறையினும் உடலுக்கு நோய் செய்யும் என்கிறார் வள்ளுவர். இக்கூற்றைச் சரியல்ல என மறுக்கும் ஆற்றல் எந்தக் காலத்திலும் எவர் ஒருவருக்கும் சாத்தியமாயிருக்காது ஏனெனில் இது பரிபூரணமான உண்மையானதனால்!

இது போன்றே ஒரு நாட்டுக்கு நோய் செய்யும் மூன்று தன்மைகளும் உள்ளன. அவற்றின் பெயர், சமத்வம், சகோதரத்வம், சுதந்திரம் எனப்படும். சுய ஆட்சியுரிமையுள்ள ஒரு நாட்டின் ஆரோக்கியமான சுதந்திரத்திற்கு சமத்துவம், சகோதரத்வம் இரண்டும் இன்றியமையாதன- இவ்விரண்டும் இல்லாத சுதந்திரம் கண்ணும், காதும்

இல்லாத ஒரு சீவனைப் போல அளவற்ற இன்னலுக்கு உள்ளாகித் தீரும். ஒருநாட்டின் மேலாண்மைக்குச் சமத்துவம் உடல் போன்றும், சகோதரத்வம் உயிர் போன்றும் சுதந்திரம் உள்ளம் போன்றதும் என்பர் ஆராய்ச்சி வல்லுனர்கள்.

நாம் இவற்றைப் பற்றிச் சற்று உன்னிப்பார்த்தால் இம்மூன்றும் ஒன்றிய நிலையில் உள்ள முழு உண்மை தெற்றென விளங்கித் தீரும். ஆனால், நாம் எதையும் ஆராய்ந்து பார்க்கும் குணத்தை எப்போதோ இழந்து விட்டிருக்கிறோம். கொஞ்சம் தோற்றப் பொலிவுள்ள மனிதன் சொல்வதை சிரசாக வகித்துச் செயல்படுவதே நமது நீண்டநாள் பழக்கமாக இருந்துள்ளது. சுயச் சிந்தனையை அறவே இழந்து விட்ட நாம் பிறர் எளிதாக ஏய்க்க இடம் கொடுப்பவர்களாகிவிடுகிறோம். இந்தத் துர்ப்பாக்கிய நிலை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பும் நம்மிடமிருக்கக் கண்ட வள்ளுவர் கழிவிரக்கம் கொண்டு இந்தக் குறையை தம் குறள்பாவில் எடுத்துக் கூறலானார் : எப்பொருள் யார் யார் வாய் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு. என்று .

சமுதாயத்தின் தார்மிக நல்லுறவுக்குரிய அமைப்புச் சக்தி இதில்தான் உள்ளது. தம்மைப் பிரம்மாவின் சிரசில் உதித்தவர்களாக வெளியே தம்பட்டமடித்துக்கொண்டு சமுதாய இயக்குனர்களாக இன்றும் இருந்துகொண்டிருக்கும் சுயநலச் சூழ்ச்சிக்காரர்கள், இதை நன்கு அறிந்திருந்தும் கிணற்றில் கல்லைப் போட்டு விட்டு எதுவும் செய்யாததுபோல் பாவனை செய்துகொண்டு மௌனம் சாதிக்கிறார்கள் மற்றவர்கள், மிகப்பெரிய படிப்பினராயிருந்தும் இதையறிந்து கொள்ள இயலாதவர்கள் என்பதை நான் உணர்கிறேன்.

என்னைச் சதா சிந்திக்கச் செய்து கொண்டிருக்கும் சொற்கள் இம்மூன்று சொற்கள்தான். ஏனெனில், என்வாழ்வில் இவை எனக்கு முற்றிலும் அன்னியமானவைகளாகவே இருந்தன ஆனால் மிக மிக அவசியமானவைகளாகவும் தோன்றின. வெயிலில் தகிக்கப் பட்டவன், நிழலும் நீரும் எதிர்பார்ப்பது போல், நோய்வாய்ப் பட்டவன், மருத்துவத்தை வேண்டியிருப்பதுபோல் எனக்குத் தேவையாயிருந்தவை இந்தச் சமத்துவம், சகோதரத்வம், சுதந்திரம் என்பவைதாம்.

சொந்த நிலமும் இல்லாத, கல்வியின் அவசியமும் அறியாத விவசாயக் குடிமகனாகப் பிறந்தபின் கூலிசெய்வது தவிர வேறு என்ன செய்ய முடியும் ? கூலிக்காரன் இனத்தானாயிருப்பினும் நிலச் சொந்தக்காரன் சமத்துவம் தருவானா? ஆங்கிலத்தில் தன் கையெழுத்தை மட்டும் போடக் கற்றுக்கொண்டவன், சாவடியில் மண்ணில் தமிழ் எழுத்துகளை எழுதி மூன்றாம் வகுப்புடன் படிப்பு முடித்து கொண்ட என்னைச் சகோதரனாகத்தான் பாவிப்பானா? எனவே நான், சுதந்திரனாக வாழவே முடியவில்லை.

சமத்துவம், சகோதரத்வம், சுதந்திரம் இம்மூன்றும் உறையுளும், உடையும், உணவும் போன்று மனிதனாகப் பிறந்த ஒவ்வொரு வருக்கும் இன்றியமையாததல்லவா? எனினும் இந்த நாட்டில் என்னைப் போன்ற அடிமட்டத்தில் மாட்டிக் கொண்டுள்ள எவருக்குமே இவைகள் கிடைக்கவில்லை.

இந்த நாட்டில் இம்மூன்றும் எப்போதுமே இருந்ததில்லையா? லட்சோப லட்சம் ஆண்டுகளாக எனக்குமுன் வாழ்ந்த ஏழை மக்களனைவரும் இவைகளில்லாமலேதான் வாழ்ந்தனரா? என்று நான் சிந்திக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டேன்.

நான் வசித்த ஊரில், ஒருநாள், 'கயல் முள்ளன்ன நரை முதிர்திரைகவுள் பயனில் மூப்பினையுடைய சிலர் பேசிக் கொண்டிருந்த வார்த்தைகள் கேட்கும் சமயம் எனக்குக் கிடைத்தது. இது எதிர்பாராமல் கிடைத்த ஒரு நல்ல வாய்ப்பு எனவே ஓர்ந்து கேட்டேன்.

அந்த வார்த்தைகள் முதலில் யாரோ, யாரிடமோ எந்தக் காலத்திலோ, எந்தச் சந்தர்ப்பச் சூழ்நிலையிலோ சொல்லப்பட்டு அது உண்மையென நம்பித் தெரிந்தவர் தெரியாதவர்களுக்குச் சொல்ல இவ்வாறே தொன்று தொட்டுப் பிறந்த மேனியாய் என் வாலிபகாலமான அறுபத்தி ஐந்து வருடங்களுக்கு முன்வரை (இப்போது எனக்கு வயது 82) வழங்கி வந்தவைகள் அந்த அபூர்வமான - அர்த்தமற்ற வார்த்தைகள் தான் அவைகள்.

அவையாவன பிரம்மத்தின் சிரசிலிருந்து பிறந்தவன் பிராமணன்; பிரம்மத்தின் மார்பிலிருந்து பிறந்தவன் சத்திரியன்; பிரம்மத்தின் வயிற்றிலிருந்து பிறந்தவன் வைசியன்; பிரம்மத்தின் தொடையிலிருந்து பிறந்தவன் சூத்திரன், என்பன.

இது வருணாசிரம தருமமாம். பிரம்மத்தையறிந்து பிராமண னானவன், புண்ணிய பாரத தேசத்தில் பிறந்து வாழும் நமக்குக் கருணை கூர்ந்து கண்டறிந்து கூறிய மகத்தான கொடை இதுதான்.

உழவனாகப் பிறந்த நான் இப்போது சூத்திரனானேன் எனக்கு இனி சமத்துவம், சகோதரத்வம், சுதந்திரம் என்பவை விலக்கப் பட்டவையாயின.

ஏன் நான் சூத்திரனானேன்? நான் இதற்கு முன்னெடுத்த பிறவியில் செய்த கர்மத்தின் பயனாக இந்தச் சூத்திரப் பிறவி கிடைத்திருக்கிறது. எப்படி இருக்கிறது பாருங்கள் நமது பாரத சமுதாயம். போன வழித்தடங்கள், நீதி நியமங்கள்.

இந்தச் சுயநலச் சூழ்ச்சிக்காரனின் கையில் அந்தக் காலத்து அரசர்கள் வெறும் பொம்மைகள்தான். வைசியர்கள், அரசன் ஆட்சிக்குக் கீழ்ப்பட்டவர்கள், திம்மி குத்தினாலும் சரி; பொம்மி குத்தினாலும் சரி: அரிசியானால் போதும் என்ற பழமொழிப்படி லாபம் ஒன்றே வைசியர்களுக்கு வேண்டியது. அது அவர்களுக்கு அன்றும் கிடைத்தது இன்றும் கிடைத்துவருகிறது.

நிலச்சுவான்தாரர்கள் என்பவர்கள் சூத்திரர்கள். கொஞ்சமும் நிலமில்லாதவர்கள் விவசாயக் கூலிகள், விவசாயப் பண்ணையாட்கள். நிரந்தரமான உழைப்பு, நிரந்தரமான தனி உப்பு மட்டும் இட்ட கூழ் - கஞ்சிதான் இவர்களுக்கு கிடைத்தபாக்கியம். வேறு எதாவது கிடைத்திருந்தால் அது வசவும், அடிகளும்தான்.

சரித்திரப்புரட்டர்கள், மனசாட்சிப் புரட்டர்கள், தத்துவ மறிந்தும், தருமமறிந்தும் தடம்புரள வைத்து நாட்டை ஆயிரம் ஆண்டுகள் மாற்றார்களுக்கு அடிமையாக்கிவைத்து, ஐம்பது ஆண்டு போராடி நாட்டை மீட்சிசெய்த இன்றும், இந்த விஞ்ஞான யுகத்திலும் கூட நம்மை மீளவிடாது கல்லுருவங்களை வணங்க வைத்துக்கொண்டு சுகமாகக் காலம் தள்ளிவிடலாமென்று கருதுகிறார் களென்றால், இவர்களை நாம் என்னவென்று கூறுவது? முதலை களென்றா? அல்லது கடலில் வாழும் ஐடோபஸ்சுகளென்றா?

'சமத்வமற்ற நாடு சக்தியற்றுப் போம்; சகோதரத்வ மற்ற நாடு சாந்தியற்றுப்போம்; சுதந்திர மற்ற நாடும் சுடரொளி இழந்து சுடுகாடாயிடும்' என்பதை நாம் இன்னும உணர்ந்து கொள்ளாது ஊமைகளாயிருக்கலாமா? இருக்க முடியுமா?

இந்தச் சூழ்ச்சிக்காரர்கள், தமிழ்நாட்டில் வந்து தங்காததற்கு முன் சமத்துவம், சகோதரத்வம், சுதந்திரம், அத்துடன் அகிம்சையும் இதே இந்தக் கொங்கு நாட்டில் குடியிருந்தன, என்று புறநானூறு புகல்கிறது.

கொங்குநாட்டை இருபத்தினான்கு கூறுகள் செய்து ஆட்சிசெய்த குறுநில மன்னர்களில் ஒருவன் ஆறைக்கோன் அவனாண்ட பகுதி. ஆறைநாடு என்று இன்னும் பெயர் வழங்கி வருகிறது. அது மேற்கு மலைத்தொடர்களுக்குக் கிழக்கும், நொய்யல் நதிக்கு வடக்கும், பவானியாற்றுக்குத் தெற்கும், காவிரிக்கு மேற்கும் எல்லைகளாகக் கொண்டிருந்தது. மலையும், மலைசார்ந்து நாடும் குறிஞ்சி நிலமாதலால் குறிச்சி என ஊர்ப் பெயர் வழங்கிற்று. அந்த ஊரின் பெயர் வேளான்குறிச்சி எனப்பட்டது. அவனைக் குறமகள் இளவெயினி எனும் பெண்பாற் புலவர் தம் பாடலில் புகழ்ந்து பாராட்டியுள்ளார்.

தனக்குச் சேர்ந்தவர்கள் ஒரு தவறு செய்தால் உடனே பொள்ளெனப் புறம்வேராது மறந்து மன்னித்தல்; தன் குடிமக்களில் யாரேனும் ஒருவர் சிரமசீவியாக இருப்பதறிந்தால், உடனே வெட்கமடைந்தவனாய்க் காலந்தாழ்த்தாது அவனது குறையைக் களைந்து நிறைவுறச் செய்தல்; தன்படைக்குத் தோல்வியென்ற பழிவராது நடத்திச் சென்று வீரம் தோற்றுவித்துப் போரில் வென்று வருதல்; அரசர் கூடியுள்ள அவையிலும் கூனிக் குறுகாது கம்பீரமாக நிமிர்ந்து வீற்றிருத்தல் என முறையே அகிம்சை, சகோதரத்வம், சுதந்திரம், சமத்வம், இருந்ததாக முதல்வரிகள் குறிப்பிடுகின்றன இதுதவிர, இந்த ஆரிய வருணாசிரம தருமத்தை ஒத்துக்கொள்ள திருமூலர், ஒன்றே குலமும், ஒருவனே தேவனும் என்று அவர்களின் கோட்பாடு மீது சுட்டிக் காட்டுகிறார்.

திருவள்ளுவரும் 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப் பொவ்வாச் செய்தொழில் வேற்றுமையால்', என்று சாட்டையடி கொடுக்கிறார்.

ஆனால், இவ்வளவும் விருதாவாகத் தமிழ் மக்கள் தமிழறியாது அவர்கள் வலையில் பட்டு வாழ்வும் குன்றி இன்றுகாறும் வாடி வழியறியாது வதைபடுகின்றனர். அவர்களின் புனிதப் பொய் புவியை ஆள்வதாயுள்ளது.

■

# 16

# பராதீனம்

உலகத்தில் அனேகமாக யார் நாவிலும் உச்சரிக்கப்படாமல் ஒதுக்கப்பட்டு அகராதி அளவில் உயிர்வாழ்ந்து கொண்டுள்ள சொற்கள் இந்தப் பராதீனம், சுயாதீனம் எனும் இரண்டு மட்டும்தான். ஆற்றல் மிக்க இந்த இரண்டு சொற்களையும் அறிவில்லாத மனிதர்கள் அலட்சியம் செய்து ஒதுக்கி வைத்திருந்தால்தான் என்ன? இழப்போ இன்னலோ, இவ்விரண்டு சொற்களுக்கும் என்றும் நேர்வதில்லை. அவை மனிதர்களை மட்டும்தான் பிடித்துச் சாறு பிழிந்து சக்கையாய்க் காயவைக்கும்; 'ஐயோ ஆண்டவனே' என்று கூவவும் செய்யும். கூனிக் குறுக வைத்துவிடும் சக்தி இந்த இரண்டு சொற்களுக்கும் உண்டு.

'ஒரு நாள்' எனும் காலத்தில், இரவும் பகலும் அடங்கியிருப்பது போன்ற நிலையில் உள்ளவை இந்த இரண்டு சொற்களும். இரவும் பகலும் மனிதனையாக்கி வைப்பது போன்றே பராதீனமும் சுயாதீனமும் அதிக நுட்பமாக மனிதர்களை ஆக்கி வைக்கவுள்ளன. அதிலும் அவர்கள் அறிந்து கொள்ளாமலே அவர்களை ஆளும் மாபெரும் சக்தி பராதீனத்துக்குத்தான் சர்வ மானியமாக ஒதுக்கிவிடப்பட்டுள்ளது.

சிந்திக்கும் பழக்கம் படியாத, காரண காரியத்தின் இயல்புகளை ஊன்றி உணராத பாமரன், பணக்காரன், படித்தவன் என உள்ள அனைவரும் இந்தப் பராதீனத்தில் மாட்டிக் கொண்டு பகவானே, பகவானே என ஓலமிட்டுக் கொண்டுள்ளனர். அதிகார வர்க்கத்தினருக்கும் இதிலிருந்து விதி விலக்கில்லை.

எல்லாருடைய இதயங்களும் 'இந்து மதம்' என்ற பெயரில் பக்தி என்ற பட்டியில் அடைக்கப்பட்டுள்ளன. அப்படி அடைத்தவர்கள், ஆதிசங்கராச்சாரி, ராமானுஜாச்சாரி, மாத்துவாச்சாரி எனும் மூன்றே மூன்றுபேர்தான். அதற்குப்பின், நாயன்மார்கள், ஆழ்வார்கள் எனப்பலரும் தோன்றித் தோன்றி குடியானவன் தன் மந்தைகளைக் காப்பதுபோல் மக்களை சுயாதீனத்திற்குப் போகவிடாமல் வெகு எச்சரிக்கையாகக் காத்து வந்தனர், தற்போதும் காத்து வருகிறார்கள்.

பராதீனத்திற்காட்பட்டவன் மனதில் பயம் மண்டிக்கொண்டு விடுகிறது. அதாவது சாமிபயம்; பேய் பிசாசுபயம்; மேலதிகாரிகள் பயம்; பணக்காரர்களின் பயம்; நோய் நொடிகளின் பயம்; பயம், பயம் பயம்! இருட்டில் வாழ்கிறவன் பயந்தே தீர வேண்டியது இயற்கையின் நியதியல்லவா! இவர்களின் உடலில் பலமிருந்தும் உள்ளத்தில் பயம் உதித்துக் கொண்டே உள்ளது.

நோய் காரணமாக ஒருவர் மருத்துவனையை நாடுவதுபோல் பயங்காரணமாக இன்றைய சமுதாயம், இந்தச் செயற்கை விக்கிரக தெய்வங்களை நாட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். உபநிசத்துக்களின் கருத்துக்கு முற்றிலும் மாறான - பொய்யான நிலையிது. சரியான வழியைத் தவற விட்டுத் தடுமாறும் நிலைதான் இன்றைய சமுதாய நிலை.

மேலே சொன்ன மூன்று ஆச்சாரிமார்களின் இருதயத்தில் கடுகளவு உண்மையோ மனிதாபிமானமோ இருந்திருந்தால்', அகம் பிரம்மாஸ்மி நானே பிரம்மமாயுள்ளேன் என்றும்', 'சோ அகம் அஸ்மி' 'நீயும் பிரம்மமாயுள்ளனை என்றும் சொல்லி இருக்க வேண்டும். 'சவ ஏஷஆத்மா ஹ்ருதி' - இந்த ஆத்மா இருதயத்திலுள்ளவன். 'ஏஷ ஆத்மேதி' - இதுதான் ஆத்மா, 'ஏத-தம்ருதம்' - இதுவே அழிவில்லாதது. 'அபயம்' - பயமில்லாதது, 'ஏதத் பிரம்மேதி' - இதுவே பிரம்மா, எதஸ்ய ப்ராமனோ நாம சத்யமிதி - இந்தப் பிரம்மத்தின் பெயர் சத்தியம் என்று சொல்லியிருந்தால், - மக்களுக்குப் போதித்திருந்தால் இந்த அத்வைத, துவைத, விசிஸ்டாத்துவைத ஆச்சாரிகள் மூவரையும் ஆத்மநேய குருமார்களாக இதயத்தில் வைத்துப் போற்றக் கடமைப்பட்டது. இந்தப் பாரத சமுதாயம் என்று கொள்வது மிகச் சரியானது. ஆனால் இவர்கள் வாயில் இந்த உண்மைகள் வரவே இல்லை. சடப்பொருள்களைக் காட்டிச் சிவன், விஷ்ணு எனப் பெயர்கள் வைத்து உருவங்களைச் செய்து கோவில்களைக் கட்டிக் கும்பிடச் செய்தார்கள். எனவே பாரத சமுதாயம் கடவுளை அறியாமல், 'கடவுளே கடவுளே' என்று வெறும் கூச்சல் போட்டுக் கொண்டுள்ளது என்று இன்று என்னைக் கூற வைக்கிறது.

இம்மூவரில் முன்னுரிமைபெற்றவர் காலாடி ஆதி சங்கராச்சாரியார்தான். இவர்தான் அத்வைத போதகர். 'அத்வைதம்' எனில் இரண்டற்றது; பிரம்மம் வேறு நான் வேறு அல்ல; நானே அந்தப் பிரம்மமாயுள்ளேன் என்பதே அதன் பொருள். இது மிகவும் சரியானது. உபநிசத்துகளும் இதைத்தான் உரைக்கிறது. ஆனால், இப்படிச் சரியாகச் சொன்னது தம்மவர்களுக்கு மட்டும்தான். நம்மவர்களுக்கு இதேபோதனை மறைக்கப்பட்டு விட்டது. என்பதுதான் உண்மை.

இது, நம்முடைய சோற்றைத் தின்றுவிட்டு நமக்குச் செய்த பச்சைத் துரோகம் என்றால் அது மிகையாகாது. எப்படியெனில், 'சத்து, சித்து, ஆனந்தம் - சிவம்' என்கிறது ஒரு உபநிசத்து. மற்றொரு உபநிசத்து மேலும் சற்று விளக்கமாக - சத்தியம், ஞானம், அனந்தம் - பிரம்மம்' என்கிறது.

பிரம்மம் அல்லது சிவம் எனும் தெய்வத்தின் உண்மை இதுவேதான். சொற்கள் வேறுபடினும் பொருள் வேறுபடாது. கடவுளைப் பற்றி விளக்கிய நிலைபாடு இது. பூ, புவ. சுவ மஹா, ஜன, தப, சத்திய எனவும் வேறு ஒரு உபநிசத்து விளக்குகிறது. சம்ஞானம், ஆக்யானம், விக்ஞானம் - பிரக்யானம் எனவும் விளக்குகிறது மற்றொரு உபநிசத்து.

விஷ்ணு, சிவன், சூரியன், அம்பிகை, கணநாதன் எனும் ஐந்து தெய்வங்களை நம்பங்குக்கு ஒதுக்கிய அந்தப் பழைய சங்கராச்சாரியார் சிவன் என்கிற தெய்வத்துக்குமட்டும் அதிக முக்யத்வம் கொடுத்து நம்மவர்கள் சிவனை தினமும் தியானம் செய்ய ஒரு மந்திரத்தையும் தானே பிரசவித்து, அதாவது உண்டுபண்ணிக் கொடுத்தார். அந்த மந்திரத்திலும் ஒருதந்திரம் இல்லாமலில்லை. வாசகர்களே சீர்தூக்கிப் பார்த்துக்கொள்ளலாம்.

'அகம் பிரம்மாஸ்மி' எனும்போது, நானே பிரம்மமாயுள்ளேன் என்பது பொருளாயின், தியானம் நம்மைப் பற்றியதாகவே இருக்க வேண்டும். இதுதான் நியாயம் ஆனால் இவர் என்ன செய்தார்? எனின், சத்து, சித்து, ஆனந்தம் - சிவம் என்ற மந்திரத்திலுள்ள சத்து எனும் பகுதியை கத்தரித்து வைத்து விட்டுச் 'சிதானந்த ரூப சிவோஹம்' எனச் செய்து கொடுத்தார். இதன் பொருள்; 'அறிவும் ஆனந்தமுமே ஒரு உருவாகியுள்ள சிவன் என் அகத்தில் உளன்' என்பதாம்.

சத்தியமில்லாத அறிவும் ஆனந்தமும் எத்தகையனவாயிருக்கும்? உப்பு, காரம், புளி இம்மூன்றும் கனருசிகள். வெறும் கஞ்சிவைத்து உப்புமாத்திரம் கலந்து மனிதன் அருந்தலாம். கூட ஒரு இளம் பச்சைமிளகாய் இருந்தால் மேலும் கொஞ்சம் குடித்துவிடலாம், ஆனால், உப்பே இல்லாது காரமும் புளியும் வைத்துக் கொண்டு கஞ்சியை எந்த மனிதனாலும் குடிக்க முடியாது. அவ்வளவும் வீண் இல்லையா?

இதுபோன்று சத்தியமில்லாத - வெறும் அறிவும் ஆனந்தமும் எப்படிச் சிவனாக முடியும்? அதை அகத்தில் தெய்வம் என வைத்துக்கொண்டு ஒவ்வொரு நாளும் இந்த மந்திரத்தை நூறு தரம் வாயில் சொல்லிக் கொண்டிருந்தாலும் அதனால் நேரம் வீணானது

தவிர வேறு என்ன நல்லபயன் விளைந்துவிடப் போகிறது? என் அருமை நண்பனே சிந்தித்துப்பார்?

கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் சங்கராச்சாரியாரால் தமிழர்களாகிய நமக்கு அன்பளிப்பாகக் கற்பித்துக் கொடுத்த - சிவன் எனும் பெயர்ச்சொல் முழுமுதற்கடவுளாக்கிப் பாடிப்பாவிய நூல்கள், வகையும் தொகையும் இன்றிப்பெருகி மலிந்து கிடக்கின்றன. இவற்றை விரிக்கிற்பெருகும்.

அன்றிலிருந்து இன்றுவரை மட்டும் என்ன வந்தது. இனிமேலும் கூட நாமனைவரும் பராதீனர்களாகத்தான் வாழ்ந்தும் வாழ்ந்து கொண்டும், வாழவும் உள்ளோம். நமக்குக் காலம் கழியும் பொருத்தமான பாடல்கள் ஆயிரமாயிரம் உள்ளன. மாதிரிக்கு, என் செயலாவதியதி தொன்றுமில்லையினித் தெய்வமே! உன் செயலேயென்றுணரப் பெற்றேன் எனும் வகையில் அனைத்தும் இருக்கும். 'எல்லாம் அவன் செயல்', நம்மால் எதுவும் செய்ய இயலாது என்னும் முடிவு, முடிந்த முடிவு. இதற்கு மாற்றே கிடையாது.

மாபெரும் பாரத தேசத்தை அராபியன் ஆண்டால் என்ன ஆப்கானியன் ஆண்டால் என்ன, துருக்கன் ஆண்டால் என்ன, இங்கிலீஸ்காரன், பிரன்சுக்காரன், டச்சுக்காரன். போர்த்துக்கீசியன் யாரோ வந்து பல நூற்றாண்டாண்டாலும் என்ன? நாம் வாழ ஊர் இருக்கிறது; உழைக்க நிலமிருக்கிறது. உண்ணச் சோறிருக்கிறது, இம்மைக்கு இது போதாதா? மறுமைக்குச் சிவன் இருக்கவே இருக்கிறான். 'காயமே இது பொய்யடா காற்றடைத்த பையடா' - இது போதாதா மனதைத் தேற்றிக் கொள்ள!

சிவன் கதை இது என்றால் விஷ்ணு கதை இன்னும் ஒருபடி மேலே இருக்கும். அது அவதாரமயம். "நமக்கினி பயமேது, நம் ராமனருளிருக்கும் போது" என்பது தாரக மந்திரம். ராமா என்றாலே பாவம் போம் என்பது அவர்கள் நம்பிக்கை.

'பராதீனன்' என்றால் அடிமை என்பது பொருள். நம்மை நிரந்தர அடிமையாக்கினவர்கள் இந்தச் சங்கராச்சாரி, இராமானுஜாச்சாரி, மாத்துவாச்சாரிகள். இனி இதிலிருந்து விடுதலை இல்லை.

நமது உடன்பிறப்புகள் காமம், வெகுளி, மயக்கம், பொய், வஞ்சனை, பேராசை, பொறாமை, கோள், குரோதம், சச்சரவு, சண்டை, வழக்கு, போலீசு, கோர்ட்டு, வக்கீல், விசாரணை இன்னும் என்னவெல்லாமோ தீராத நரக வேதனை, வறுமை நமது நிரந்தரமான பிறப்புரிமை. இது நம்மை விட்டு என்றும் நீங்கவே நீங்காது, காவி உடுத்திக்கொண்டு, இரந்து வயிறு வளர்த்தினால் என்ன குறைந்து விடும். யார் போகும் போது எதைக் கொண்டு போகிறார்கள் இது நமது கேள்வி.

சைவ சமயம் தனக்குச் சொந்தமாக்கிக் கொண்டுள்ள திருமுறைகளில் திருமூலர் திருமந்திரமும் ஒன்று. அதை சைவ சமயத்தலைவர்கள், படித்துப் பார்த்திராவிடினும் கையால் தொட்டும் கூடப் பார்த்திருக்க மாட்டார்கள் என்று நான் ஐயுறுகிறேன். மூலர் உரைத்த முப்பது மந்திரங்களில் ஒருமந்திரம் போதுமே 'இந்த விக்கிர ஆராதனை' எனும் அறியாமை நோய் தீர்க்க! பதி, பசு, பாசம் எனும் மூன்றும் இன்னவெனவும், இவ்வாறெனவும், அதை அடையும் முறையும் விளக்கமாக இருந்தும் என் பசுவாகிய உயிர் பாசத்தை பிய்த்தெறிந்து இன்னும் பதியையடையாமல் கூக்குரலிட்டுக் கொண்டுள்ளனர். என் மக்களை மந்தையாகக் கூட வைத்து மேலும் மேலும் பராதீனர்களாக மாற்றிக் கொண்டுள்ளனர்; திருமந்திரம் படித்துப் புரிந்து கொள்ளாதவன் இனித் திருக்கயிலாயத்துக்கு எந்த வழியில் சென்று சிவன் பக்தனாவது?

திருமந்திரத்தில், திருமூலர் இவர்களைப் பார்த்து விளிக்கிறார்; 'வானில் ஈசனைத் தேடும் மதியிலிகாள்' என்று. தேனும், இனிமையும் சிவப்போ கறுப்போ?' என்று வினவுகிறார். தேனும், இனிமையும் சேர்ந்திரண்டற்றுள்ளதுபோல்', என - அதாவது ஈசனும் நீயும் வேறுவேறல்ல தேனும் இனிமையும் வெவ்வேறாகாதது போல என்று தெளிவிக்கிறார். 'ஊனுக்குள் ஈசன் ஒளிந்திருந்தானே'. உன்னுடைய உடலுக்குள்ளேயே நீ வானில் தேடும் ஈசன் ஒளிந்திருக்கிறான்' என்கிறாரோ ஏன் இந்த அடிகளார்கள் இதையறியாமல் நாட்டில் அறியாமை இருளைப் பரப்புகிறார்கள்.

"மாடுண்டு கன்றுண்டு மக்களுண்டென்று மகிழ்ந்த தெல்லாம்
கேடுண் டெனக்கேட்டு வந்துவிட்டோம் இனிக்கேள் மனமே!
ஓடுண்டு கந்தையுண்டு உள்ளே எழுத்தோ ஐந்து முண்டு
தோடுண்ட கண்ட னடியார் நமக்குத் துணையு முண்டே!

*என்ற பாட்டுப் பாடக்கூடிய நாட்டில் மழையேன் பெய்ய வேண்டும். பயிர் விளைய ஏழைமக்கள் ஏன் பாடுபடவேண்டும்! ஆட்சி எதற்கு? அதிகாரம் எதற்கு? ஓடு எடுத்துக்கொண்டு போக வேண்டியது தானே.*

*பராதீனத்தின் பயன் இதுதான்? குருடர்கள் யானையைத் தொட்டுப்பார்த்து அபிப்பிராயம் கூறியதற்கும் மக்கள் வானிலும், மண்ணில் கோவில்களிலும் உருவங்களை வைத்துக் கொண்டு, ('சுயாதீனம்' என்ற சொல்லின் பொருளை யறியாது? புத்தி கெட்டவர்களாக வாழும் நாட்டில் சுதந்திரம் தங்கியிருக்க இடமே கிடையாது.*

*பராதீனம் என்றால் அடிமை என்றுபொருள். இதுவேண்டாதது, தேவையற்றது எனவே உரத்துக் கூறுக! என் அருமை நண்பனே. 'நாமார்க்கும் குடியல்லோம்; நமனை அஞ்சோம்; நரகத்தில் இடர்படோம்' என்று நம்பி முழக்கமிடுக! ஆமாம், மேலே கூறிய ஐந்து கற்பனைத் தெய்வங்கள் உட்படத்தான், முழக்கமிடுக!*

■

- தர்மத்தின் புனர்ஜென்மம்தான், பாரத தேசத்தின் விடுதலை
  கவிஞன் இல்லாத ஒரு தேசம். கண்ணில்லாத தேசம் தான்

  – ஸ்ரீ கண்டய்யா

- சுகத்தைத் தேடிக் கொள்ள வேண்டும் என்றால் புத்தகங்களை முதலில் தேடிக்கொள்.

  – வி. ஸ்டாரிட்

# 17

# சுயாதீனம்

'அறிய வேண்டியதனைத்தையும் அலசி ஆராய்ந்தறிவதே என்றுடைய ஆர்வத்திற்குரிய இடைவிடாத செயல். இந்தச் செயலில் மற்றவர்களையும் ஈடுபட வைப்பதே என் நிரந்தர உத்தேசம்'!

ஒரு காலத்தில் ஏதென்சு நகர மூடக் கோடீசுவர்களால், தன் கையாலேயே விசமருந்துமாறு செய்து கொல்லுவித்த ஞானி சாக்ரடீசின் வாக்கியம் இது. இதுதான் எனக்கு மிகவும் பிடித்தமான வாக்கியம். 'நல்ல வாக்கியங்கள்' என்பன உலகில் ஆயிரமாயிரமாக இருக்கின்றன. நானறிந்த அந்த நல்ல வாக்கியங்களில் மிகமிக நல்ல வாக்கியமாக இதை நான் கருது கின்றேன். மேற்கொண்டொழுகவும் செய்கிறேன். காரணம் என் வாலிப வயதிலிருந்து நான் சுயாதீனனாக வாழ்ந்து வருவதுதான். 'அருட்செல்வம் செல்வத்துள் செல்வம்; பொருட்

செல்வம் பூரியர் கண்ணுமுள' என்ற குறள்பா அழுத்தமாக அப்போதே என் இதயத்தில் ஆழப்பதிந்திருந்தது. வாய்ப்பு களிருந்தும், செல்வம் சேர்க்க நான் அறியாதவனாகவே இருந்தேன். இந்தக் குறள்பா, பொருள் செல்வத்தைச் தேடும் முயற்சியில் என்னை அதிகமாக ஈடுபடாமல் செய்து காப்பாற்றியது. உலோபி, என் வெறுப்புக்குள்ளானான். மனிதப் பிறப்பு எத்தகையது வாழ்வு எனும் சொல்லின் பொருள் என்ன என்பதையே அறியா மூடனைக்கூடப் பொருள் மிகப்பெரிய மனிதனாக எண்ணச் செய்து விடுகிறது. பழங்காலத் தமிழர் வரலாற்றை ஆராய்ந்து பார்த்தால் அரசர்களும் அறிவீனமானவர்களாக இருந்துள்ளனர் என்பது அறிஞன் கண்ணுக்குப் புலப்படாமலிருக்காது. சுயாதீனமாக அறிவதறிந்து இந்த மண்ணை ஒருவன் ஆட்சி செய்திருந்தால் இந்த நாட்டில் அந்நிய ஆட்சி ஏற்பட்டே இருக்காது என்று நான் நிச்சயமாகக் கூறத் துணிகிறேன்.

'சுயாதீனம்' எனில் தன்னைத் தானறிந்த நிலைதான் அது. தன்னையறிந்தவன் தலைவனை (கடவுளை) அறிந்தவனாகிறான். கடவுளை அறிந்த ஒரு அரசன் கோயில் கட்டத் துணையாகவே மாட்டான். தோத்திரம் செய்ய மாட்டான். அவன் கல்வி பயிலும் பள்ளிகளை மட்டும் நாட்டில் கட்டி மக்களை அறிவு நிலைக்குக் கொண்டு வந்திருப்பான். இத்தனை சாதி பேதங்கள் தோன்றியிருக்காது. சமத்துவம் கெட்டிருக்காது. சகோதரத்வம் செத்திருக்காது. சுதந்திரம் இழந்திருக்க மாட்டோம். 'சாதி இரண்டொழிய வேறில்லை' என்ற இந்தச் சிறிய தமிழ்மொழி கூட அறியாது, ஓங்காரத்தின் உண்மை அறியாது, ஆங்காரத்திற் காட்பட்டவர்கள், வழிதவற வைத்தவர்களை, புரோகிதன் - முதன்மந்திரிகளாக வைத்துக்கொண்டு ஆட்சி செய்த மாபெரும் தவறு காரணமாய் மக்கள் பரவலாகச் சுயாதீனம் மெல்ல மெல்ல மறந்து காலப் போக்கில் இழக்கவும் நேரிட்டது.

சுயாதீனன் எல்லாம் அறிந்தவனாகிறான். ஆம் உபநிசத்து இப்படித்தான் சொல்லுகிறது. 'பிரம்ம வித்யாம் சர்வ வித்யா பிரதிஷ்டாம். எனின், பிரம்ம வித்தையில் எல்லா வித்தைகளும் வைக்கப்பட்டுள்ளது என்பது பொருள். இந்தப் பிரம்ம வித்தை யென்பதுதான் என்ன? அது அப்படி ஒன்றும் மலையைத் தோண்டி

எலியைப் பிடிக்கும் அளவு மிகப் பெரிய செயலொன்றுமல்ல, மிகவும் எளிய செயல். அதாவது இரண்டு சிறிய வாக்கியங்களின்படி நடந்து கொள்வதுதான். அவையாவன, "சத்யம்வத தர்மம் சர" இவ்வளவுதான் இதன் பொருள். 'உண்மையைப் பேசு அறவழி யொழுகு' என்பதுதான் இந்த உண்மையைப் பேசு எனும் கருத்தை நமது வள்ளுவர் பெருமான் அழுத்தம் கொடுத்து இயற்றிய குறள். 'யாம் மெய்யாய்க் கண்டவற்றுள் இல்லை, எனைத்தொன்றும் வாய்மையின் நல்ல பிற' என்பது தான்.

'தர்மம் சர' எனும் கருத்தை, 'ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது ஊதியம் இல்லை உயிர்க்கு' என்பதுதான். இந்த இரண்டு குறட்பாக்களின்படி நாம் வாழ்வை வழிவகுத்துவிடின் பிரம்ம வித்தையை அறிந்தவராகிறோம். எல்லாப் படிப்பும் இந்த இருசொற்றொடர்களில், இரண்டு குறட்பாக்களில் அடங்கி இருக்கிறது. இதைப்புரிந்து கொண்டொழுகின் நம்மை வெல்லும் சக்தி வேறு ஒருவனுக்கு இருக்க முடியாது. என்று நான் உறுதியாகச் சொல்லுகிறேன். 'அன்னமயம், பிராணமயம், மனோமயத்துக்கு அடுத்துள்ளது விஞ்ஞானமயம் அந்த விஞ்ஞானம் தான் சத்யம் வத, தர்மம் சர'.

ஆடவனாகப் பிறந்த ஒருவன் துணிந்து இவ்விதம் நடந்துதான் பார்க்கட்டுமே; பார்த்துப் பரிசோதனை செய்யட்டுமே. சுயாதீன முள்ளவனாக அவன் பேசும் போது அரசன் தலைதாழ்த்துகிறான், சூழ்ச்சியாளன் உள்ளம் சோர்வடைகிறது. மூடனுக்கு முன்கோபம் வருகிறது. மகாத்மா காந்தியைச் சுட்டுக் கொன்றது போல நாமும் சுடப்படலாம்; ஆயினும் கெட்டுப்போனதொன்றுமில்லை; எப்போதேனும் ஒரு நாள் சொல்லாமல் போகும் உயிர்தானே. கொஞ்சம் முன்னரேயே போனதினால் என்ன நட்டமாய்விடும்? வாழ்ந்த வரையில் அது பெருவாழ்வு; அமரவாழ்வு அது. அச்சமறியாத வாழ்வு அரைநாழிகை வாழ்ந்தாலும் அதற்கு நிகரான வாழ்வு வேறோன்றில்லை.

இது சுயாதீனம், 'அன்பு, அறிவு, தேற்றம், அவாவின்மையென இந்நான்குடையவன்தான் சுயாதீனன்; இவனுடைய உள்ளமே பளிங்கெனத் தெளிந்த உள்ளம், மனிதப் பிறப்பின் முழுப்பயனை எய்தியவன் இவனைத் தவிர்த்து வேறிலராவர்.

உலகில் கோடீசுவரனாலும் எய்த இயலாத உயர்ந்த நிலை சுயாதீன நிலை. சுருங்கக் கூறின், இருதயத்தில் உண்மையை மட்டும் அழுத்தமாகப் பதித்துக் கொண்டால் போதும் புகழ்ச்சி அனைத்தும் அவனைத் தேடி வந்து ஒன்றிக் கொள்ளும். பொய்மை அவன் முகத்தைப் பார்க்கும் போதே அஞ்சி மறையும். அவனுடைய உள்ளத்தில் துன்பத்திற்கு இடம் கிடையாது. முல்லை மலரின் நறுமணம் போல சுயாதீனனின் சொல் ஒவ்வொன்றும் மணங்கமழ் வனவாகவே இருக்கும்.

அவனுடைய நிலை அத்வைத நிலை. அதாவது நான்வேறு, தெய்வம் வேறு அன்று, 'சோ அகம் அஸ்மி' - 'நானே அந்தத் தெய்வமாயுள்ளேன்' என்று கூறாமல் தோன்றும் நிலை!

இந்த நிலையை உபநிசத்து விளக்குகிறது. "இதுதான் இவனுக்கு ஆசைகள் ஒழிந்த நிலை; பாவங்கள் தேய்ந்த நிலை; பயமற்ற நிலை; இதுதான் இவனுக்கு ஆசைகள் பூர்த்தியான நிலை; ஆத்மா ஒன்றே விரும்பப்படும் நிலை; ஆசை எழாத நிலை; துன்பம் கடந்த நிலை.

திருமந்திரம் இந்த நிலையை நான்குவரிகளில் விளக்குகிறது.

**நானென்றும் தானென்றும் நாடிநான் சாரவே – தானென்று நா**
**னென்றி ரண்டிலாத தற்பதம் – தானென்று நானென்ற தத்துவங்களாக**
**தானென்றும் நானென்றும் சாற்றுகில்லேனே என்று**

"வேதங்களைக் கற்றதாலோ, நுண்ணறிவினாலோ, விரிந்த கேள்வியாலோ இந்த ஆத்மா (சுயாதீனநிலை) ஒரு சாதகனால் அடையப்படுவதன்று; சாதகன், எப்போது ஆத்மா ஒன்றையே ஆத்மாவினால் பிரார்த்திக்கின்றானோ அப்போது அவனால் அடையப்படும். அவனுக்கு அப்போது இந்த ஆத்மா தன்னுடைய உண்மை சுரூபத்தைப் பிரகாசப்படுத்துகிறது" என்கிறது கடோபநிசத்து.

எனவே, நண்பனே! நீ இந்த உடல் அல்ல, உயிருமல்ல. உள்ளமாயிருக்கிறாய். உள்ளத்தில் உண்மையை மட்டும் வைத்துக்கொண்டால் நீ உன்னை அறிந்து கொண்டதன்பயனாய் மேலும் அமரனாகிறாய்!

■

18

# பிரார்த்தனை

என் வாழ்நாளில், துளியும் முக்கியத்துவம் அற்றதென ஒதுக்கி விட்ட ஒரு சொல்தான் இந்தப் பிரார்த்தனை எனும் சொல். ஆனால் உலகின் கண் வாழும் கோடானகோடி மக்கள் இந்தப் பிரார்த்தனை எனும் சொல்லுக்கு அதிகம் முக்கியத்துவம் கொடுத்து நடைமுறையில் கொண் டொழுகுவது நாடொறும் என் கண்ணால் நான் நேரில் காண்கிறேன்.

பிரார்த்தனை அல்லது வேண்டுதல் எனும் சொல்லை ஒரு பொருளற்ற சொல் எனும் நேரத்தில், உலகம் அது ஒருபொருள் பொதிந்த அதிமுக்கியத் துவமுள்ள சொல்லாகக் கருதுகிறது ஏன்? ஒன்று, என் கருத்து தவறாதல் வேண்டும், அன்றேல் அவர்கள் கருத்து தவறாதல் வேண்டும். எப்படிப் பார்த்தாலும் இரண்டும் சரி எனச் சொல்ல இயலாது.

‘வேண்டுதல் எனின், ஒரு உயிருள்ள மனிதனின் விருப்ப வெளிப்பாடு’ என்பது தெளிவு. இது எப்போது பொருளுள்ளதாகிறது எனின் தன்னைப் போன்ற உணர்வுள்ள இன்னொருமனிதனிடம், தன் இயலாமையை விளக்கிக் கூறி உதவுமாறு கோரும் போது, மற்றவன் அதுகேட்டு தன்னால் அது சாத்தியமுள்ளதாயின், வேண்டிக் கொண்டவன், அதற்குப் பாத்திரமானவனாயிருப்பின் கடப்பாட்டுணர்வோடு அவன் வேண்டுதலை ஏற்று நிறைவேற்றுதல் எனும் போது மட்டும் பொருளுடையதாகும். ஆனால் உணர்வற்ற, தெய்வமுட்பட மற்ற உயிருள்ள வேறு எந்த ஒன்றினிடமும் பிரார்த்தனைக்குப் பொருள் கிடையாது, என்பது சிந்தித்துப் பார்க்கும் போது தெளிவுபடுகிறது. நமக்கு வேண்டிய ஒன்று, - அது எதுவாகவேனும் இருக்கட்டும் அதை நாமே தேடிக்கொள்ள வேண்டியதுதான் விதிமுறை. இதனைச் சிந்தித்தறியாது வானைநோக்கியோ, கோயிலுள்ள உருவை நினைத்துக்கொண்டோ பிரார்த்தனை செய்தல் மூடத்தனம். அறியவுள்ளதனை அறியாத பலவீனம், அல்லது வரன் முறையாக வந்துகொண்டிருக்கும் பழக்கத்தின்பாற் பட்டதேயாகும். ‘விழலுக்கு நீர் இறைத்தல்’ என்ற வழக்கு சொற்றொடர் இந்தப் பிராத்தனைக்கு மிக நல்ல முறையில் பொருந்துகிறது, என்று நான் சொல்லிவிட எண்ணுகிறேன்.

பிரார்த்தனை செய்து காரியம் சாதித்துக்கொள்வதற்கேற்ற உணர்வுடைய ஒரு தெய்வம் பிரபஞ்சத்தில் இருப்பதாக நினைப்பது ஒருவித பிரமை அதாவது அறியாமை. உபநிசத்துக்கள் இந்த மாதிரியான ஒரு தெய்வமிருப்பதை ஒத்துக் கொள்வதில்லை. ஆராய்ச்சி அறிவு ஒத்துக் கொள்வதில்லை. இது உண்மைக்குப் புறம்பான நம்பிக்கையை ஆதாரமாகக் கொண்டுள்ளது. இதை விளக்குவது சற்று கடினமானதுதான் எனினும் விளக்கியே தீரவேண்டியது நமது கைவிடக்கூடாத கடமையாகிறது.

காலாடி சங்கராச்சாரி ஆரியமில்லாதாராகிய நமக்கு கருணை பாலித்து இலவசமாகக் கொடுத்த அந்த ஐந்து தெய்வங்களும் உண்மையில் தெய்வங்களல்ல. அவைகளை உபநிசத்துகள் தெய்வங்கள் என்று கூறாது அபரப் பிரம்மம் எனப் பெயரிட்டுள்ளது. அச்சரப் பொருள்கள் என்கிறது.

விட்டுணு, சிவன், சூரியன், அம்பிகை, கணநாதன் என்று ஏற்கனவே கன்னடநூல் விவரித்துள்ளதனைக் முந்திய கட்டுரைப் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவை இன்னின்னது என்று குறிப்பிட வேண்டியது இங்கு அவசியமாகிறது.

'பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம்' என்பனவே அவை. இவ்வைந்து அஃறிணைப் பெயர்களையும் வெகுநுட்பமாகிப் பொருந்த வுன்னித்தான் அவர் உயர்திணைப்பெயர்களைச்சுட்டி நமக்கு இலவசமாகத் தந்தருளினார்.

முதலில் பிருதிவி, அப்பு எனும் வரிசைக் கிரமத்தை மாற்றி வைத்தார். விஷ்ணு எனின் தமிழில் கடல் மேகம், நீர்; ஆரிய மொழியில் அப்பு எனப்படும். அடுத்து சிவன் என வைத்தார்; சிவனுக்கு இன்னொரு பெயர் பசுபதி என்றும் வழங்கப்படும். பசுபதி எனின் அதன்பொருள் வாயு எனப்படுகிறது. இந்த வாயுதான் நமது பிராணன், அல்லது உயிர். நமது உடலிலுள்ள உயிருக்குப் பதி, அதாவது ஆதாரமாயுள்ளது. வானத்திலிருந்து இரண்டாவதாகத் தோன்றிய இரண்டுகுணம் உள்ளது காற்று, வானத்துக்கு ஒரு குணம் மட்டும் உண்டு. அது ஒலி மட்டும்தான், வாயுவுக்கு இரண்டு குணம் உண்டு அவை ஒலியும் தொடுமுணர்வு தருவதுமாகும்.

மூன்றாவதாகச் சூரியனை வைத்தார். வெப்பத்துக்கு, நெருப்புக்குக் காரணமாகவுள்ளது. ஆரிய மொழியில் நெருப்பு தேயு எனப்படும். நெருப்பின் குணம் மூன்று. அஃதாவன ஒலி, பரிசம், தென்படல் எனப்படும்.

நான்காவதாக அம்பிகை என்ற பெண்பால் பெயர் உள்ளது. அம்புவி, புவி என பூமிக்கு இட்ட பெயர்தான் அம்பிகை எல்லா சீவராசிகளையும் தோற்றுவிக்கக்கூடிய, தாய் போன்ற இயல்புள்ளது இந்தப் புவி. இது ஐந்து குணமுள்ளது. அவை ஒலி, பரிசம், தோற்றம், நாற்றம், சுவை எனும் பெயர் பெறும் என்பர். விடுபட்ட நீருக்கு நான்குணம் உள்ளதுவாம். அவை ஒலி, பரிசம், தோற்றம், சுவை எனப்படும்.

அபரப் பிரம்மம் அல்லது அச்சரப்பொருள் எனப்படும் பஞ்சபூதங்களைந்தும் அழியாதது, என்றுமிருப்பவை.

சடப்பொருள்களாகிய இவ்வைந்தினையும் உயர்திணைப் பெயர்களாக்கி உருவங்களைச் செய்து கோவில்களைக் கட்டி அதில் வைத்து நம்மைக் கும்பிடச்செய்தனர்.

கடோபநிசத்துச் சூத்திரம் 6.9க்கு விளக்கம் தரவந்த உத்தரகீதை இப்படிச்சொல்வதை இதற்கு ஆதாரமாக கொள்ளலாம். துவிஜர்கள் (பிராமணர்கள்) பரமாத்மாவை அக்கினியில் பூசிக்கின்றனர். யோகிகள் தங்கள் இருதயத்தில் பூசிக்கின்றனர். அறிவில் முதிர்ச்சியடையாதவர்கள் (பாமரர்கள்) பிம்பங்களில் பூசிக்கின்றனர். சமதர்சிகள் எங்கும் புசிக்கின்றனர் என்கிறது.

இதிலிருந்து கோயில்கள், சமதர்சிகளுக்கும், யோகிகளுக்கும், பிராமணர்களுக்கும் அல்ல, பாமர மக்களுக்கு மட்டும் என்பதை மறுக்க முடியாது. எனவே சடப் பொருளை நோக்கிச் செய்யும் பிரார்த்தனை மட்டும் வீண் என்பதோடு; கோயிலும் வீண்; கும்பிடுதலும் வீண்; பூசை திருவிழாக்களும் வீண்; இதனைச் செய்யும் மனிதப் பிறப்பும் வீண் ஆகிறது என்று கொள்ளலாமல்லவா?

எனவே பிரம்மம், சிவன், விஷ்ணு, சூரியன், அம்பிகை, கணநாதன் எனும் இவைகள் அல்ல மற்றுமுள்ள எந்த ஒரு பெயர்ச்சொல்லுமல்ல எனின், பிரம்மம் என்பது எது என்று கூறவேண்டியது இங்கு அவசியம். அதை முண்டகோபநிசத்து சுட்டிக் கூறுகிறது.

"உடலுக்குள்ளேயே ஜோதி மயமாய்ப் பரிசுத்தமாய் விளங்கும் எந்த ஆத்மப் பொருளைச் சித்தமலம் நீங்கிய சந்நியாசிகள் காண்கிறார்களோ, அந்த ஆத்மப் பொருள் அகண்டமான பிரம்மமாச்சரியத்தாலும் தெளிந்த ஞானத்தாலும், இடைவிடாத தவத்தாலும் சத்தியத்தாலும் அடையப் பெறும்" என்கிறது.

மேலும் கூறுகிறது, "பொன்போன்று பிரகாசிக்கும் சிறந்த புத்திகோசத்தில் குற்றமற்றதும் பிளவு படாததுமான பிரம்மம் உள்ளது. அது சுத்தமாயும் ஒளிகளுக்கெல்லாம் ஒளியாயும் உள்ளது. அப்படியுள்ள அந்த ஆத்மாவை எவர்கள் அறிந்தவர்களோ அவர்களே அறிய வேண்டியதை அறிந்தவர்கள்" என்கிறது.

பிருகதாருண்ய உபநிசத்து மேலும் அதைத் தெளிவு செய்கிறது. "மோச்சத்துக்கு அவித்தைதான் பிரதிபந்தமே தவிர வேறு பிரதிபந்தமில்லை ஆகையால் எவனொருவன் இந்த உலகத்திலேயே அந்தச் சிரேஷ்டமான பிரம்மத்தை நான் தான் என்று சாச்சாத்கரிக்கிறானோ அவன் வேறு கதியை அடைகிறதில்லை. தேவதைகள் கூட பிரம்மத்தை அடையும் விசயத்தில் அவனுக்கு விக்கினம் செய்ய முடியாது. தேவதைகளுக்கும் இவனே ஆத்மாவாயிருக்கிறான். ஆகையால் பிரம்மத்தை அறிபவன் பிரம்மமாகிறான்" என்கிறது.

அறிவார்ந்த நண்பனே! சிந்தித்துப்பார். சரியான வழிக்குவா! மற்றவர்களுக்கும் விளக்கிக் கூறு. துன்பத்திலிருந்து தேசத்தை விடுவிப்பதில் சதா காலமும் ஈடுபடு. சத்தியமே வெல்லும் வாழ்க தமிழ்நாடு.

■

- ஒவ்வொரு வீட்டிற்கும் விளக்கு எப்படியோ அப்படியே புத்தகமும் அவசியம் என்பதை நம்மவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

  – பீ.வி. ஜுக்

- இன்று மனிதனுக்கு மிக மிக அவசியமானது நாய்களைத் தவிர ஒரு குப்பை கூடையும் தான்.

  திருக்குறளையும், புறநானூற்றையும் கற்றுத் தெளிந்து வாழ்வில் கடைபிடிக்காத ஒருவன், தன்னை தமிழன் என்று சொல்லிக் கொள்ள வெட்கப்பட வேண்டும்.

  – வெ.

19

# பரோச்சம்

'பரோச்சம்' எனும் இச்சொல் தமிழ்சொல் அல்ல ஆயினும், பேச்சு வழக்கிலின்றி அகராதி அளவில் வந்து புகுந்து நிரந்தரமான இடம்பிடித்துக் கொண்டுள்ளது இது. இதுவுமன்றி மறை முகமாகவே பல நூற்றாண்டு களாகத் தமிழ் மக்களை நிரந்தரமாக அடிமைப்படுத்தி வைத்துக்கொண்டு ஆட்சியும் புரிகிறது. பலே சக்தி வாய்ந்த சொல் இந்தச் சொல்தான். இச்சொல்லின் பொருள் எளிதில் புரிந்து கொள்ள இயலாததாயுள்ளது. அகராதியின் துணையை நாடினாலன்றி எத்தகைய புலவனுக்கும் இது திகைப்பை ஏற்படுத்தியே தீரும்.

பரோச்சம் எனின், 'அதிரிசிய மானவை' என அகராதி பொருள்

கூறுகிறது. இந்த அதிரிசயமும் ஒரு புதிர்தான். மீண்டும் நாம் அகராதியினிடம் சரணாக வேண்டியுள்ளது.

'திரிசியம்' எனின், காணப்படுவது என்று கூறுகிறது அகராதி. இந்தத்திரிசியம் எனும் சொல், முதலில் அகரத்தைப் பெற்று 'அதிரிசியம்' என வந்தால்அதுதான் பரோச்சமாம். இதன் பொருள் காணப்படாதது என்பதுதானாம். எத்தனை சிரமம் கொடுக்கிறது. நமக்கு இந்தப் பரோச்சம்.

பரோச்சஞானம் எனின், 'காணப்படாதது பிரம்மம்', அது உண்டு, எனப் பிறர் சொல்லி நாம் அதை நம்பும் தன்மைக்குப் பெயர்தான் பரோச்சம், ஆனால் அந்தப் பிரம்மம் எனும் ஒன்று இன்னது எனத் தெரியாது, பிரம்மம் உண்டு என்ற நிலையில் நம்மைச் சதாவைத்துக்கொண்டே பிரம்மத்தை இன்னதென அறிந்தவர்கள் அதனை விவரித்து விளங்க வைக்காமல் இருபத்திரண்டு நூற்றாண்டுகளாக நம்மை அடிமைகளாக்கி உருவங்களை வணங்கவைத்துக்கொண்டே உள்ளனர். இது அவர்களுக்கு முதலில்லாத வியாபாரம், இலவசமான மேலாண்மை யோடு சுகஜீவனம் செய்ய நல்லதொரு மார்க்கமாகவே அமைந்துள்ளது எனின் உள்ளதைச் சொன்னால் உடலெரிச்சல் என்னும் பழமொழிப்படி அவர்கள் உடல் மட்டுமன்றி உள்ளமும் பற்றி எரியத்தான் செய்யும்.

நான் சிந்திக்கிறேன். 'தத்வம் அசி' - அது நீயாயுள்ளனை என்ற உண்மையை மறைத்து, நீ மனிதன் அது தெய்வம் என்று கூறி வாழப்பிறந்த மக்களின் வாழ்வை அறவே பாழாக்கி வைத்த அந்த மூன்று ஆச்சாரிமார்களிடம் அப்படி என்ன சக்தி இருந்தது என்று சிந்திக்கும் போது அதற்கு விடை சூழ்ச்சி என்றுதான் எதிர்ப்படுகிறது. ஆம்! சுயநலச் சூழ்ச்சி ! என்பதுதான் சரியான விடை.

அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு விதிமுறைகளையும் நல்வாழ்வுக்கு உத்தரவாதம் செய்து நூலுக்குத் தந்த திருவள்ளுவரை அறவே மறந்துவிட, அல்லது சரியாக புரிந்து கொள்ளாத தமிழ் மக்களின் உள்ளங்களை சுவர்க்க பாசம் எனும் ஆவலைத் திணித்து தவறான பாதையில் ஈர்த்துச் செல்ல திட்டமிட்ட சூழ்ச்சியால், அந்தக் கால ஆச்சாரிகள் கூட்டத்தினர் மயக்கினர் என்று நான் நிரூபண ரீதியில் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

இதை நிரூபிக்கும் விதத்தில் பண்டைக்காலத்தில் கட்டிய கதை ஒன்றை இங்கு குறிப்பிடுகின்றேன். இது கந்தப் புராணம் பழைய பதிப்பிலிருந்து நான் படித்த கதை. இதை ஏற்கனவே நான் பல சந்தர்ப்பங்களில் பலரிடம் வாய்மொழியாகச் சொல்லியுள்ளேன். ஒரு சிறிய ஊர் அது. ஒரு நாள் ஒரு மாலைப் பொழுது ஒரு பெரிய வீட்டில் முதியவரொருவர் தன் அந்திம கால அவதியில் ஒரு கட்டிலிலில் பிராண அவஸ்தையோடு படுத்திருக்கிறார்.

மகன்களில் ஒருவன், அந்த தந்தையின் அருகில் அமர்ந்து துக்கம் கலந்த குரலில் 'அப்பா'! என அழைக்கிறான். கிழவன் கண் திறந்து தன் மகன் முகத்தை உற்றுப் பார்க்கிறான், ஒரு கேள்விக் குறியாக.

மகன் கேட்டான் : "அப்பா, இந்நாள் வரையும், இன்றும் இந்த வீடு பஞ்சம் பட்டினியின்றி வசதியாக எங்களை வாழவைத்தது. இதிலுள்ள அனைத்துச் செல்வமும் உங்கள் ஒருவராலேயே தேடப்பட்டது என்று அம்மா பலதடவை சொல்லக் கேட்டிருக்கிறேன். ஒருநாளும் நாங்கள் உழைக்கச் சென்றவர்களல்ல. எந்தத் தொழிலும் கற்றுக்கொள்ளவும் இல்லை. எனவே உங்கள் காலத்திற்கு பிறகு நாங்கள் என்ன செய்வது? எப்படி வாழ்வது? என்பது பற்றி எங்களுக்கு நல்லறிவு கூறுங்கள்" என்றான்.

அப்பாக்கிழவன், சற்று சிந்தித்தவாறு இருந்து பிறகு மெல்லச் சொன்னான் : 'ஆக்கரா பிரகரா சங்கரா' என்று மூன்று சொற்களின் படியேதான் நான் செல்வம் சேர்த்தேன். நீங்களும் இப்படியே செய்து செல்வந்தர்களாகி வாழுங்கள்' என்று கூறிக் கடைசி மூச்சும் விட்டு விட்டார்.

அடுத்து சில நிமிடங்களில் இச்செல்வக் கிழவனை எமதர்மன் முன் கொண்டு சென்று தூதுவர் நிறுத்தினார்கள். சித்திரகுப்தன் இவனுடைய பாவ புண்ணியங்களையெல்லாம் டோட்டல் போட்டுச் சரிபார்த்துச் சொல்லலானான் : 'பாவம் தவிரப் புண்ணியம் என்பது கடுகளவும் இன்றி வாழ்ந்த முதல் மனிதன் இவன் ஒருவன்தான். இதற்கு முன் உலகில் பிறந்து வாழ்ந்து இறந்தவர்களில் இவன் செய்த அளவு பாவம் வேறொருவனும் இன்றுகாறும் செய்யவில்லை என்று, இதைக் கேட்டு எமனே திடுக்கிட்டு விட்டான்.

எமனுடைய பிரமை நீங்குமுன், அங்கு சிவகணங்களில் இருவர் அவசரமாக வருவது தென்பட்டது. அவர்களை வரவேற்று உபசரித்து ஆசனந் தந்து அமரச் செய்து, 'வந்த செய்தி என்ன' என்று கேட்கவே, அவர்களில் ஒருவர் இந்த மகாத்மாவைக் கையோடு அழைத்துவரும்படி ஆண்டவன் உத்தரவு செய்துள்ளார் என்றார். இதைக்கேட்ட எமன் சித்திரபுத்திரன் முகத்தைக் கொஞ்சம் கடுகடுப்பாகப் பார்க்கலானான். சித்திர புத்திரன் புத்தி சரியாக வேலை செய்யவில்லையா என்று. ஆனால் சித்திரபுத்திரன் சற்று மலர்ந்த முகத்துடன் அதுதான் சரி; மிகவும் நல்லதாயிற்று, உடனே அனுப்பி விடுமாறு எமனைக் கேட்டுக்கொண்டான். இந்தப் பாவி, அந்த இரண்டு சிவகணங்களுடன் மூன்றாம் கணமாகி சிவலோகம் சென்று சேர்ந்தான்.

அவர்களை அனுப்பிவைத்தபின் எமன் கேட்டான். 'என்னய்யா, சித்திரபுத்திரா! எல்லாம் புதிர் மாதிரி இருக்கிறதே! நீ சொன்னது ஒன்று; நடந்தது வேறொன்று. இதில் எது சரி, எது தப்பு', என்று.

சித்திரகுப்தன் விளக்கினான் : நான் சரியாகவே கணக்கிட்டுச் சொல்லியிருக்கிறேன் பிரபு! நடந்த விசயம் இதுதான் : இவன் கடைசி மூச்சை விடும் முன் மகன் விருப்பத்தை நிறைவேற்ற மூன்று சொற்களைச் சொன்னான் : அதாவது 'ஆக்கரா, பிரகரா, சங்கரா' என்று. அச்சொற்களின் பின்னால் வந்த மூன்று ஒலிகளும் (அரா, அரா, அரா) சிவபெருமானின் பெயராக அமைந்து விட்ட காரணத்தினால் இவனுடைய அனைத்துப் பாவங்களும் பரிகாரம் செய்யப்பட்டு மகாத்மா கலத்தில் பெயர்த்து எழுதப்பட்டது. சிவசாயுச்சமும் அவனுக்குப் பிராப்தமாயிற்று', என்று.

எமனுக்கு ஒரே ஆச்சரியம்! அந்தச் சொற்களின் பொருள் தான் என்ன? எனக்கு அதில் ஒன்றும் புரியவில்லையே அப்பா என்று எமன் சித்திர புத்திரன் முகத்தை பார்த்ததும் சித்திரபுத்திரன் அதை விவரித்தான்.

'ஆக்கரா' என்றால் பிறரிடமுள்ள பொருளைப் பறித்து கொள் என்று பொருள். 'பிரகரா' என்றால், பொருளுக்குச் சொந்தக்காரன் எதிர்த்தால் கன்னத்தில் அறை, உதை, இடி, மிதி இதுபோல எதை வேண்டுமாயினும் செய் என்பது பொருள். சங்கரா என்றால்

இதற்கும் மசியவில்லையெனில் தீர்த்து கட்டு என்பது பொருள்' என்று விளக்கினான் சித்திர புத்திரன். இதைக் கேட்ட எமன் சபாஷ்! கைலாயம் அடைவது, சிவன் கிருபைக்கு பாத்திரனாவது இவ்வளவு சுலபத்தில் இருக்கிறதா? என்று உடல் பூரித்து மகிழ்ந்து கொண்டான். நம்முடைய சிரமத்தில் இந்தப் புதிய சட்டம் முக்கால் பங்கு குறைத்து விடுகிறதல்லவா! என்று.

விஷ்ணுவின் கதையும் இதுதானே. 'ராமா என்றால் அப்போதே பாவம் போக வேண்டியதுதான். ராமனுடைய காலில் பட்டதாகக் கல்லைப் பொன்னாக்கியதை தமிழ் நாட்டில் யார் அறியாதவர்.

எனவே பாவம் பெருகப் பெருக, வாழ்கின்றவர்கள் இனிச் சிரமப்பட வேண்டாமல்லவா. நல்லவர்களாக வாழ்பவர்கள்தான் அதிக சிரமத்திற்கு ஆளாக வேண்டி வருகிறது. பொருளின் பாதுகாப்பின்றி உடுத்திய ஆடையில் தூசு மாசு படிந்து விட்டது போன்று அவசியத்தின் நிமித்தம் சிறு சிறு தவறுகள் செய்திருந்தால் எம தண்டனைக்கும் உள்ளாக வேண்டுமல்லவா?

ஆம் 'பரோச்சம்' மக்களிடையே ஒட்டிக் கொள்வதற்கு ஆதியில் சூழ்ச்சிக் கயவர் கையாண்ட தந்திரம் இதுதான். இன்னும் இது போன்றவைகள் சாபம், அனுக்கிரகம், மார்கண்டன், கண்ணப்பன், சிறுத்தொண்டன் பக்தர்கள் கதைகள் கொஞ்சமா? நம் அருமைத் தமிழ்நாட்டில். இந்த பக்தர்களின் குவியல் நூல்களுக்கிடையில் திருக்குறளையும், திருமந்திரத்தையும் கண்டுபிடிப்பதுதான் மலையைத் தோண்டி எலி பிடிப்பதைப் போன்றதாகிறது.

அருமை நண்பனே, சற்று சிந்தித்துப் பார், ஆன்மீகமெனின் ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய ஆத்மாவை அறிந்து மேன்மைப்படுத்துவது என்பது பொருள். வெளியில் உள்ளவை ஜடப்பொருள். உயிர்ப் பொருளுக்கும் காரணமாக உள்ளவை. தெய்வங்களாகாதவை. மனிதராகிய நாமே தெய்வமாவதற் குரியவர்கள். எனவே நாம் செய்ய வேண்டியது நம்மை நாமறிந்து உண்மை பேசுதல், அறவழி ஒழுகல் மட்டுமே. எனவே இனி நாம் பரோச்சமாயிராமல் அபரோச்சமாய் இருக்க முற்படுவோமாக.

■

20

# அபரோச்சம்

'**ப**ரோச்சம்' எனும் சொல்லின் பொருள் காணப்படாதது எனின் அபரோச்சம் எனின், 'காணப்படும் பொருள்' என்று நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

'எதனால் கேள்விக்கு எட்டாதது கேட்கப்பட்டதாயும், நினைவுக்கு எட்டாதது நினைக்கப்பட்டதாயும், அறிவுக் கெட்டாதது அறியப் பட்டதாயும் ஆகுமோ அதுவே பிரம்மம்! என்கிறது, உபநிசத்து.

தெய்வத்தைப் பற்றி அறிந்து கொள்ள எனை நாடி வந்த யதார்த்த குணமுடைய நண்பனே, (சா காஷ்டா சா பரா கதிச, எது தர்மத்திற்கும் அதர்மத்திற்கும் அப்பாற்பட்டதோ, (அன்யத்ர தர்மாத்) எதைவிட உயர்ந்தது வேறொன்று மில்லையோ அதுவே இப்பிரம்மம்.

இத்தகைய மகத்தான இந்தப் பிரம்மம் இருக்குமிடம் எது என்று நீ தெரிந்து கொள்ள விரும்புவாயல்லவா? அது கோயிலும் அல்ல; குன்றுகளுமல்ல; வானமும் அல்ல வையகமுமல்ல. 'ஹ்ருதிஹ் - யேஷ ஆத்மா!" 'இந்த ஜீவாத்மா இருதயத்தில் உறைகிறான்' என்பது அதன்பொருள்.

'இந்த ஜீவாத்மா அல்லது பிரம்மம் எப்படியிருப்பான் எத்தகையவனாயிருப்பான்' எனின் அதை முண்டகோபநிசத்து விவரிக்கிறது.

"திவ்யோ - ஹ்யமூர்த்த; புருஷர்; ஸ பாஹ்யாப்யந்தரோ - ஹ்யஜ: அப்ராரோ - ஹ்யமணா : சுப்ரோ ஹ்யக்ஷரத் - பரத்ப் பர : என்று. இதன்பொருள் : 'அப்பரமபுருஷன் ஒளி நிறைந்தவன், உருவில்லாதவன், உள்ளும் புறமும் ஒருங்கே உள்ளவன், பிறவாதவன், பிராணனில்லாதவன், மனதில்லாதவன், பரிசுத்தன், மேலான அச்சரப் பிரம்மத்திற்கும் மேலானவன்',

மேலும் துல்லியமாக விளக்க வேண்டுமெனில் அதற்கு வேறு ஒரு மார்க்கமும் உண்டு. எவ்வாறெனில் பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் எனப்படும் பூதங்கள் வெளியே நம் கண்ணுக்கும் புலனறிவிற்கும் தோற்றப் பகுதியாக அமைந்துள்ள இதை சமஷ்டி அதாவது ஏகமாக ஒன்றோடு ஒன்று சேர்ந்துள்ளன. இவைகளே நம்முடல், உயிர், உள்ளம், ஆத்மா என வியஷ்டி அதாவது பிரிந்த நிலையில் அமைந்துள்ளன.

வெளியே எந்த முறையில் அமைந்துள்ளதோ அதே முறையில்தான் நம் உடலிலும் அமைந்துள்ளன. அது சரியானதே ஆகும். நிலத்தின்கண் உள்ள 16க்கு மேல் மேற்பட்ட பௌதிக ரசாயன சாரங்கள்தான் நம் உடல். கீழே நிலத்தோடு கூடியுள்ள நீர் தனக்கு மேலே உள்ள நெருப்போடும் சம்பந்தம் கொண்டுள்ளது. நீரோடு சம்பந்தம் கொண்டுள்ள நெருப்பு தான் காற்றோடு சம்பந்தம் வைத்துக் கொண்டுள்ளது. நெருப்போடு சம்பந்தம் வைத்துக் கொண்டுள்ள காற்று ஆகாயத்தோடும் சம்பந்தம் வைத்துக் கொண்டுள்ளது. அனைத்துக்கும் இடமாக அமைந்துள்ளது ஆகாயம்.

நிலம், நீர், நெருப்பு பெறும் இம்மூன்றும் உருவத்துடனும் காற்று, ஆகாயம், உருவமின்றியும் வெளியே உள்ளன.

காற்றுதான் உயிர் அனைத்துக்கும் எசமானன்; காற்றில்லையேல் நம் உடலில் 98 டிகிரி வெப்பம் இருக்காமல் போய் விடலாம். காற்றின் குழந்தை நெருப்பு. நெருப்பின் குழந்தைதான் நீர். இவை மூன்றும்மிகினும் குறையினும் நோய் செய்யும், வாதம், பித்தம் சிலேத்தும் என்னும் பெயர் கொண்டு இவை வழங்கி வரும்.

இந்த உடலும் உயிருமல்லாது, இன்னுமொரு உறுப்பற்ற உறுப்பும் நமக்குள் உண்டு. அதன் பெயர் தான் மனம். தமிழில் உள்ளம் எனப்படுகிறது.

உடல், உயிருக்கு இடமளிக்கிறது. உயிர், உள்ளத்திற்கு இடமளிக்கிறது. உள்ளம் வானம் போன்றது. வானத்தில் உதித்து வரும் சூரியனைப் போல் நாம் உள்ளத்தில் சத்தியத்தை உதிக்கச் செய்து கொண்டால் நாம் தெய்வமாகிறோம். பொய்யை உதிக்கச் செய்து கொண்டால் சோற்றுப் பிண்டங்களாகி நோய், கவலை, கோபதாபம், பொறாமை முதலிய குணங்களுடன் உருவங்களை வணங்கிக் கொண்டு சீரழிவுடன் இப்போதுள்ளவாறே, 'பிறந்தான், இருந்தான், செத்தான்' எனும் மூன்று சொற்களில் வாழ்க்கையை முடித்துக் கொண்டவர்களாகிறோம்.

சத்தியத்தை உபநிசத்து, 'சூரியன்' என்றே உரைக்கிறது. 'தத்யத் தத்சத்ய மஷெளன சதித்யே', என்று ஆனதனால்தான் சத்தியத்தைப் பிரம்மம் என்று பழங்கால முனிவர்கள் பெயரிட்டழைத்தனர். 'எதஸ்ய பிராமணே நாம சத்ய மிதி', என்று...

சத்தியத்தை உள்ளத்தில் வைத்துக் கொண்டோமானால், மற்ற எல்லா நல்ஒழுக்கங்களும் இயல்பாக நமக்கு அமைந்துவிடுகிறது. எனவேதான், 'பிரம்மஹிரப் ஜோதி பரம்' - பிரம்மத்தை அறிந்தவன் பிரம்மமாகிறான் என்றும், மேலும் விளக்கம் செய்கிறது.

'அகத்தினழகு முகத்தில்' என்று ஒரு பழமொழி தமிழில் இருப்பது எல்லாரும் அறிந்ததுதான். நாம் சத்தியத்தை உள்ளத்தில் வைத்து உரையில் வெளிப்படுத்திக் கொண்டே இருந்தால், நம்முடைய அகத்தழகு முகத்தில் பிரதிபலிக்கும் பொலிவு பெற்றுக்

கண்கள் ஒளியுடையதாகி, தோற்றம், பிறர் மதிப்புக்குரியதாயும் மாறுகிறது. இவ்வாறே நாமே தெய்வமாகிவிடின் நமக்குச் சதா அமைதியும் ஆனந்தமும் தவிர வேறு என்ன வேண்டியுமிருக்காது. எதை அறிய வேண்டுமோ அதை அறிந்தோம். எதை அடைய வேண்டுமோ அதை அடைந்தோம். அமைதியும், ஆனந்தமும் இப்போது நமது உடைமையாயிற்று.

கோடீசுவரன் அனுபவிப்பது துன்பமன்றி இன்பமன்று. அவனுடைய உள்ளத்தில் அச்சம் மண்டியிருக்கிறது. புகழ் அவனை நையாண்டி செய்து கொண்டு ஆட்டம் காட்டுகிறது. 'காமம், வெகுளி, மயக்கம்' எனும் மும்மலங்களும் அவனை ஆட்கொண்டுள்ளன. காசே அவனைக் கனவீனப்படுத்துகிறது. பற்றுகள் அவனைப் பாழ்படுத்தி வைக்கின்றன.

நடத்தையாலன்றி 'நிலையான அமரத்வம் காசினால் பெற முடியாது. வேசதாரிச் சாமியார்களை இவன் சரணடைகிறான். காலில் விழுந்து வணங்குகிறான். அவன் கற்சிற்பங்களைச் சுட்டிக்காட்டுகிறான். எனவே தான் பொதுவாகச் சொல்லுகிறேன்; ஒரு மூடனாக இருந்து கொண்டு கோடீசுவரனாக வாழ்வதை விட ஒரு ஆத்மஞானியாக இருந்துகொண்டு உழைத்து வாழ்வதில் மேலான இன்பமிருக்கிறது, என்று.

நடிப்பு வேறு, நடத்தை வேறு. எனவே, நண்பனே! நல்லன அனைத்தும் உன் நடத்தையில் வெளிப்படுத்து; அதுவே தெய்வீகம். அதுவே அபரோச்சம் புரிந்து கொண்டு புனிதனாகி விடு.

■

- கீர்த்தியினுடைய மாற்றாந் தாயின் பெயர் தான் தரித்திரம் என்பது.

– ஜோஸ்பிலக்

- சத்தியம் யாருக்கும் அச்சமூட்டுவது அன்று. ஆயினும் அதைக் கண்டு மனிதர்கள் அஞ்சவே செய்கின்றனர்.

– வெ.

21

# மூன்று அக்கினிகள்

ஆப்ரகாம் லிங்கன் கூறிய பழமொழி ஒன்று என் உள்ளத்தில் ஒலிந்து கொண்டே உள்ளது. அதை இன்று இங்கே எழுதிவிட எண்ணுகிறேன். 'பலரைச் சில காலம் எமாற்றலாம்; சிலரைப் பலகாலம் ஏமாற்றலாம்; ஆனால், எல்லாரையும் எல்லாக் காலங்களிலும் ஏமாற்றிக் கொண்டிருக்க முடியாது' என்பதுதான் அது. அனுபவ ரீதியான உண்மையை வெளிப்படுத்தும் பழமொழி இது என்றுதான் நான் மறக்காமல் உள்ளத்தில் அதைப் பாதுகாத்து வைத்திருந்ததுவும் ஆனால், இன்று சிந்தித்துப் பார்க்கும் பொழுது என் நம்பிக்கை வீண் என்று தெரிகிறது.

ஆயினும், அமெரிக்கர்களின் இயல்பில், இந்தப் பழமொழி

உண்மையாகவும் இருக்கலாம். ஆனால், நமது பாரத சமுதாயத்தில் இது நடைமுறைக்கு இன்றுவரையும் பொருந்தி வரவே இல்லை. உதாரணம் வேண்டுமெனில், ‘இந்தக் கட்டுரையின் தலைப்பே போதுமானது’ என்று சொல்ல விரும்புகிறேன்.

மூன்று அக்கினிகளின் பெயர்கள் : காருகா பத்தியம், ஆகவனீயம், தச்சிணாக்கினி எனப்படுகிறது. இவற்றின் பெயர்கள் எதுவாகவேனும் இருக்கட்டும்; இவற்றைப் பயன்படுத்திய வகைகள் எவையாக வாயினும் இருக்கட்டும். பிறகு அவையனைத்தும் அவசியமாயின் சிந்திக்கலாம். இப்போது, இம்மூன்று அக்கிகளையும் ஒரு மனிதன் அறிந்திருக்க வேண்டும்; அதை அக்காலத்தில் அறிந்திருந்தவர்கள் மற்றவர்களுக்கு, அவற்றை விளக்கி அறிவித்திருக்க வேண்டும். இதை அவர் செய்யாது மறைத்தனர். மறைத்ததும் அன்றி இந்த அக்கினிகளின் வாயிலாகவே தங்கள் போக வாழ்க்கைக்கு வேண்டிய அனைத்துப் பொருள்களையும் அமோகமாகப் பெற்று அனுபவிக்க முதன்முதலில் அசுரர்களையே சொக்கட்டான் காய்களாக வைத்து ஆட்டம் காட்டினர். அதே வித்தையை அதே விதமாக மற்ற தம் சந்ததிகளுக்கும் கற்பிக்கும் நல்லிடமாகவும் செய்து கொண்டனர்.

‘துவிஜர்கள் (இருபிறப்பாளர்கள்) பரமாத்மாவை அக்கினியில் பூஜிக்கின்றனர்’, எனும் வாக்கியத்தை நாம் இங்கு நினைவுக்குக் கொண்டு வந்து விடுவது முக்கியம். பரமாத்மாவை - கண்ணால் காண இயலாது. தன்னுள் மறைந்துள்ள ஆத்மாவாகிய தெய்வத்தை அக்கினியின் உதவியால் தம்மைக் காப்பாற்றிக் கொள்கின்றனர் என்பதுதான் இதன் உண்மைப் பொருள்.

பிரமம், தெய்வம், பூதம், பிதிர் (தந்தை வழி) தோன்றியவை மானுடம். இவர்களைக் குறித்துச் செய்யப்படுவதுதான் யாகங்களாம். இவற்றுள் வேதமோதல் பிரமயாகம், ஓமம் வளர்த்தலே தெய்வயாகம், பலியீதல் பூதயாகம், தர்ப்பண முடித்தல் பிதிர்யாகம், இரப் போர்க்குணவு முதலியன ஈதல் மானுடயாகம்.

யாகங்கள் ஆக மொத்தம் பதினெட்டு. அந்த யாகங்களின் பெயர்கள் வருமாறு : சோதிட்டோமம், அங்கிட்டோமம், உத்தியம், சோடசி, வாசபேயம், அத்திராத்திரம், சோமயாகம், சாதுர் மாசியம், பவுத்திகமேதம், சௌத்திராமணி, புண்டரீகம்,

அங்கிசயன், இராசசூயம், அச்சவமேதம், வீச்சுவதித்து, பிரமமேதம், பிரணவ பேதம், பசு பந்தம்.

ஒவ்வொரு யாகத்துக்கும் நாட்களின் கால அளவுகள் உண்டு. மந்திரங்கள் தனித்தனி முறைகள் விதிகள் இன்னும் என்ன வெல்லாமோ இருக்கும். அரசனுக்குப் பின்புறம், முன்புறம், வலபுறம் குழிகள் தோண்டப்படும்.

இதில் அரசனும் அரசியும் உக்கார வசதி செய்து வைக்கப் பட்டிருக்கும் இவர்கள் முதுகுப்புறம் அவ்வவ் யாகத்துக்குரிய விதிமுறைகள்படி அளவிட்ட குழியில் முதல் சமித்துக்கள் போட்டு நெருப்பு மூட்டி இரண்டு பேர் இரண்டு நெய் கலயங்களை அருகில் வைத்துக் கொண்டு அகப்பையில் முகந்து மந்திரம் சொல்லிக் கொண்டு ஊற்றுவார். அடுத்தவர், அடுத்த மந்திரம் சொல்லிக் கொண்டு நெய் ஊற்றுவார். அந்த மந்திரங்கள் முடிந்து அதிலிருந்து எழுந்த நெருப்பை முன்புற முன் குழியில் போட்டு முழக்கி நெய்யை ஊற்றிக்கொண்டே மந்திர கோசம் செய்வர். இது முடிந்தால் வலதுபுறம் குழியில் இதே கதை பின்புறமுள்ள குளி நெருப்புக்குப் பெயர் காருகாபத்தியம் முன்புறமுள்ளது ஆர்வ நீயம், வலது புறமுள்ளதால் பெயர் தச்சிணாக்கினி என்பதுவாம்.

இவ்வாறு செய்யும் யாவும் முடியும் காறும் அரண்மனையில் இராச போஜனம். எல்லாம் அவர்களே அவர்களின் விருப்பத்திற்கும் சுவைக்கும் பொருந்தத் தயாரித்துக் கொள்வர். 'பிராமண போஜனம் பிரிய' என்று அக்காலத்திலேயே ஜனங்கள் இந்த விருந்தை அன்புடன் அளித்துப் பாராட்டவும் மறக்கவில்லை.

கடைசியில் யாகம் முடிந்து மங்களாசாசாம் கூறி தத்தம் இருப்பிடங்களுக்கு போகும் போது அரசனுடைய கஜானாவும், பண்டகசாலையும் சம்பூர்ணமாக காலி செய்து விட்டுத்தான் புறப்படுவார்கள். இவ்வளவு சிரம சாத்தியமாக நாட்கணக்கில் விரதமிருந்து யாகம் முடிவு பெறச் செய்து தான தருமம் பண்ணிய அரசனுக்கு என்ன பயன் ஏற்பட்டது எனில் வீண் சிரமமும், பொருளிழப்பும் தவிர வேறில்லை. ஆயினும் அரசனுடைய மனம் நிம்மதியுண்டாக எந்த அளவு அவசியமோ அந்த அளவு வெறும் நம்பிக்கை மட்டும் ஊட்டப்பட்டிருக்கும். நடைமுறைக்குச் சம்பந்தப்படாத காரண காரிய மற்ற வெறும் சடங்குகள், வீண்

செலவும் சிரமங்களும் என அறியாது பகல் கனவில் அரசனையும் மக்களையும் இருக்கவைத்து விட்டு வேறு ஏமாந்த மன்னர்களுக்கு அவர்கள் வலைவீச சென்று சேர்வர். இதுதான் இந்து மதத்தின் இந்து அரசர்களின் பண்டைக்காலத்தின் சாதனைகள். குதிரைகள் வாங்கி வர அரசன் பணம் கொடுத்து அனுப்பினால் பிராமண மந்திரி தூரமான இடம் போய்ச் சேர்ந்து சிவனுக்குக் கோயில் கட்டிக் கொண்டாடி விட்டு வந்த நிகழ்ச்சிகளும் கூட இந்தத் தமிழ்நாட்டில் வரலாறு நிகழ்ச்சியாக உள்ளது. யாகம் செய்வது, கோயில் கட்டிக் கொண்டாட்டம் போடுவது தவிர நாடும், மக்களும் என்ன ஆகிறார்கள் என்ற பிரச்சனைக்கே இவர்கள் இடம் கொடுக்கவில்லை. அப்படி வேறெதுவேனும் இருந்திருந்தால் ஒரு அரசனுடன் இன்னொரு அரசனைச் சண்டைக்குத் தயார் செய்வது; சாவதற்குக் களம் கோலுவதாகவே ஆகும்.

'அரைக்குடம் தழும்புவதைப் போல வேலையில்லா இவன் காலத்துக்குதவாத விவகாரத்தை இழுத்துப் போட்டுக் கொண்டு என்னவெல்லாமோ கிறுக்குகிறான்' என்று யாரும் ஆராயாது என்னைப் பற்றி முடிவுகட்டிவிட வேண்டாம். நான் மட்டும் அல்ல, ஒவ்வொரு அறிஞனும் ஒவ்வொரு காலத்தில் இந்த அவல ஆண்டவன், அவல மதச் சடங்குகளைப் பற்றியும் கண்டித்துக் களைந்தெறிய முயன்றிருக்கிறான் என்பதற்கும் ஆதாரங்கள் என்னிடம் உள்ளன.

வேதகாலத்திலிருந்தே, உபநிசத்துக்களை மறைத்து வைத்துவிட்டு, ஒவ்வொரு உண்மைக்கும் வேறு போலி உண்மையைப் பொருத்தி உண்மைபோல் காட்டி ஆரியரல்லாத மக்களை நாசம் செய்வதை முதலில், அதாவது வேத காலத்திலேயே எதிர்த்தவர் பிரகஸ்பதி என்று 1982 ஜனவரி 'கஸ்தூரி' பக்கம் 87ல் 'பழமையான பாரதத்தில் தார்மீக எதிர்ப்புகள்' என்ற தலைப்பில், ஆர்.டி.எக்டே என்பவர் இந்த எதிர்ப்புகளைப் பற்றிக் கட்டுரையில் விவரிக்கிறார். 'ருக் வேதத்திலேயே இதற்குரிய குறிப்புகள் உள்ளதெனவும்' அவர் எடுத்துக் கூறுகின்றார். அதில் முதல் பாராவின் கடைசி வாக்கியம் இது : இவ்வாறு உண்மைக்கு மாறுபட்டு ஜாதி மதங்களைப் பிரிவினை செய்து ஏமாற்றுகிற வேதியர்களை எதிர்த்துப் பிரசாரம் செய்தவர்கள் மூன்று பிரிவில் அடங்குவர். முதலில் எதிர்ப்பு

தெரிவித்தும் பிரகஸ்பதியின் தலைமையில் போராடினவர்களான பார்கஸ்பதர். அடுத்துத் தொடர்ந்து நீண்ட காலம் எதிர்ப்பு தெரிவித்தவர்கள், உலகாயதர். அதன்பிறகு சார்வாகர் தலைமையில் அந்தப் போராட்டம் உச்சகட்டத்திற்குச் சென்றது. சார்வாகர் கேள்விகள் வேதியர்களை அயரச் செய்வதாயிருந்தது.

சார்வாகரின் பிரதான எதிர்ப்பு, அர்த்தமில்லாத வைதிக சம்பிரதாயங்களிலிருந்து மக்களை விடுவிப்பதாக இருந்தது. சார்வாகரால் தொடுக்கப்பட்டக் கேள்விகள் இவ்வாறிருந்தன. (பக்கம் 83 - 84).

"சுவர்க்கமும் இல்லை, நரகமும் இல்லை. அதுபோலவே பரலோகத்துக்கு இங்கிருந்து போகும் ஆத்மாவும் இல்லை. பிரம்ம, சத்ரிய, வைசிய, சூத்திரர் எனப்படும் நான்கு வருணமும், பிரம்மச்சாரியமாகிய நான்கு ஆஸ்சிரமங்களும் எந்த ஒரு பயனையும் தரமாட்டாது. அக்னி ஹோத்திரம் (யாகங்கள்) வேத மந்திரங்கள், சந்நியாச வேசங்கள் எந்தப் பயனையும் அளிக்காது. நெற்றியில் பஸ்பம் (சாம்பல்) பூசிக் கொள்வது அறிவில்லாத பேடிகள் வாழ்க்கைக்கு உபாயமாகச் செய்துகொண்ட ஒரு தந்திரம் மட்டுமே".

"சுவர்க்கத்துக்குப் போக ஜோதிஸ்டோமத்தைச் செய்யும் போது அதில் பலி கொடுக்கப்படும் ஆடோ, மாடோ, ஆமையோ, குதிரையோ சுவர்க்கமடைவது உண்மையெனின், யாகம் செய்யும் எஜமானன் தன் தந்தையையே யாகபசுவாகப் பலி கொடுத்து சுவர்க்கத்துக்கே அனுப்பி விடலாமே. ஏன் அவ்வாறு செய்வதில்லை".

"இறந்து போனவர்களைச் சிராத்தத்தினால் திருப்தியடையச் செய்ய முடியுமானால் வீட்டை விட்டுத் தொலைவில் பிரயாணம் செய்யும் தந்தை, தமயன்களின் பசி தாபங்களையும் சிராத்தத்தினால் ஏன் தீர்க்க முடியாது!" என்பது போன்ற கேள்விகள் மிகப் பலவாயுள்ளன.

"வேலி முள்ளுக்கு கூர்மையான நுனியைக் கொடுத்தவன் யார்? கரும்புக்கு இனிப்பை அளித்தவன் எவன்? எலுமிச்சை பழம் புளிப்புச் சுவைக்கு அருகதையாக்கினவன் யார்? இவை அவ்வப்பொருள்களின் இயல்பு. ஆனால் எப்போதும் யார்

கண்ணிலும் படாத ஒரு தெய்வம் இருப்பது நம்ப முடியாத பொய்" என்று சாடுகிறார்.

'மனிதனாகப் பிறந்தால் உலகில் யோக்யனாகி வாழ வேண்டும். நிர்வாணர்களாகி, காசாய சடாதரர்களாகி, திரிதண்யராகி உடம்புக்கு சிரமம் கொடுத்துப் பிழைக்குமாறு யார் இவர்களுக்குப் போதித்தவர்?

அடுத்து சமண மதம், பௌத்த மதங்களெல்லாம் இந்த மாதிரி எதிர்ப்பு மதங்களாகவே தோன்றக் காரணங்களாக இருந்ததற்கு முன்னே கூறிய பாருகங்பதர், உலேகாயுதர் சார்வாகர்களின் எதிர்ப்புகளிலிருந்துதான், என்பதில் ஐயமில்லை.

சுக்கராச்சாரி ஏன் அசுர குருவானார்? பராசசெனும் படவப் பெண்ணை மணந்தார்! இந்தப் பொய் மத வேசதாரிகளின் ஏமாறுதல்களைக் கண்டு சகிக்க முடியாததால் தான் வஞ்சகமும், அஜகஜாந்திரக் கட்டுக்கதைகளும் இவர்களுக்குக் கைவந்த கலை எனின் என் அன்புக்குரிய நண்பனே! இந்த உலகம் இதைப் புரிந்து கொள்ள மறுக்கிறது.

இம்மூன்று அக்கினிகளையே எடுத்துக் கொள்வோம். உபநிசத்துகளே இந்த மூன்று அக்கினிகளை நையாண்டி செய்கிறது என்றால் அதையுமா புறக்கணிக்க வேண்டும்?

முண்டகோபநிசத்து சொல்கிறது : "பதினாறு ருத்வித்துக்களைக் கொண்டு எஜமானனும் எஜமானியுமாக இருந்து செய்யும் 18 வகைப்பட்ட யாக கருமங்கள் விரிவுபட்டதெனினும் தாழ்ந்தது. இது, பரமல்லாத வித்தை. யக்ஞரூபமான இப்படகுகள் திடமற்றவை. எவர்கள் இதையே பெரும்பேறாகக் கொண்டு களிக்கிறார்களோ அந்த மூடர்கள் பிறப்பிறப்பை மீண்டும் அடையவே அடைகிறார்கள்".

"அவித்தையினுள் (பரமல்லாத வித்தை) ஆழ்ந்து கிடக்கும் மூடர்கள் தாமே தீரர்கள் என்றும் பண்டிதர்கள் என்றும் தங்களை நினைத்துக் கொண்டு துன்பங்களால் பீடிக்கப்பட்டு தடுமாறு பவர்களாய்த் திருடர்களால் வழிகாட்டப்பட்ட குருடர்கள் போல சுற்றிச் சுற்றி வருகின்றனர்".

"அவித்தையில் வெகுவாக ஆழ்ந்தவர்களும் அறிவிற் சிறியோருமாகிய இவர்கள் தம்மை கிருதார்த்தர்களாக மதித்துக் கொள்கின்றனர். ஆசைவயப்பட்டமையால் காமிய கருமத்தில் பற்றுள்ளவர்கள் உண்மையை உணர்வதில்லை. அக்காரணத்தால் துன்பத்தால் பீடிக்கப்பட்டவர்களாய், அழியும் சுவர்காதி உலகங்களை அடைந்து மீண்டும் அங்கிருந்து கீழே நழுவுகின்றனர்".

இவற்றை எண்ணிப் பார்க்க வேண்டும் தமிழ்ப் புலவர்கள். இந்த காருகாபத்தியம், ஆகவநீயம், தட்சணாக்கிணி என்பவை முழு பொய்தானா? எனின் இல்லை; இதிலும் உண்மை அறவே மறைக்கப்பட்டது. விபரம் இது;

சடாக்கினி (ஜீரணார்கனி) பிராணாக்கினி, ஞானாக்கினி எனும் இந்த மூன்று அக்கினிகளையும் நாம் சதா ஓத வேண்டும். இவை அவியவோ குறையவோ விடக் கூடாது. நூறாண்டு காலம் நோய்நொடியின்றி வாழ, நல்லமுறையில் நம்முடலைக் காப்பாற்றிக் கொள்ளச் செரிமான சக்தியிருந்தால்தான் பிராணன் சக்தியுடையதாக இருக்கும். இவ்வாறிருக்க உள்ளம் மாசுபடியாது, தூய்மையானதாக இருக்க அறிவு வழியில் ஒழுகல் அவசியம். சத்தியம் அதற்கு அத்தியாவசியம். இது ஞானாக்கினி. சத்தியம் - ஞான சூரியன். அறவழி வாழ்க்கைப் பாதை. இதற்கு உடல் ஆரோக்கியம் அவசியமல்லவா?

உடல், உயிர், உள்ளம் செம்மைப்பட்டிருந்தால் நாம் மகானாகிறோம். அதாவது தெய்வமாகப் போற்றப்படுகிறோம். இந்த உண்மையை எந்த அரசனுக்கும் இவர்கள் சொன்னவர்களே அல்ல! வெளியே நெருப்பில் நெய்விட்டு எரித்து வேடிக்கைக் காட்டிவிட்டு வேதியர்களென தம்மை அழைத்துக் கொண்டுத் திரியும் இவர்களால் நாடு இன்றும் அமைதி காணாது அல்லல்பட்டுக் கொண்டுள்ளது. எனவே ஜீரணார்க்கினி, பிராணாக்கினி, ஞானாக்கினி இம்மூன்றும் உலகில் என்றும் நிலவுக. உண்மை வெல்க.

■

22

# ஜோதிசம்

"வேத தர்ம சாஸ்திரங்கள் பாதுகாக்கப்பட வேண்டியவை" என்கிறார் சிருங்கேரி ஜகத்குரு ஸ்ரீ பாரதி தீர்த்த ஸ்வாமிகள். செப்டம்பர் 1987 தினமணி நாளிதழில் அவருடைய அருளுரை - (ஆம்அந்த உரை தினமணி ஆசிரியருக்கு அருளுரை) யின் தலைப்பில் படித்தறிந்தேன். பாது காக்கப்பட வேண்டியவை வேத தர்ம சாஸ்திரங்கள் மட்டும் தானா? மக்கள் தேசம், வாழ்க்கை, கலாச்சாரம், அமைதி, ஆனந்தம் என மற்றுமுள்ள அனைத்தையும் விடப் பாது காக்கப்பட வேண்டியவைதானா இந்த வேத தர்ம சாஸ்திரங்கள்?

அப்படியே அவர் அவற்றைப் பாதுகாத்துக் கொண்டு வரட்டும்

யாரும் வேண்டாம் எனச் சொல்லவே மாட்டார்கள். ஆனால் அந்த வேதம், தர்மசாஸ்திரங்களைத் தமிழர்கள் எதற்காகக் காப்பாற்றுவதில் பங்கு பற்ற வேண்டும்? என்பதுதான் எனக்கு விளங்குமாறில்லை.

தமிழ்நாட்டை மட்டுமன்று; காஸ்மீரத்திலிருந்து கன்னியா குமரிவரை, இந்த வேத தர்மசாஸ்திரங்களை நம்பிப் பின்பற்றி இந்து மதத்தினரான நம்மை நூற்றுக்கணக்கான ஆண்டுகள் அந்நியர்களுக்கு அடிமைப்படுத்திவைத்தது என்பது பொய்யல்லவே. மனித வாழ்வையே சர்வ நாசப்ப்டுத்தி இன்றளவும் ஏன் நாளைக்கும் கூட அப்படி வைத்திருக்கவே இன்னும் காத்திருக்கிறது என்பதும் பொய்யாகாதே!

ஆம்! இது அருளுரையன்று; தலையிலிருந்து கால்வரையும் தூய மருளுரை என்று சாந்தோக்கிய உபநிசத்து சாட்சி சொல்கிறது

ஜனத்குமாரரை அணுகி நாதமுனிவர் வேண்டிக் கொள்கிறார்!

"ஐயனே! உபதேசம் செய்தருளும் என்று உமக்கு ஏற்கனவே என்ன தெரியுமோ அதைத் தெரிவியும்; அதற்குப் பின் உமக்கு உபதேசிப்போம்" என்கிறார், ஜனத்குமாரர்.

"ஐயனே! ருக்வேதம் தெரியும்; யஜுர்வேதம், ஸாமவேதம், நான்காவதாக அதர்வன வேதம், ஐந்தாவதாக இதிகாச புராணம், வேதங்களின் வேதமாகிய இலக்கணம், பிதிருகல்பம், கணித சாஸ்திரம், சகுண சாஸ்திரம், காலநிர்ணயம், தர்க்க சாஸ்திரம், நீதி சாஸ்திரம், நிருக்தம், சிட்சையாகிய வேதநூல் பூதவித்காத, போர்முறை, எல்லாம் கற்றுள்ளேன், ஐயனே"!

'ஆயினும் நான், ஐயனே! மந்திரங்களை மட்டும் அறிந்தவனேயன்றி ஆத்மாவை அறிந்தவனல்லன். ஆத்மாவை யறிந்தவனே சோகத்தைக் கடப்பான் என்று தேவரீரைப் போன்றவர்கள் சொல்லக் கேட்டுள்ளேன். நான் சோகத்திற்குட் பட்டிருக்கிறேன். ஐயனே என்னைத் தேவரீர் சோகத்தைத் தாண்டும்படி செய்விக்க வேண்டும்' என்றார்.

நாரதரின் இந்த வேண்டுகோளுக்கு ஜனத்குமார் சொல்வது

"ஒரு சிறிய வார்த்தை. 'நீர் எதெது கற்றுள்ளீரோ அதெல்லாம் வெறும் பெயர்கள்தாம். ஆம் வெறும் பெயர்கள் தாம்' என்று கூறும் இந்த வேத, தர்ம சாஸ்திரங்களைத்தான் சிருங்கேரி ஜகத்குரு ஸ்ரீ பாரதி தீர்த்த ஸ்வாமிகள் கூறும் வேத தர்ம சாஸ்திரங்கள் என்பதை தமிழ் மக்கள் இனிமேலாவது புரிந்து கொள்ள வேண்டியது மிக மிக அவசியமாகிறது. ஏனெனில் இவைகள்தான், நமது சமத்துவ சகோதரத்துவ சுதந்திரத்தின் மகா கொடிய விலங்குகள். இதிலிருந்து விடுபடாதவகையில் நாம் மீட்சியடைய மாட்டோம் என்று கூறிவிட்டு இனி எழுத எடுத்துக்கொண்ட விசயத்துக்கு வருகிறேன். அதன் பெயர் ஜோதிஸம்.

நான்கு வேதங்களின் அங்கங்களாகவுள்ள வியாகரணம், சிட்சை, நிருத்தம், சந்தஸ், கல்பம், ஜோதிஸம் எனும் ஆறும் நம்மை பிடித்து பீணிக்கிற பீடைகள். இவற்றில் கடைசிப் பீடைதான் இந்தச் ஜோதிசம். மகா கொடிய மலைப் பாம்பின் வாயில் சிக்குண்ட மான்குட்டிபோல் இந்த ஜோதிசத்திடம் நாம் மாட்டிக் கொண்டோம், அல்லது மாட்டப்பட்டுள்ளோம் என்பது அறிவு பூர்ணமான உண்மை.

சூரியன், சந்திரன் இரண்டும் நாமெல்லாரும் அறிந்த ஜடப்பொருள்கள் புதன், சுக்கிரன் , செவ்வாய், வியாழன், சனி வானில் தூரத்தில் உள்ள கிரகங்கள். ராகு, கேது இரண்டும் பெயரளவில் உள்ளவைகள். எல்லாமே ஜடப்பொருள்கள்தாம்.

உலகிலுள்ள எல்லா மக்களையும் விட்டுவிட்டு இந்து மதத்தினரான நம்மை மட்டும் பிடித்து ஆட்டிப் படைக்கும் சக்தி இவைகளுக்கு எங்கிருந்து வந்தது?

சில ஆண்டுகளுக்கு முன் அமெரிக்கர்கள் விண்வெளிக்குச் சென்று இதே சந்திரன் மேல் நின்று, காரி உமிழ்ந்து மேலும் அசுத்தப்படுத்திவிட்டு அந்த மண்ணையும் எடுத்துக் கொண்டு வந்தது உலக மக்கள் மறந்துவிடவில்லை.

ஒவ்வொரு திருமணமும் ஜோதிசம் பார்த்து பஞ்சாங்கம் பார்த்து முறைப்படி புரோகிதரே நடத்தி வைத்தவைகளில் பத்துக்கு ஐந்து விழுக்காடு 3,4 மாதங்கள் முடியும் முன் அமங்கலமாகியோ

மண்ணெண்ணைக்கு காதியாகியோ முடிந்து மூழ்கிப்போவதை நாம் இன்று நேரிலும் பத்திரிகை வாயிலாகவும் காண முடிகிறது.

ஒவ்வொரு மனிதனையும் ஆட்டிப்படைக்கும் வல்லமை இந்த ஜடப்பொருளுக்கு இருப்பதுண்மையாயின் அது எல்லா நாட்டவர்க்கும் பொதுவாகவன்றோ இருக்கவேண்டும். இந்த அவலங்களில்லாது இன்றும் எத்தனையோ நாடுகள் அமைதியாகவும் ஆனந்தமாகவும் மக்களை வாழ வைத்துக் கொண்டிருப்பதுவும் கண் கூடுதானே.

'உள்ளிய தெய்த லெளிதுமன் மற்றுந் தானுள்ளிய துள்ளப் பெறின்' எனுங் குறளையும் 'தன்னை அறியாது தானே கெடுகின்றான். தன்னையறியத் தனக்கொரு கேடில்லை' எனும் திருமந்திரத்தையும் நம்பி நடந்தால் இந்த கிரகப் பொய்கள் பெட்டிப்பாம்புகளாகி அடங்கிவிடுகிறது என்று என்னைப் போன்றுள்ள அனைவரும் அறிவர். ஆனால் பகுத்தறிவில்லாத பாமர மக்கள் ஜோதிட மூடர்களின் போசகர்களாகி நம்பி நடந்து இன்று படும் துன்பங்களை தொகுத்துக் கூற ஒரு எண் கிடையாது என்று கருத வேண்டியுள்ளது.

ஜோதிசத்தில் நம்பிக்கையிருந்திருந்தால் திருவள்ளுவரோ, திருமூலரோ மனித மேன்மைக்குரிய பாடல்களைப் பாடி இருப்பார்களா? உபநிசத்துக்கள்தான் உண்டாயிருக்குமா? 'ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா ஊக்கமுடையானுழை' எனும் குறட்பா தோன்றியிருக்குமா? இவ்வாறு மேலும் நாம் தர்க்க ரீதியாக அலசி ஆராய்ந்தால் இந்த ஜோதிசம் பழங்கால ஆரியர்கள் பாமர மக்களிடம் பறித்துத் தின்பதற்காகச் செய்ததென்று உறுதியாகக் கூறலாம். இதில் துளி ஐயமும் யாருக்கும் வேண்டியது இல்லை. அளவற்ற ஆதாரங்கள் எண்ண எண்ண என் உள்ளத்தில் உதித்துக் கொண்டே உள்ளது.

தர்க்க ரீதியாக நான் எடுத்துக் காட்டும் ஆதாரங்கள் சரியல்ல எனின் விட்டுத் தள்ளுங்கள். ஆம். தமிழ் வல்லுநர்கள் மறுக்கவே முடியாத ஆதாரங்களும் வேண்டிய அளவு என்னால் எடுத்துக்காட்ட முடியும். ஜோதிசத்தைக் கூடாதென மறுத்து ஒதுக்கியவர் ஆதிகாலாடி சங்கராச்சாரி என்றால் நீங்கள் முகம்

சுளிப்பீர்கள், நம்பவும் மாட்டீர்கள். ஏனெனில் நீங்கள் சிந்தனையாளர்களல்ல. ஆயினும் என்ன? நான் இங்கு உண்மைகளை மட்டுமே எழுதுகிறேன். நீங்கள் நம்பாவிட்டாலும் உங்களுடைய சந்ததிகள் நம்பித்தானாக வேண்டும். சங்கராச்சாரியின் வாயிலிருந்து அவசியத்தை முன்னிட்டு வந்த சூத்திரம் இது.

"அத்யாஷ்டமிதி நவமிதி சதுர்தசீதி ஜோதிஷ்க வாஜோ பவசந்தி பக்த்யா! ஸ்ருதேஸ்த்வஹோ தத்துவ மசீதி வாக்யம் ந விஸ்வ சம்த்யத்புதே வேத தேவா" இந்தச் சூத்திரத்தின் பொருள் இதுவே இன்றைய தினம் அக்ஷடமி, நாளைய தினம் நவமி, இன்று சதுர்தசி, என்கிற ஜோசியர்களின் சொற்களைக் கேட்டு அதை அப்படியே நம்பி உபவாசம் மேற்கொண்டு ஒழுகுகின்றனர் இந்த மக்களனைவரும்! ஆனால், சுருதியின் "தத்துவமசி" எனும் வாக்கியத்தில் நம்பிக்கை வைத்து நடக்காமலிருப்பது உண்மையாக ஆச்சரியமாகவுள்ளது.

தமிழ் விற்பன்னர்கள் இதைச் சற்று மனதிற்கொண்டு சிந்தித்துச் செயல்படின் குதிரைக்கு கால் தளையிட்டிருப்பது போன்ற இந்தக் கொடிய ஜோதிடத்தளையிலுருந்து மக்களை விடுவித்து விடலாம்தான். ஆனால் தமிழ் நாட்டில் கிளிப்பிள்ளை விற்பன்னர்தானேவுள்ளனர். அவர்களும் காசுக்காக வேசங்கட்டிக் கொண்டல்லவா இன்று மேடையேறுகிறார்கள். பாவம் அவர்கள் மீது நான் தவறு சுமத்தமாட்டேன்.

எட்டிக்காய் அடியிலிருந்து நுனிவகையில் உள்ளே வெளியே உள்ளதனைத்தும் கசப்பது போல் இந்தச் சோதிசம் முழுவதுமே முழுப்பொய் என்றுரைத்தால் அது உண்மையை அஞ்சாமற் சொன்னதேயாகும். இந்த வாக்கியத்தை நிரூபணம் செய்ய இங்கு இரண்டு சாட்சியங்களை எடுத்து வைக்கவும் முயல்கிறேன்.

முதலாவது சாட்சி; கிரகங்களின் இயக்க நியதிகளில் சில மாறுதல்கள் ஏற்படும்போது நம்முடைய ஜோதிடர்கள் சுமார் இருபது வருடங்களுக்கு ஒரு தடவை, அறிவு சூனிய வாதோன்மத்தர்களாவது உலகம் ஏற்கனவே நேரில் கண்டிருக்கிறது. கடந்த 1962 பிப்ரவரி மாதத்தில் உண்டான அக்ஷடக்கிரகங்கள் ஒன்றிய நிலையின் விளைவு மிக பயங்கரமாக

இருக்கும் என்று நமது ஜோதிடர்கள் 'டாம்' போட்டு எவ்வளவு பயங்கரத்தையூட்டினர் என்பதை எண்ணிப்பாருங்கள். அவர்கள் ஊட்டிய பயங்கரம் என்ன ஆயிற்று? ஒன்றுமே ஆகவில்லை என்பதை நாமனைவரும் கண்டிருக்கிறோம்.

இத்துடன் இந்தச் ஜோதிடர்கள் நின்றார்களா? நாம் சொன்னது பொய்யாய் விட்டது என்று கூச்சம் அல்லது வெட்கமாவது இருந்ததா? எதுவும் கிடையாத சோற்றுப் பிண்டங்கள்தான் இவர்களனைவரும் என்பது நமக்குப் புரிகிறதல்லவா?

இஃதொன்றுடன் இவர்கள் நின்று விடவில்லை, மீண்டும் 1982ஆம் ஆண்டும் முரசு கொட்டினர் 'உலகம் அழிந்து விடப் போகிறது; கிரகங்கள் நம்மைச் சர்வ நாசம் விளைக்க இந்த நாளைத் தேர்ந்தெடுத்துள்ளதை நாங்கள் அறிந்து கூறுகிறோம்' என்று.

இந்தச் சுயநல மாமேதைகள் புலி வருகிறது புலி வருகிறது என்று போட்ட கூக்கூரல் வீணாகும் என்பது அவர்கள் அறிந்தே இருந்தனர். இந்த இரண்டு சந்தர்ப்பங்களிலும் உலகத்திற்கு எந்த ஒரு கெடுதலும் ஏற்படாமல், தாங்களே மிகவும் முயன்று முறையாகப் பிரார்த்தனைகள், ஜபங்கள், உருவ வழிபாடுகள், யாகங்கள் என மக்களைக் கொண்டு நடத்திவைத்து எல்லா அநிஷ்டங்களும் நீக்கி விட்டதாகவும் வெற்றி முரசு கொள்ளச் செய்தனர்.

1980 ஜனவரி மாதம் நடந்த லோக் சபைத் தேர்தலில் வெற்றி பெற்ற ஜனதா கட்சியைப் பற்றி மகத்தான எதிர்கால பலாபலன்களைச் சொல்லாமல் இந்த வெட்கமற்ற ஜோதிடர்களால் சும்மா இருக்க முடியவில்லை.

"ஜனதா சர்க்கார் மேலும் அமோகமாக உறுதிநிலை பெற்று நாட்டை முன்னேற்றி மக்கள் நலனை முழுமையாக்குவதுவுமன்றி உலகம் காணாத புகழுக்கும் உரியதாகும்" என்றெல்லாம் தவளைக் கூச்சலிட இவர்கள் தவறவே இல்லை; ஆனால், இவர்கள் கூறியது அனைத்தும் பொய்யாகி ஜனதா சர்க்கார் குறைப்பிரசவமாகிப் போனதை உலகமே கண்டது என்று நான் நாட்டு மக்களுக்கு நினைப்பூட்டுகிறேன்.

தேச நலன் கருதாது வயிற்று பசியை உழைக்காது உண்டு தீர்க்கும் ஓபாரராசான், ஜைமினி, வராகமிகிரன் போன்ற அரைகுறை வான சாத்திரக்காரர்கள், இதை சமணர் காலத்தினிலேயே 'சத்தமும் சோதிடமுமென்றா இவை பிதற்றுப் பித்தரில் பேதையாரில்' எனக் கண்டிக்கப்பட்டிருக்கிறது. 'எங்கேயோ வானத்தில் இருக்கும் ஒரு கிரகம் ஒரு மனிதன் மீது ஆட்சி செய்கிறது என்பதறிவீனம் என்று சேக்ஸ்பியர் ஜோதிடத்தைக் கண்டித்திருப்பதாகவும் கேள்விப் படுகிறேன்.

இறுதியாக நான் சொல்வதிது "சதாப் ஹி சர்தேக பதேசு வஸ்துசு பிரமாண மந்தஃகரண பிரவிர்த்தியே" - சத்தியசீலனுக்குச் சமுசயமுண்டானால் அவனுடைய உள்ளம் சொல்லுவதே அறம் என்கிறபடி ஜோதிடம் சுதந்திர மக்களின் அறிவுக்கு மாட்டப்பட்ட விலங்கு எனச் சொல்லி முடிக்கிறேன்.

■

- எங்கு சுதந்திரம் இருக்கிறதோ அங்கு தர்மம் இருக்க வேண்டும். அப்படி இல்லை என்றால், சுதந்திரத்தின் தரம் குறைந்து விடும்.

  காசு தேடும் நூல்களுக்கு மட்டும் ஒரு மொழி இடம் தருமானால், அம்மொழி மாசு படிந்து விட்டதாகும்.

  – வெ

- மதம், நம்மை கை விட்டாலும் ஒழுக்கம் நம்மை ஒன்று சேர்த்து வாழவைக்கும்.

  – ஸ்ரீ கண்டய்யா

- தெளிவில்லாத ஞானம் இருமடங்கு மூர்க்கத்தனமானது.

  – சம்பாஜோசி

23

# கோள்களும் நாள்களும்

சுருங்கச் சொன்னால் நான் ஒரு வான சாஸ்திரியல்ல; ஒரு ஜோதிடனுமல்ல. ஆயினும் நான் இங்கு இந்தக் கோள்களைப் பற்றியும் நாள்களைப் பற்றியும் எழுதித் தீரவேண்டிய வனாயிருக்கிறேன். வெறும் புத்தகங்களைப் படித்து வயிற்றுப் பாட்டிற்காக மக்கள் வாழ்க்கையை நாசமாக்கும் இதைத் தற்குறி ஜோதிடர்களை விட நான் மங்கள பிமானியாகக் காரண காரியங்களைச் சீர்தூக்கி நல்லது கெட்டது கண்டு உண்மையை உரைக்கும் பழக்கத்தை மேற்கொண்டொழுகுபவனாயுள்ளேன். எனவே படித்த நூல்களில் சிந்தித்து செப்பஞ்செய்த கருத்துகளை எனக்குத் தெரிந்த அளவில் கூற என்னை யாரும் தடுக்க முடியாது. நாட்டு மக்களுக்கு நான் செய்து தீரவேண்டிய ஒரு இன்றியமையாத கடமைப்பாடு இது.

நான் பிறந்து அறிவு தோன்றத் தொடங்கிய ஐந்தாம் ஆண்டிலிருந்து காணாத பஞ்சம் (1987) பிரபவ ஆண்டு தொடங்கிய சித்திரை முதல் தேதியிலிருந்து காண முடிகிறது. ஆனால் இந்தப் பிரபவ ஆண்டு பஞ்சாங்கத்தில் 'ஆதிபத்தியபலன்' இப்படியிருக்கிறது. அதிக மழை, சஸ்யதான்யாதிகள் அபிவிருத்தி, பசும் பால் பாக்கியங்கள் அபிவிருத்தியும், கோதுமை, நெல், மொச்சை, துவரை, பயிறு, உழுந்து, கடலை, எள்ளு, கொள்ளு அபிவிருத்தியாவதுடன் பின்பகுதியில் விலை சகாயமாகவும் அமையும்.

பருத்தி, வெண்பட்டு, பீதாம்பரம், ஜரிகை இழைகள், மஸ்லின் துணி வகைகள் அபிவிருத்தியும், எண்ணெய் வித்துக்கள் செழிப்படைதலும், புளி பால், தயிர், வெண்ணெய், தேங்காய், கரும்பு அபிவிருத்தியும் விலை ஸரசமும் உண்டாகும், என்று கோடங்கிப் பேச்சுகள் போல் சுபீட்சத்துக்குரிய சொற்கள் சரளமாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் குடிநீரின்றி மக்கள் குலைகாயும் நேரத்தில் ஆரியப் பஞ்சாங்கம் குருடனுக்குத் திருடன் செப்பும் தெளிவுரை போல் பொய்ச் சொற்களை ஏன் அடுக்கிக் கொண்டு ஆர்ப்பரிக்கிறது. ஒன்றாவது இதில் உண்மையுண்டா? தமிழ் மக்களே கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள். இந்தப் பஞ்சாங்கம் எழுதினவனை என்ன செய்தாலும் நம்மைப் பாவம் பற்றாது என்று தோன்றுகிறது.

சகுனியின் கையிலுள்ள சொக்கட்டான் காய்களை போன்று இந்தக் கோள்களும் நாள்களும் கௌடல்ய சந்ததிகளின் கையில் கிடைத்துள்ளதென கூறின் தவறேயாகாது.

நான் என்னை ஒரு கவிஞனென்றோ எழுத்தாளனென்றோ சொல்லிக் கொள்ள அசத்தனாவிருக்கிறேன். எனினும் உள்ளக் கொதிப்பு இப்படி வெண்பாவாக வடிக்க வேண்டியுள்ளது :

"அஞ்ஞானம் பற்றா தருமைக் குறள்தமிழில்
விஞ்ஞானம் பற்றி விளைந்திருந்தும் – இஞ்ஞான்றும்
கஞ்சாவும் கள்ளும் காவுமெனப் பஞ்சாங்கம்
மிஞ்சாமற் கொள்ளும் மெலித்து".

எனப் பாடச் செய்கிறது. ஆம் இந்தப் பஞ்சாங்கம் எள்ளளவு

சத்தியத்தையும் தன்னுள் வைத்துக் கொண்டிருக்கவில்லை. பஞ்சாங்கம் பகர்வதனைத்தும் சுத்த சுத்தமான பச்சைப் பொய்கள் என்பதற்கு என்னிடம் தக்க சான்றுகள் உள்ளன.

'சாத்திரம் பொய்யென்றால் கிரகணத்தைப் பார்' என்ற ஒரு பழமொழி மட்டும் பஞ்சாங்கம் பகர்வது மெய்யென்று கொள்ளப் போதுமானதல்ல; சித்திரை மாதத்துக்குப் பின்னால் வருவது வைகாசி மாதம் எனச் சொல்வது சாத்திரமாகாது. நாளைக் கொண்டும் கோளைக் கொண்டும் வானத்தில் நிகழும் மாற்றங்களை மட்டும் சொல்லக் கூடுமன்றி அதை மனிதனோடு இணைத்து முடி போடல் மகா பாதகம் என்று நான் சொல்லக் கடமைப்பட்டுள்ளேன்.

சாணக்கியனது காலம் கி.மு. 4ம் நூற்றாண்டு எனப்படுகிறது. சாணக்கியன் செய்த அர்த்தசாஸ்திரம் காலத்தைப் பற்றிய அளவுப் பெயர்கள் உள்ளவிதம் இது. த்ருடி, லவ, நிமிச, காங்டா, கலா, நாழிகை, முகூர்த்தம், காலை, மாலை, பகல், இரவு, பக்சம், மாதம், ருது, அயனம், வருடம், யுகம் மேலும் கொஞ்சம் விவரம்.

நிமிசத்தின் நாளில் ஒரு பாகம் த்ருடி, இரண்டு த்ருடி ஒரு லவ இரண்டு லவ ஒரு நிமிசம், ஐந்து நிமிசம் ஒரு காஸ்டா, முப்பது காஸ்டா ஒரு கலா, நாற்பது கலா ஒரு நாழிகை.

இவற்றில் நாம் கவனிக்க வேண்டியது கிழமைகள் இருக்கவில்லை; கிழமைகளுக்குப் பெயர்களும் இடப்படாததைக் காண்கிறோம்.ஏழு நாள் ஒரு வாரம் என்ற விபரமும் கிடையாது. ஒரு நாளுக்கு இருபத்தி நான்குமணி நேரம் என்பதுவுமில்லை. இதுவுமன்றி அந்தக் காலத்தில் சந்திரனைக்கொண்டு மாதத்தையும், அயனத்தைக் கொண்டு வருடத்தையும் நிர்ணயிக்க வேண்டியிருந்தது. சந்திரனைக்கொண்டு வருடத்தை அளந்தால் 354 ( = 295 x 12) நாட்களே அடங்குவதாயிருந்தன. இந்தக் குறைபாட்டை 30 மாதங்களுக்கு ஒருமாதத்தை 13 மாதங்களுள்ள வருடமாக்கி குறையை நிறைவுசெய்து கொண்டு வர நேரிட்டது. எதற்காக இதைச் சொல்ல நேரிட்டது எனின் சாணக்யன் காலம் வரையிலும் சந்திரன் சூரியன் தவிர, செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி எனும் கிரகங்கள் இருப்பது இவர்கள் அறியவில்லை. எனவே

ஜோதிட சாத்திரம் என்ற பயங்கரமான பீடையும், பஞ்சாங்கம் என்ற மகா பயங்கரமான பிணியும் நாட்டில் இருக்கவில்லை என்பது நிருபணம் செய்து கொள்வதற்காகவேதான்

கிரகங்களே இன்னும் இல்லை என்று ஆகும்போது இருபத்தியேழு நச்சத்திரங்களும் இருந்திருக்காது. அமிர்த யோகம், சித்தயோகம், மரணயோகம், கரிநாள், தனநாள்-இவைகளெல்லாம் கூடச் சாணக்யன் காலத்தில் இருக்கவே இல்லை. மேச, ரிசப ராசிகளும் இல்லவே இல்லை என்றும் நாம் சொல்லலாம். பிரபவ விபவ, சுக்கில என்று வருடங்களுக்குப் பெயர்களும் சூட்டப் பட்டிருக்காது என்றும் கூட நாம் நிச்சயம் செய்து கொள்ளலாம். எனினும் அமாவாசையிலிருந்து, பிரதமை, துதியை, திரிதியை எனும் திதிகள் மட்டும் இருந்தன. இந்தத் திதிகளில் எதேதோ நல்லது கெட்டது அடங்கியிருப்பதாக இன்று மக்கள் பொய் நம்பிக்கை வைத்துக் கொண்டுள்ளனர். இது அறியாமையின் பாற்பட்டது. இந்தத் திதிகளின் பொருள் அமாவாசை, அல்லது பௌர்ணமி கழிந்த முதல் நாள், இரண்டாம் நாள், மூன்றாம் நாள், நான்காம் நாள் என்பதை தவிர்த்து வேறெதுவுமில்லை. சந்திரன், சூரியன் தவிர வேறு கிரகங்கள் இல்லாதபோது நவகிரகங்கள் பித்தலாட்டமும் இல்லை என்ற கூறலாம்.

பெயரிடப்படாத நாள்களில், திதிகள் எண்ணின் பெயர்களா யிருக்கையில் நட்சத்திரம், யோகம் கரணம் என்று மூன்றும் கூட்டிப் பஞ்சாங்கம் எனப் பெயர் சூட்டி நம்மை இந்து மதத்தினர் என்று பெயரிட்டு மந்தையாக்கித் தம் மனம் போல் ஆளச் செய்ய பின்னிய சூழ்ச்சி வலைகளில் இதுவும் ஒன்று என்று கொஞ்சம் குறிப்பிடுகிறேன்.


கி.மு. எட்டாம் நூற்றாண்டில் பாபிலோனியாவில் இருந்த காஸ்பீயன் எனும் வான சாஸ்திரிதான் ஏழு நாட்கள் கொண்ட வாரத்தையும், இருபத்திநான்கு மணிக் கூறுகள் கொண்ட தினத்தையும் சிந்தித்து வெளிப்படுத்திய முதல் மனிதன். பட்சார்த்தம் 7 ( = 14 / 2 ) தினங்கள் ஆகியிருந்த காரணத்தால் ஆகாசத்திலிருந்த ஏழு ஒளி கிரகங்கள் வெகு பொருத்தமாகவே அமைந்து போயிற்று.

ஸ்திர நட்சத்திரங்களினிடையே புதன், சுக்கிரன், செவ்வாய், வியாழன், சனி எனும் ஐந்து கிரகங்களும் சூரியன், சந்திரன் எனும் இரண்டு வான விளக்குகளில் பூமியை வியப்புறுத்திக் கொண்டிருக்கும் காட்சியை காஸ்டீபன் ஊன்றி ஆராய்ந்துணர்ந்தார். இந்த ஏழு ஒளிகளின் பெயர்களையும் தாங்கி இனி வழங்கும் சூரிய உதயத்திலிருந்து பகலும், பகல் கழிந்து வரும் இரவும் சேர்ந்தது ஒரு நாளெனவும், காலமாகிய நாள் ஒளிகளின் பெயர் தாங்கி வருவதனால் அவை தெய்வீகமெனவும் அவர் நம்பினார். காலம் அனைத்துக்கும் காரணமாக உள்ளது எனக் கண்ட அவர் காலத்தை தெய்வமாக - அதீத சக்தியுடையதாக நினைத்ததில் தவறு கிடையாது. காலம் வெகு அருமையானது. வீண் செய்யக் கூடாதது. திருப்பிப் பெற முடியாதது. மனிதனின் எல்லாவிதமான சாதனை களுக்கும் ஆதாரமானது. எனவே, சரியான முறையில் ஒவ்வொரு மனிதனும் அதன் அருமையறிந்து பயன்படுத்தி மகான்களாக வாழ வேண்டி நாட்களை வரிசைக்கிரமம் - அதாவது பூமிக்கும் அந்த வானொளிகளுக்கும் உள்ள தூரமறிந்து பெயர் சூட்டிய விதம் நமக்கு வியப்பையூட்ட வல்லதாயுள்ளது.

தான் வசிக்கும் ஊருக்கருகிலிருந்த உயர்ந்த ஒரு மலைச் சிகரத்திலிருந்துகொண்டு ஒவ்வொரு நாளும் இரவு நேரங்களில் வானத்தைக் கூர்ந்து பார்த்துக் கிரகங்களின் இயக்க நிலைகளை ஆராய்ந்து கணக்கிட்டார். பூமியானது தன்னைத் தானே சுற்றிக் கொண்டு சூரியனைச் சுற்றி வர 365 நாட்கள் - 1 வருடம் ஆவது போலவே, பூமிக்கும் மற்ற கிரகங்களுக்கும் உள்ள தூரத்தை அவர் துல்லியமாகக் கணக்கிட்டுக் கண்டறிந்தார். அவருடைய கணிப்பு இது.

| | | |
|---|---|---|
| 29.5 வருடங்கள் | - | சனி |
| 11.86 வருடங்கள் | - | வியாழன் |
| 1.88 வருடங்கள் | - | செவ்வாய் |
| 1. வருடம் | - | சூரியன் |
| 0.62 வருடம் | - | சுக்கிரன் |
| 0.24 வருடம் | - | புதன் |
| 0.07 வருடம் | - | சந்திரன் |

கால்டீபன், சூரியனை மையப்படுத்தி முதன்முதல் ஞாயிற்றுக் குரிமையாக்கினார். எனவே அது ஞாயிற்றுக்கிழமை எனும் பெயர் பெற்றது. பகலுக்குரியது ஞாயிறெனில் பகலோடு சேர்ந்த இரவுக்குரியது சந்திரன். சந்திரன், பூமிக்கு மிகவும் அருகிலிருப்பவன். ஆதலால் ஞாயிற்றுக்கிழமைக் அடுத்த கிழமை சந்திரனுக்கு உரிமை செய்யப்பட்டது. அது திங்கட்கிழமையெனப் பெயர் பெற்றது. சூரியனுக்கு கால அளவில் குறைவான மூன்றில் மிகவும் குறைந்தவனான சந்திரனைக் கவனித்து இரண்டாவது நாளுக்கு உரிமையானவனானார். கால்டீபன் அதற்குப் பிறகு ஏறு முகமாகவுள்ள மூன்று கிரகங்களில் குறைந்த கால அளவினைக் கொண்ட செவ்வாய்க் கிரகத்தை மூன்றாம் நாளாக திங்கட் கிழமைக்கு அடுத்து வைத்தார். நான்காவது நாளை இறங்கு வரிசையில் உள்ள புதனுக்கு உரிமை செய்தார். அதற்கு அடுத்து ஏறு வரிசை வியாழன் ஐந்தாவது நாளுக்கு உரிமையாளனானார். அதே வரிசையில் இருக்கும் ஆறாவது சுக்கிரன் (வெள்ளி) உரிமையாளனானதனால் வெள்ளிக்கிழமை எனப் பெயர் பெற்றது. கடைசியில் பூமிக்கு நெடும் தொலைவிலுள்ளது சனி. கடைசி நாள் சனிக்கிழமையெனப் பெயர் பெற்றது. இதே முறையை, கால்டீபன் ஒரு சக்கர வடம் போட்டு விளக்கியிருப்பதை நாம் தெரிந்து கொள்வதும் நல்லதே.




எனவே வாரத்தில் அடங்கியுள்ள நாட்களின் பெயர்கள் அனைத்தும் ஒரு மனிதனின் கற்பனை வானத்திலுள்ள இந்தக்

கிரகங்களுக்கும் நாட்களுக்கும் எந்த ஒரு தெய்வீகச் சம்பந்தமுமில்லை. சூரியன் உதித்துப் பகலாக்குகிறான். சந்திரன் இரவில் வானில் தோன்றும் போது நிலவு காணுகிறது. எல்லா மக்களும் பொதுவாக இவற்றை அனுபவிக்கிறார்கள். தனித்னியாகச் சோதிடர்கள் சொல்வதுபோல் இந்தக் கிரகங்களோ நாட்களோ யாரையும் எதுவும் செய்வதில்லை. மக்கள் வாழ்க்கைக்கும், நாள் கோள்களுக்கும் உள்ள தொடர்பு பொதுவானது. நல்ல நேரமும் கிடையாது. நல்ல நாளும் கிடையாது. அதுபோன்றே கெட்ட நேரமும் கெட்ட நாளும் கிடையாது என்பது இதிலிருந்து நாம் தெளிவாக அறிந்து கொள்ள முடிகிறது.

மக்களின் பல்வேறு அலுவல்களின் நிமித்தம் கொடுக்கல், வாங்கல், உழைத்தல், ஓய்தல், உண்ணல், உறங்கல் முதலிய அனைத்துச் செயல்பாடுகளுக்கும் அவசியம் வேண்டிய காலக் குறிப்புகளுக்க நாள், வாரம், மாதம், வருடங்கள் தேவை மட்டுமேயன்றி மக்களை, ஆளும் உரிமை இந்த நாட்கள் கோட்களுக்கு இருக்கவே இல்லை. உள்ளம் சுத்தமில்லாத, உழைத்துண்ண உளங்கொளாத இந்தச் சுரவர்கத்தினரில் பராசரன், ஜைமிலி, வராகமிகிலர் போன்றவர்கள் பஞ்சாங்கமென்ற படுபாதகம் மக்களை அநியாயமாக இதனாலும் அடிமை கொண்டனர் என்று என்னைச் சொல்லவே வைத்துவிட்டனர்.

என்னுடைய சொற்களைக் கேட்க விரும்பிய நண்பனே உண்மையை அறவே ஒளித்து வைத்துவிட்ட ஒரே காரணத்தால் நாடு இன்றும் படும் அலங்கோலத்தை நாம் நேரில் காணலாம். உண்மையைப் பின்பற்றி நாடும் மக்களும் ஒழுகும் போதன்றி உயர்வடையாது.

சிந்தித்துப்பார் அமிர்தயோகம், சித்தயோகம், மரண யோகம், புத பகவான், சனி பகவான், சூரிய பகவான், ராகு காலம், கரி நாள், தனி நாள், குருட்டு நாள் எத்தனை பொய்களை எளிய மக்கள் மேல் சுமத்தி நாசபடுத்தி வைத்துள்ளனர், வருகின்றனர் என்பதைப் பற்றி எண்ணி சரியான முடிவுக்கு வா.

எளிய மக்களுக்கு என்ன வந்தது? இன்று, நம் நாட்டில் உள்ள வக்கீல்கள், டாக்டர்கள், விஞ்ஞானிகள், இஞ்சினியர்கள்,

பேராசிரியர்கள், மற்றுமுள்ள மந்திரி பிரதானிகள் அனைவருமே இந்த நாள் கோள் எனும் பொய் வலையில் மாட்டிக் கொண்டு படும் அவத்தைக்கு அளவே கிடையாது. அதனால்தான் அறிஞர் பலர் இந்தப் பித்தலாட்டத்தை அந்தக் காலத்திலிருந்தே எதிர்த்து வந்துள்ளனர்.

கர்நாடக தேசத்தில் அண்மைக் காலத்தில் வாழ்ந்த பசுவேசுவரார் என்பவர் கூறினார்; "நாளின் பெயருக்கும் மனிதனின் நல்லது கெட்டதற்கும் இடையில் எந்தச் சம்பந்தமும் கிடையாது.

ஒரு நாளில் உள்ள நாழிகைக்கும், நிர்ணயம் செய்து கொண்டுள்ள நல்ல காரியங்களின் வெற்றி தோல்விகளுக்கும் எந்தச் சம்பந்தமும் கிடையாது.

வருடத்தின் பெயருக்கும், அந்த வருடத்தில் உண்டாகும் பலா பலன்களுக்கும் இடையில் எந்தச் சம்பந்தமும் கிடையாது'' என்று.

ஆனதனால் நல்ல உள்ளமுடைய ஒரு மனிதனுக்கு ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு நாழிகையும் நல்லதாகவே உள்ளது. கெட்ட நேரம் என்ற ஒன்று கிடையவே கிடையாது. நாளிலும், நாழிகையிலும் தெய்வீக சக்தி உள்ளது என்று மக்களை நம்ப வைத்தவர்கள், ஜோதிடர்கள் என்று பேர்வைத்துக் கொண்டு மக்களை ஏமாற்றி வயிறு வளர்ப்பவர்கள், திருடர்கள் என்று நான் கூறினால் அதை மறுத்துக் கூற ஒருவனும் முன்வர மாட்டான்.

நாட்டுப்பற்றும், மனிதாபிமானமும் கடுகளவுமில்லாது தம்மை பிரம்மாவின் சிரசிலிருந்து பிறந்தவர்கள் என்று சொல்லிக் கொண்டிருந்த ஒரு சூழ்ச்சிக்காரக் கூட்டம் இன்றும் நாட்டை நாசப்படுத்தும் அதே போக்கில்தான் சென்று கொண்டுள்ளது. ஆயினும் என்ன? சத்தியம் வென்று தீரவே வேண்டும் என்று நாம் உண்மைகளை மேலும் தேடித் தீர வேண்டும்.

■

❖ 'சாதியில்', நான் பிராமணன் என்பவன் வேதத்தையே விரோதித்தவனாகிறான்.

– வெ.

# மதங்கள்

உலகில் உள்ள எல்லா மதங்களும் மனிதனை அவனிடமிருந்து திசை திருப்பி விடுவதாக உள்ளன. அவைகள் சொல்லுகின்றன, “கடவுளைப் பிரார்த்தியுங்கள், கடவுளை நம்புங்கள், அவர் எல்லாவற்றையும் பார்த்துக் கொள்வார்” என்று. ஆனால் நமக்குத் தெரிகிறது இந்த ஆயிரக்கணக்கான வருடங்களாக உலகைப் பற்றி யாரும் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. கடவுள் எல்லா வற்றையும் கவனித்துக் கொள்கிறார் என்றால் செங்திஸ்கான், தைமூர், நாதிர்ஷா, ஹிட்லர், ஸ்டாலின், ரீகன் போன்றோர் தேவையே இல்லையே. கடவுள் கவனித்துக் கொண்டிருந்தால் ஒரு ஹிரோஷிமா, ஒரு நாகசாகிகளின் அழிவு ஏற்பட்டிருக்காது. இந்த மூவாயிரம் ஆண்டுகளில் மனிதன் ஐயாயிரம் சண்டைகளை உருவாக்கியிருக்கிறான். ஆகவே உலகை யாரும் நிச்சயமாக கவனிக்கவில்லை.

எல்லாவிதமான வியாதிகளும் வளர்ந்துகொண்டே போகின்றன. புற்றுநோய், எய்ட்ஸ் வந்துவிட்டது. கோடிக் கணக்கான மக்கள் இத்தகைய நோய்களால் சிதைந்து போயிருக்கிறார்கள். இதைப்பற்றி கடவுளுக்கோ, மதத்தினருக்கோ எந்தவிதமான கவலையும் இருப்பதாகத் தெரியவில்லை.

சமூக அமைப்பு மனிதனை எல்லாவிதத்திலும் அழிப்பன வாகவே அமைந்துள்ளது. அவனை அது ஒரு இயந்திரமாக மாற்றி விடுகிறது. நமது அனைத்து கல்விக்கூடங்களும் மனிதனின் இயல்பை மிக வேகமாக அழிக்கின்ற ஒரு தொழிற் சாலையாக உள்ளது. அவை தீக்கதிரை நட்டமடையச் செய்கின்றன, ஆத்மாவை கொன்று விடுகின்றன. மனிதனை இயந்திரமாக மாற்றி விடுகின்றன. பிறகு மனிதனைப் பற்றிய கவலையை விட்டு விடுகிறது.

நன்றி : ஓசோ டைம்ஸ், ரஜினீஸ் பவுண்டேஷன்

# தேசப்பிதாவின் வேதங்களைப் பற்றிய சீரிய சிந்தனைகள்

எவ்வளவுதான் சிறந்ததாயினும் அறிவுக்கும் (கவனிக்க) ஒழுக்கத்திற்கும் பொருந்தாத எந்த விளக்கத்தையும் நான் ஏற்றுக்கொள்ள இயலாது.

வேதங்களின் தனிப்பட்ட தெய்வீகத்தன்மையை நான் நம்பவில்லை. பைபிள், குரான், செந்த் அவஸ்தா ஆகிய புனித நூல்களும் வேதத்தைப் போலவே ஆன்மீகத் தொடர்புடையவை என்று நான் கருதுகிறேன்.

இன்றைய சாஸ்திரிகளும், சங்கராச்சாரியார்களும் அவர்கள் எவ்வளவுதான் அந்த நூல்களில் ஆழமான புலமை பெற்றிருப்பினும் இந்து மதத்தின் புனித நூல்களைப் பற்றி மிகவும் துல்லியமான விளக்கம் கொடுப்பதாகக் கூறினால், அதை நான் கடுமையாக மறுக்கிறேன். இதற்கு மாறாக இந்தப் புனித நூல்கள் பற்றிய நம்முடைய அறிவு பெரும்பாலும் குழப்பமான நிலையில் உள்ளது என்பதை நான் நம்புகிறேன். ஏனெனில் அஹிம்சையிலும், சத்தியத்திலும், பிரம்மச்சாரியத்திலும் எவன் முழுவெற்றி அடைகிறானோ, பொன்னாசை, மண்ணாசை ஆகியவற்றை எவன் முழுவதுமாக துறக்கிறானோ அவன்தான் சாத்திரங்களைப் பரிபூரணமாக உணர்ந்து கொள்ள முடியும், என்னும் முதுமொழியை நான் உறுதியாக நம்புகிறேன்.

குரு, சிஷ்ய பாரம்பரியத்தில் எனக்கு நம்பிக்கை உண்டு. ஆனாலும் இந்தக் காலத்தில் லட்சக்கணக் கானவர்களுக்குத் தனித்தனியாக குரு இருக்க முடியாது. ஏனெனில், ஆழ்ந்த அறிவுத் தாகத்தையும் பரிபூரணத் தூய்மையினையும் ஒருசேரக் காண முடியாது. குறிப்பிட்ட ஒரு மதத்தினுடைய உண்மையினை முழுவதுமாகத் தெரிந்து கொள்ள வில்லையே என்று யாரும் கவலைப்பட வேண்டிய தில்லை. ஏனைய பெரிய மதங்களைப் போலவே இந்து மதத்தின் அடிப்படை கொள்கைகளும் என்றும் மாறாதவை.

கோயில்களில் நடக்கும் குறைபாடுகளை நான் அறிவேன். சொல்லொணாத குறைபாடுகள் பல இருந்தபோதிலும் அவற்றை நான் நேசிக்கிறேன். முழுக்க முழுக்க நான் சீர்திருத்தவாதியே. ஆயினும் என் சீர்திருத்த உணர்வு இந்து தர்மத்தின் மிகச்சிறந்த குறிக்கோள்களைப் புறக்கணிக்கவில்லை. விக்கிரக ஆராதனையை நான் மறுக்கவில்லை. எனினும் விக்கிரகமானது என்னுள் எந்தவிதமான வழிபாட்டு உணர்ச்சியினையும் எழுப்பவில்லை.

நேஷனல் புக் டிரஸ்ட்டின், “எது இந்து மதம்” என்ற நூலிலிருந்து தமிழில் முனைவர், பழனி அரங்கசாமி.

நன்றி : மஞ்சரி

# பிரார்த்தனைகளால் பலன் இருக்கிறதா ?

*பிரார்த்தனைகளால் பலன் இல்லை என்கிறது ஜான் பெம்ப்ள் : பெலின் ஃபௌன்டேஷன்*

*11 கோடி ரூபாய் செலவிட்டுச் செய்த ஆராய்ச்சி மூலம் தெரியவந்துள்ள இந்த முடிவு, தெய்வ நம்பிக்கை உள்ளவர்களை கொஞ்சம் தடுமாறச் செய்யும். குருமார்களையும் சாமியார் களையும் ஏதாவது சமாதானம் சொல்லித் தப்பிக்க வைக்கும்.*

*பிரார்த்தனைகளின் உதவியால் நோய் நீங்குமா, நிவாரணம் கிடைக்குமா ? சாகக் கிடப்பவர்கள் பிழைத்துக் கொள்வார்களா? என்பதைக் கண்டுபிடிக்க மிகப்பெரிய அளவில் 3 வருடங்கள் தொடர்ந்து ஆராய்ச்சி செய்து மேற்கூறிய முடிவை அடைந்துள்ளது.*

*1800 பைபாஸ் சர்ஜரி நோயாளிகளுக்கு இரண்டு கிறித்துவ சர்ச் குழுக்கள் 2 வாரங்கள் தொடர்ந்து பிரார்த்தனை நடத்தியது. ஒவ்வொரு நோயாளிக்கும் தனித்தனியாக 2 வார பிரார்த்தனை மேற்கொள்ளப்பட்டது. நோயாளிகள் அறுவைச் சிகிச்சைக்கு உட்படும் முன்னரும், பின்னரும் பிரார்த்தனைகள் மேற்கொள்ளப்பட்டன.*

*முடிவு :-*

*பிரார்த்தனை செய்யப்பட்டவர்களிலும், செய்யப்படாதவர் களிலும் எந்தவிதப் பெருத்த வேறுபாடுகள் காணப்படவில்லை. பிரார்த்தனை வழங்கப்பட்டவர்கள் எந்த விதத்திலும் வழங்கப் படாதவர்களிலிருந்து பெரிய முன்னேற்றத்தை அடையவில்லை.*

*இதில் அதிர்ச்சிமிக்க செய்தி என்னவென்றால், தனக்கு பிரார்த்தனை செய்யப்படுகிறது என்று அறிவிக்கப்பட்ட நோயாளிகள் முன்னேற்றத்திற்குப் பதிலாக மோசமாகத்தான் போனார்கள்.*

*இத்தனைபேர் கூடி நமக்கு பிரார்த்தனை செய்யப் போகிறார்களே! நமது நோயின் தீவிரம் அதிகமோ! என்ற கவலையிலேயே அதிக டென்சன் ஆகி அதிகப் பாதிப்புக்கு உள்ளாகி விட்டார்களாம்.*

**நன்றி : மஞ்சரி, டிசம்பர்**



புரட்சிக் கவிஞராய்ப் புறப்பட்ட வெள்ளியங்காட்டான் அவர்களின் இன்னொரு பரிமாணம் இந்த நூல். மதப் போர்வை போர்த்துக் கொண்டு உலவும் பல புராதனச் சொற்களுக்கு, மதச் சார்பற்ற, கடவுள் சார்பற்ற, புதிய விளக்கங்களை, உண்மையான தத்துவ விளக்கங்களை, கவிஞர் தமது வடமொழிச் சாத்திரப் புலமைகொண்டு இந்நூலில் விளக்கியிருக்கிறார்.

பலப்பல சமயத் தொடர்களுக்கு மெய்விளக்கம் தருவதற்கு, ஏராளமான உபநிடதங்களையும், சமய சாத்திரங்களையும், தமிழ் நூல்களையும் ஆதாரமாகக் கொண்டு மேற்கோள் காட்டுகிறார். 'சோதிடம் சுதந்திர மக்களுக்கு மாட்டப்பட்ட விலங்கு' என்பது கவிஞரின் தெளிவான முடிவு.

கவிஞர் புவியரசு

"கவிஞர் வெள்ளியங்காட்டானின் கருத்தியல் சிந்தனையின் மற்றொரு புதிய பரிமாணம் புது வெளிச்சம்.

கவிதை மொழியில் சமூகத்தின் சகல பிம்பங்களையும் விசாரணைக்கு உட்படுத்தியவர். கட்டுரையின் ஊடே கனத்த உள்ளீடுகளால் கவனப்படுத்துகிறார்.

இந்நூல் இறையியல் சார்ந்த கருத்துருவாக்கமல்ல... வாழ்வியலின் இயல்பு நெறியியல் சார்ந்த அறிவுத் தேடல்".

தங்க. முருகேசன்